உ

கடவுள் துணை

# சர்வ சமய
# சமரசக் கீர்த்தனைகள்

இவை

மாயூரம் முன்சீப்

## ச. வேதநாயகம் பிள்ளை

அவர்கள் இயற்றியது.

ப. குப்புசாமி முதலியாரவர்களால்

பதிப்பித்த பிரதிக்கிணங்க,

சென்னை:

திருமகள்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1939. [அணா 12.

## சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளின்

# பிரிவுகள்


| விவரம் | கீர்த்தனைகளி னிலக்கம் |
|---|---|
| தேவதோத்திரக் கீர்த்தனைகள் | 1-முதல் 133-வரை |
| ஈசுவர வருட பஞ்சத்தைப்பற்றி | 139 |
| இதோபதேசக் கீர்த்தனைகள் | 140-முதல் 161-வரை |
| உத்தியோக சம்பந்த கீர்த்தனைகள் | 162-முதல் 175-வரை |
| குடும்ப சம்பந்த கீர்த்தனைகள் | 176-முதல் 192-வரை |


## ஹிதோபதேசக் கீர்த்தனைகளின் விவரம்


| விவரம் | கீர்த்தனைகளி னிலக்கம் |
|---|---|
| கடவுளை தியானிக்கும்படி வற்புறுத்தல் | 140-141-142 |
| துர்க்குணங்களை வெளியிடல் | 143 |
| மனமயக்கம் தவிர்த்தல் | 144 |
| நற்புத்தி கூறல் | 145 |
| நித்தியானந்தந் தேடல் | 146 |
| கள்ள ஞானம் | 147 |
| பொருளாசை யொழித்தல் | 148 |
| செல்வச் செருக்கு | 149 |
| உலகவாழ்வை வெறுத்தல் | 150 |
| உடலை வெறுத்தல் | 151 |
| பண தூஷணை | 152 |
| பரஸ்திரீகமனம் விலக்கல் | 153-154-155 |
| உய்யும் வழி | 156 |
| நெஞ்சொடு பிணங்கல் | 157 |
| துர்க்குணம்போன்ற நற்குணங்கள் | 158 |
| மனவஞ்சகத்தைப்பற்றி | 159 |
| மன மயக்கம் | 160 |
| கால தூஷணை | 161 |

## உத்தியோக சம்பந்தக் கீர்த்தனைகளின் விவரம்


| விவரம் | கீர்த்தனைகளி னிலக்கம் |
| --- | --- |
| நியாயபரிபாலனம் செய்ய வரம்வேண்டல் | 162 |
| துர்வழக்காளிகளைப்பற்றி | 163 |
| உத்தியோக சங்கடம் | 164-165 |
| பெரிய துரையாகிய கடவுளுக்கும் மனுஷத் துரைகளுக்கும் உள்ள பேதம் | 166 |
| கோட்சொல்லும் உத்தியோகஸ்தர்களைப்பற் | 167 |
| சாமியைநினைக்க நேரமில்லை என்றமுறை [றி | 168 |
| உத்தியோகத்தை வெறுத்தல் | 169 |
| துன்பத்துக்கு அஞ்சாமை | 170 |
| பிறர்மேற் குறைகூறாமை | 171 |
| பரிதான கண்டனம் | 172-173-174 |
| பிரபுத்துவ தூஷணை | 175 |


## குடும்ப சம்பந்தக் கீர்த்தனைகளின் விவரம்


| விவரம் | கீர்த்தனைகளி னிலக்கம் |
| --- | --- |
| தாய்தந்தையரை நமஸ்கரித்தல் | 176 |
| தகப்பன் மகனுக்கு புத்தி கூறல் | 177 |
| தகப்பன் மகளுக்குப் புத்தி கூறல் | 178 |
| உத்தம ஸ்திரீயின் லக்ஷணம் | 179 |
| பெண் பார்க்கத் தூதனுப்புதல் | 180 |
| தூதன் பெண் பார்த்துவந்து சொல்லல் | 181 |
| தலைவியிடத்து வைக்கவேண்டிய நேசத்தைப்பற்றி தலைவன் கூறுதல் | 182 |
| தலைவனுடைய மேன்மையைத் தலைவி தோழிக்குக் கூறுதல் | 183 |
| துன்பஞ்செய்தாலுந் தலைவனே கதியென்று தலைவி தோழிக்குச் சொல்லுவது | 184 |
| தலைவன்செய்த நன்மையை தலைவி கூறல் | 185 |
| மாமி நாத்தி முதலானவர்களின் கொடுமையைப்பற்றி ஒரு ஸ்திரீ முறையிடுதல் | 186 |
| கணவனை பகைத்த ஸ்திரீயை அவள் தாய் கண்டித்தல் | 187 |
| தங்களுக்குப் படிப்பிக்கும்படி ஸ்திரீகள் புருஷர்களை வேண்டுதல் | 188-189 |
| மூடனை விவாகஞ் செய்யாதபடி ஒரு ஸ்திரீயைத் தடுத்தல | 190 |
| மைத்துனர் கலியாணத்தில் பாடிய பரிகாச கீர்த்தனைகள் | 191 |
| மைத்துனருக்குப் புத்தி போதித்தல் | 192 |

# கீர்த்தனைகளின் அகராதி


| கீர்த்தனைகளின் ஆதி | பாட்டிலக்கம் | பக்கம் | கீர்த்தனைகளின் ஆதி | பாட்டிலக்கம் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| அடித்தாலும் | 184 | 1·5 | ஈசனே மலநாசனே | 35 | 33 |
| அநுதினம்இந்தப் | 157 | 138 | ஈசா நின் | 26 | 25 |
| அந்தப் பெரியதுரை | 166 | 147 | உடலை நம்பாதே | 151 | 130 |
| அபயம்நீ யருளுவாய் | 74 | 65 | உதவி செய்ய | 94 | 80 |
| அப்பா இதென்ன | 164 | 145 | உய்யும் வகை | 156 | 137 |
| அப்போ தனை | 37 | 34 | உற்றவரே எனை | 176 | 160 |
| அம்புயப் பதம் | 30 | 29 | உனக்கே நமஸ்காரம் | 137 | 113 |
| அருள் புரிவாயே | 10 | 9 | உனை நானே | 80 | 69 |
| ஆண்டருளே | 8 | 7 | உன்னிடத்திற் | 5 | 5 |
| ஆதரித்திட நல்ல | 49 | 44 | உன்னை எனக்குக்காட் | 84 | 72 |
| ஆதிபரம நாதஞான | 53 | 48 | உன்னைத்தவிர | 88 | 75 |
| ஆதிபரம நாதாநல்ல | 57 | 51 | உன்னை நம்பினேன் | 50 | 45 |
| ஆதிமூலனே | 133 | 110 | உன்னைப்போல் எனக் | 103 | 87 |
| ஆதியே பரஞ்சோதி | 27 | 26 | உன்னை மறவாமல் | 95 | 81 |
| ஆரண மயநய | 77 | 69 | ஊருக்கெல்லாம் | 186 | 178 |
| ஆர்வேணுமோ | 174 | 157 | எக்காலமும் | 1 | 1 |
| ஆளாயோ | 138 | 144 | எத்தனை கவி | 131 | 108 |
| ஆள்வாயெனதுள | 24 | 23 | எத்தனை யானாலும் | 185 | 176 |
| இந்த உத்தியோக | 169 | 151 | எந்த நாளிலும் | 167 | 149 |
| இந்த உபகார | 19 | 18 | எந்த விதமும் | 121 | 101 |
| இந்த நிமிஷமே | 18 | 17 | எநதையே வுனக்கும் | 136 | 112 |
| இந்தப் பிழைகளெல்லா | 16 | 14 | எப்படியும் பரமே | 83 | 75 |
| இந்த மனம் | 135 | 111 | எவளோ அவளே | 179 | 168 |
| இந்தவரந் தருவாய்ஸ்வாமி | 15 | 14 | எவ்வகையிலும் | 38 | 35 |
| இந்த வரந்தருவாய் | 54 | 49 | எனக்குக் காட்டிய | 42 | 38 |
| இந்த வழக்குக்கெல்லா | 163 | 144 | எனை ஆதரிப்பாயே | 3 | 3 |
| இந்தவேளை | 90 | 77 | என் பிழைகள் | 6 | 6 |
| இப்படிப்பட்ட நான் | 120 | 100 | என்ன சொன்னாலு | 101 | 86 |
| இரக்கஞ் செய்வாயே | 59 | 52 | என்ன வந்தாலும் | 170 | 152 |
| இவ்வளவுதான் | 48 | 43 | என்னைநீ ஆளுவாய் | 44 | 40 |
| இனியாகிலு மனமே | 142 | 118 | என்னை ஆளையா | 12 | 11 |
| இன்னமும் தாமதமேன் | 87 | 75 | ஏக நாதா | 124 | 103 |
| இன்னம் தாமதம் | 79 | 68 | ஏக பராபரனே | 55 | 50 |
| இன்னமும் என்மீது | 119 | 99 | ஏகா கனயோகா | 122 | 102 |
| இன்னம்தான் பராமுக | 127 | 106 | ஏகாதிபரனே | 67 | 60 |
| இன்னம் பராமுகம் | 61 | 54 | ஏதுக்கு வாங்குறீர் | 173 | 155 |
| இன்னம்பராமுகமாமே | 123 | 103 | ஏது பாராமுகம் | 76 | 66 |
| இன்னம் ஏதோ | 61 | 54 | ஏதோசோதனை | 75 | 65 |

| கீர்த்தனைகளின் ஆதி | பாட்டிலக்கம் | பக்கம் | கீர்த்தனைகளின் ஆதி | பாட்டிலக்கம் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| ஏழைக்கிரங்க | 45 | 41 | ஞானோதயவரம் | 132 | 109 |
| என் இன்னம் | 47 | 42 | தருணமீதையா | 97 | 82 |
| ஐயனே உயர் | 32 | 31 | தருணம் தருணம் | 86 | 74 |
| ஐயனே உன் அழகை | 43 | 39 | வேதநாயகனே | 25 | 24 |
| ஐயா எனை | 14 | 13 | தேவனே உன்னை | 28 | 27 |
| ஒருவர்மேலும் | 171 | 153 | தேவாதி தேவாபல | 92 | 78 |
| ஓ ஓ ஜெகநாதா | 114 | 95 | தேவாதி தேவனே ஜீவ | | |
| ஓ ஓ பிரபுத்துவமே | 175 | 158 | னே | 99 | 84 |
| ஓகோகாலமே | 161 | 142 | தேவாதிதேவனேதயை | 17 | 16 |
| ஓடிநான் உனை | 2 | 2 | தேவாதிதேவேயே | 63 | 56 |
| கடைக்கண்ணால் | 51 | 46 | நம்பினேனுனை | 98 | 83 |
| கருணைகடாக்ஷம் | 56 | 50 | நல்லபெண்ணை | 180 | 168 |
| கருணைகரப்புரம் | 46 | 42 | நல்லவரம் | 126 | 105 |
| கருணைகரமூர்த்தி | 81 | 70 | நாதனே தயை | 63 | 56 |
| கருணைசாகரா | 69 | 61 | நாதா அடியேன் | 102 | 86 |
| கருணாலயநிதியே | 128 | 107 | நாதா கணவேதா | 112 | 94 |
| கருணைநீசெய்ய | 73 | 64 | நாதா கிடையாதா | 129 | 107 |
| காக்கவேண்டும் | 34 | 32 | நாதா நிரந்தரவினோதா | 33 | 31 |
| காக்ஷிஎனக்கு | 9 | 9 | நாயகர் பக்ஷமடி | 283 | 175 |
| காத்தருள் | 71 | 63 | நாளே நல்லநாள | 104 | 88 |
| கேளும் பூமான்களே | 189 | 181 | நானே உனை | 89 | 76 |
| சஞ்சலமாய் | 85 | 7 | நானே பொதுநீதி | 162 | 143 |
| சமயம் ஈதையா | 117 | 98 | நிதம் நிதம் | 100 | 85 |
| சம்மதி எனக்கு | 31 | 30 | நிச்சயம் இதுதானே | 68 | 61 |
| சரணம் சரணம் | 21 | 21 | நித்தியானந்தத்தைநாடு | 146 | 123 |
| சரணம் சர்வேசா | 78 | 68 | நிரந்தரனே | 36 | 33 |
| சருவவினோதா | 130 | 108 | நினைப்பதெப்போது | 163 | 150 |
| சருவேசாசரணம் | 166 | 97 | நின்பதமேதுணை | 23 | 23 |
| ஜாலம்செய்வதேதோ | 40 | 37 | நீமலைக்காதே | 144 | 121 |
| சித்தம்இரங்கி | 11 | 10 | நீயேகதி எனக்குள் | 65 | 58 |
| சித்தம் உவந்தருள் | 4 | 4 | நீயேசர்வசக்தன் | 106 | 90 |
| சித்தம் எப்படியோ | 82 | 70 | நீயேதுணைபரனே | 111 | 94 |
| சிந்தைக்குள் | 2[illegible] | 20 | நெஞ்சே இந்த | 143 | 119 |
| சீச்சீ நீலஞ்சம் | 171 | 154 | பஞ்சநீர் | 139 | 115 |
| சீலம்நீதா | 22 | 22 | பஞ்சவர்ணக்கிளி | 181 | 170 |
| செய்யவேண்டுமானு | 158 | 139 | பணமே உன்னால் | 152 | 131 |
| ஜெகநாதா | 58 | 52 | பத்தினிபோல் | 182 | 174 |
| ஞானகுருபரவடிவே | 107 | 91 | பரப்பிரம்மமே | 109 | 92 |
| ஞானமார்க்கம் | 93 | 79 | பரனே அடியர் | 29 | 28 |
| ஏதோ இன்னம் | 105 | 89 | பரனேபக்தர் | 60 | 53 |

| கீர்த்தனைகளின் ஆதி | பாட்டிலக்கம் | பக்கம் | கீர்த்தனைகளின் ஆதி | பாட்டிலக்கம் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| பாசத்தால் | 52 | 47 | மெய்ஞ்ஞானம் | 91 | 77 |
| பாதம் நம்பினேனே | 110 | 93 | மெய்யிதுமெய்யிது | 118 | 92 |
| தஞ்சம்நீயே | 64 | 54 | பிக்ஷை அருள் | 134 | 110 |
| ததியிதென்முகம் | 39 | 46 | புண்ணியம்போல் | 147 | 124 |
| தயைபுரிய | 70 | 62 | புத்திஇதுமகனே | 178 | 165 |
| தடைபுரியே | 125 | 104 | புரட்டெல்லாம் | 159 | 140 |
| தருணங்கருணை | 13 | 12 | பெண்ணாசையே | 155 | 135 |
| பொருளைவிரும்ப | 148 | 125 | மைத்துனரோநாளும் | 192 | 188 |
| போதந்தரகன்னி | 115 | 96 | மைத்துனளுரே | 191 | 187 |
| போதும்போதும் | 165 | 146 | வாவாஜெகநாதா | 72 | 63 |
| போனதுபோகட்டும் | 145 | 122 | வா வா வா வா | 118 | 99 |
| மயங்குறுய்மனமே | 160 | 141 | வா வா வா தேவே | 96 | 81 |
| மனமேஉனக்கு | 154 | 131 | வாழ்வை நம்பாதே | 150 | 129 |
| மனமேநீசன் | 140 | 117 | வித்தையைப்படியுங்க | 188 | 180 |
| மனமேநீமறவாதே | 141 | 117 | வினையேஎனையே | 7 | 7 |
| மாதரைநினையாதே | 153 | 133 | வீண்கர்வமேன் | 149 | 127 |
| மாதேஎன்வார்த்தை | 190 | 186 | வேதநாயகனே எவ்வித | 41 | 37 |
| மார்க்கமல்லடிமா | 187 | 180 | வேதநாயகனே மெய் | 103 | 95 |
| மார்க்கம்இதுமகனே | 177 | 163 | வேதநாயகா நம்பினே | 62 | 55 |


# இராகங்களின் அகராதி


| இராகம் | கீர்த்தனைகளின் இலக்கம் | இராகம் | கீர்த்தனைகளின் இலக்கம் |
|---|---|---|---|
| அசாவேரி | 5-52-157-167-185 | உசேனி | 23-97-124-139-180 |
| | | கல்யாணி | 13-19-84-186 |
| அடாணு | 26-69-141 | கற்கடா | 22 |
| அபூர்வம் | 130 | கனகவசந்தம் | 111-148 |
| அமீர் கல்யாணி | 129 | கன்னட கௌளம் | 53 |
| அம்சதொனி | 132-142 | காப்பி | 104 |
| ஆகிரி | 31-63 | காம்போதி | 4-29-38-42-57-187 |
| ஆநந்தபைரவி | 36-37 | குந்தளவாரா | 100-140 |
| ஆரபி | 25 | கெங்கா தரங்கணி | 80 |
| இந்துஸ்தான் காப்பி | 102-018-119-146-147-150-151-192 | கேதாரகௌளம் | 3-20-35-44 |
| தேவமநோகரி | 74 | | |

| இராகம் | கீர்த்தனைகளின் இலக்கம் | இராகம் | கீர்த்தனைகளின் இலக்கம் |
|---|---|---|---|
| கேதாரம் | 28-32 | நீலாம்புரி | 67 |
| எதுகுலகாம்போதி | 56-61-143-144 | கௌளிபந்து | 114-116-154 |
| கண்டா | 96 | சங்கராபரணம் | 60-152-156-173 |
| கமாஸ் | 40-55-77-153 | சஹானா | 73-83-90-94-178 |
| கரகரபிரியை | 54 | பங்காளா | 85 |
| சரசாங்கி | 131 | பந்து | 106 |
| சாமந்தா | 91 | பந்துவராளி | 51-159 |
| சாமா | 41-88-101-109 | பாஸ் | 8-58-65-82-92-108-191 |
| சாரங்கா | 49-179 | பலஹம்சா | 93 |
| சாவேரி | 105-162-184 | பியாகடை | 30-75-174 |
| சாளங்கபைரவி | 95 | பியாகு | 18-64-103-110-134-176 |
| சுத்தசாவேரி | 86-89 | பிலகரி | 128-183 |
| சுப்பிரதீபம் | 7 | புன்னாகவராளி | 34-125-165-190 |
| சுருட்டி | 17-120-145 | பூபாளம் | 66 |
| செஞ்சுருட்டி | 39-43 | பூரணகௌளை | 6 |
| சைந்தவி | 45 | பூரணச்சந்திரிகை | 127 |
| சௌராஷ்டிரம் | 135-155-163-166-172-181-182 | பூரிகல்யாணி | 81-98 |
| ஜங்கலா | 126 | பைரவி | 16-112-122-171 |
| ஜயந்தஸ்ரீ | 33 | மத்தியமாவதி | 48-59 |
| ஸ்ரீராகம் | 62 | மணிரங்கு | 11 |
| தர்பார் | 12-161 | மனோகரம் | 136 |
| தன்னியாசி | 46-68-158-175 | மாஞ்சி | 44 |
| தீனசங்கராபரணம் | 133 | முகாரி | 24-71-170-181 |
| துசாவந்தி | 2-27 | மோகனம் | 9-47-121-123-169-177-189 |
| தேசமுகாரி | 115 | யமுனா கல்யாணி | 21 |
| தேசிகதோடி | 14-137 | ரீதிகௌளை | 78 |
| தேவகாந்தா | 1 | லலிதா | 79 |
| தேவமனோகரி | 87-149 | வசந்தா | 160 |
| தோடி | 70-72-76-107-138 | | |
| நாகத்தொனி | 99 | | |
| நாதநாமக்கிரியை | 10-15-50-113-117-164-168-188 | | |

## 3. இராகம்-கேதாரகௌளம், ஆதிதாளம்.

பல்லவி

என்னை ஆதரிப்பாயே என்மன இருள்
தன்னையே பிரிப்பாயே — என்னை

அநுபல்லவி

வினையே அரிக்கும் செல்லா
வீணனான் ஒரு புல்லா
நினையா என்மனம கல்லா
நிதம் அதனுடன் மல்லா

நிச்சயப்பிர போதனே
அக்ஷயப் பிரக்கியாதனே
சர்ஜ்ஜனப் பிரதாபனே
துர்ஜனப் பிரமாதனே — என்னை

சரணங்கள்

1 துக்கப்பிர பஞ்சத்தொல்லை
சொல்வதற் குண்டோ எல்லை
திக்குவே றெனக்கில்லை
தெய்வமேகேள் என்சொல்லை

சிஷ்டர் சமுதாயனே
துஷ்டர்கள அபாயனே
இஷ்டர்கள் சகாயனே
அஷ்டகுண நேயனே — என்னை

2 அடியனான் வினைவசம்
ஆயினேன் இதுநிசம
படியிற் கருணாரசம்
பாலித்தருள் கவசம்

பக்தஜன நேசனே
சுத்தமன வாசனே
சித்தமல நாசனே
வித்தக விராசனே — என்னை

3 மருவிய பாசவலை
மாட்டி உற்றேன்கவலை
தரும சைதன்னியநிலை
தந்தென் மயக்கந்தொலை

சங்கட நிவாரகா
எங்கள்குல தாரகா
பொங்குசுக தாயகா
துங்கவேத நாயகா எனை

---

4. இராகம்-காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

சித்தம் உவந்தருள்செய்ய இத்தனை தாமதமேது
சீலனே புவனபரி பாலனே மூலனேநீயுன் சித்தம்

அநுபல்லவி

நித்தனே புவியெங்கும்பிர சித்தனே நிகலலோக
கத்தனே ஜீவகோடிகட் கத்தனே சுத்தனேநீயுன் சித்தம்

சரணங்கள்

1 அசடனென்பதென்ன ரகசியமா பெற்ற
அன்னையிடம்உண்மை சொல்லவேபயமா
வசஞ்செய்தருள்வதுனக் கோர்விஷயமா யாவும்
வல்ல உனக்கிதென்ன அதிசயமா
வசனசா துரியனே
மன்னமா துரியனே
சுஜனர்கள் பிரியனே
சுரர்தொழும் பெரியனே சித்தம்

2 நிதமும்உனதுபத கைங்கரியமே செய்ய
நீயருளெனக்குச் சுதந்திரியமே
அதுவேயெனக்குப்பெரும் சௌரியமே இனி
ஐயனேவேண்டேன் வேறுஐசுவரியமே
அதிசய அப்பிரமேயா
அகணித சுப்பிரகாயா
நீதிநெறி செப்புபவாயா
வினையசங் கற்றதூயா சித்தம்

3 பூதபௌதிகமெல்லாம் நிறைவோனே நல்ல
புண்ணியருதிருமறையை அறைவோனே
வேதநாயகன் மனம் உறைவோனே ஞான
விழியில்லாதவருக்கு மறைவோனே

போதப் பிரகாசனே
புண்ணியப் பிரதேசனே
சாதககிரு பேசனே
தாசருட் பிரவேசனே சித்தம்

---

5. இராகம்-அசாவேரி, ஆதிதாளம்.

பல்லவி

உன்னிடத்திற்சொல்லாமல் யாரிடத்திற்சொல்லுவேன்
ஓ ஓ ஜகதீசா உன்னி

அநுபல்லவி

பொன்னிடத்தாசையறு புனிதர்கள் தமக்கின்பம்
பொழிதருவேஇந்தப் புவியில்நான்படுந் துன்பம் உன்னி

சரணங்கள்

1 வயிறுபசிக்கும்பிள்ளை மாதாயிடம்போமன்றி
அயர்வுறும்பெரும்பிணி அருமருந்தாலன்றி
அயலொன்றினலே அதுதீருமோகன
வெயிலால் வருந்துவோரே
வேண்டுவர் நிழல்நீரே
உயிர்ப்பயி ரோம்புங்காரே
உனையன்றிக் கதியாரே
உலைவுறுசல்லடை போற்பலஓட்டை
உளதாகியவெறும் புழுமலக்கூட்டை
நிலையெனமனக்கவி செயும்பலசேட்டை
நித்தியம்நான்அத ஞற்படும்பாட்டை உன்னி

2 நாதனேநான்பிழை யாதுசெய்யினும்நின்னை
நம்பினேனென்மேலின்னம் க்ஷாத்ரமா-பாரில்
ஓதரும்புலச்சத்து ராதியர் கையிலென்னை
ஒப்புவிக்குதர்ம சாஸ்திரமா-மறு
மாதர்மேற் செல்லும்நேத்திரம்
வாயே அபத்தயாத்திரம்
தீதுரைகொள்ளுஞ் சுரோத்திரம்
சிற்றின்பம்வேண்டுங் காத்திரம்

தீய அவயவங்கள் செயுந்தினமோசம்
சிந்தையிற்குடிகொண்ட தாசாபாசம்
நாயேன்செய் கைகளே ஆபாசம்
நாற்பக்கத்திலும் நான்படுங்கிலேசம் உன்னி

3 எத்தனைசுமைபாவம் வேண்டுமானாலுமுந்தி
எனக்குக்கொடுக்கலாம் அச்சாரமே-எந்தன்
அத்தனேநானுன்சேயென்றறிந்தும்நோய்செயுமாயைக்
கார்தந்தார் இந்த அதிகாரமே-சர்வ

உத்தமஞ்சேர் நிர்தோஷ
உன்னதமா விசேஷ
பத்தர்நித்திய சந்தோஷ
பரசமயத் துவேஷ

பாக்கியமலர்ந்தருள் பழுக்கும்உத்தியான
பலவுயிராத்மகோடிகள் அபிமான
ஆக்கியவேத நாயகன்ஸ்வாதீன
அன்னைதந்தைகுரு தெய்வஞ்சகலமுமான உன்னி

---

6. இராகம்-பூரணகௌளை, ஏகதாளம்.

பல்லவி

என்பிழைகள் பொறுத்தாள்வாய் எனை அலைக்கும்
துன்பவினை அறுத்தாள்வாய் என்

அநுபல்லவி

முன்பாவியே ஜெபிக்கும்
அன்பர்கள் அனுபவிக்கும்
இன்பமே அவர்விரும்பும்
நின்பதகமலம் நம்பும் என்

சரணங்கள்

1 நேயனைப்போல் விவகரிப்பேன் துதிகவிகள்
ஆயிரம்உண்டாக்கிவிரிப்பேன் என்செய்கையெல்லாம்
வாயின் அபலாதுமனந்தோயும் அன்புளதோசிறு
நாயின்அன்புமேயில்லாமல் தீயவம்பனாய்த்திரியும் என்

2 எண்ணவெண்ணுமோ என்பவமேஐயனே இந்த
மண்ணினில் ஜன்மம்அவமே தினந்தினமும்
உண்ணலும்நித்திரைதனை நண்ணலும்பெரும்பாவங்கள்
பண்ணலும்அல்லாதுன்பதம் என்னல்செய்தறியேன்ஸ்வாமி

3 போதகம்என்னிடம்லய மேஎன்மனம்பஞ்ச
பாதகங்கட்காலயமே புவனமிசை
மாதவம்புரிபவர்க்குக் கோதயலும்இகபர
சாதகங்கொடுத்தருளும் வேதநாயகா இரங்கி என்

---

7. இராகம்-சுப்பிரதீப, திரிபுடைதாளம்.

பல்லவி

வினையே எனையே மேவா தருளே

அநுபல்லவி

நினையேநம்பினேன் னின்மலப்பொருளே வினை

சரணங்கள்

1 கனவிலுந்தருமத்தைக் கண்டறியேனே
அனவரதமும்உன தருள்குறியேனே வினை

2 பாவமென்பதற் கொருபதியானேனே
ஜீவனும்வழி தெரியாமற்போனேனே வினை

3 உதரபோஷணையின்றி இனிநினையேனே
இதயந்தனில்உன்னடி இணைபுனையேனே வினை

4 பூதலந்தொழும்அதி புண்ணியமித்திரனே
வேதநாயகன்தொழும் விமலபுத்திரனே வினை

---

8. இராகம்-பரசு, ரூபகதாளம்.

பல்லவி

ஆண்டருளே கருணை பூண்டருளே

அநுபல்லவி

தூண்டருஞ் சுடராக விளங்கும்
சோதியே உயர் நீதியே எனை ஆண்ட

சரணங்கள்

1 என்னை ஆள்வதுபாரமா என
இடம்வர வெகுதூரமா
அன்னைக்கும் உபசாரமா
அருள்புரிய இன்னேரமா

ஆயனே மெய்ஞ்ஞான
சூரியனே சர்வலோக
சாரியனே மிகுந்தஒளி
தாரியனே ஜகந்தனில்

உன்னையல்லது பின்னையார் துணை
யோகனே சுகபோகனே ஆண்ட

2 எனதுடலெனும் புல்லையே-காக்க
எவர்க்குங்காட்டுவன் மல்லையே
தினமும்ஆயிரந் தொல்லையே-இதில்
சிறிதுமேசுகம் இல்லையே

சேதனனே பெரியபு
ராதனனே ராமநி
கேதனனே மெய்ஞ்ஞான
சாதனனே அனுதினம்

நினதுபாதம் நம்பினேன் அதி
நேசனே பிரகாசனே எனை ஆண்ட

3 பொறுமைஉனக்குச் சொந்தமே-நான்
புரியும்பிழை அநந்தமே
மறுமையுறு நிர்ப்பந்தமே-கெட
மலர்ப்பாதார விந்தமே-மன

மாக்ஷியனே அடியர்கண்
காக்ஷியனே சர்வாண்ட
சாக்ஷியனே தனிஅர
சாக்ஷியனே தினந்தினம்

சிறுவன்வேத நாயகன்பணி
சீர்த்தியே அறமூர்த்தியே எனை ஆண்ட

---

### 9. இராகம்-மோகனம், திரிபுடைதாளம்.

பல்லவி

காக்ஷி எனக்குக் கொடாமலிருக்கிற
காரணம் ஏதையா காக்ஷி

அநுபல்லவி

காக்ஷியாய்நிற்கும் சருவாதிகாரனே
மாக்ஷியுடையோர்மகிழ் நிர்விகாரனே காக்ஷி

சரணங்கள்

1 அந்தரங்கபத்தி அற்றவனென்றோ
அக்கிரமத்தில்பெயர் பெற்றவனென்றோ
பந்தப்பேய்க்குள்ளதை யுற்றவனென்றோ
பாதகங்களெல்லாங் கற்றவனென்றோ காக்ஷி

2 மறந்தும்ஒருமெய்சொல் லாதவனென்றோ
மருந்துக்குநன்மையில் லாதவனென்றோ
சிறந்தமெய்ஞ்ஞானங்களில் லாதவனென்றோ
தேசத்தார்க்கெல்லாம்சொல் லாதவனென்றோ காக்ஷி

3 ஏசிமறையை இகழ்ந்தவனென்றோ
ஈனமதத்தைப் புகழ்ந்தவனென்றோ
நீசெய்தநன்றி மறந்தவனென்றோ
நீசர்க்குள்மெத்தச் சிறந்தவனென்றோ காக்ஷி

4 ஆதிமத்தியாநந்த ரஹிதமகேசா
அற்புதசின்மயா னந்தவிலாசா
வேதவேதாந்த விதியுபதேசா
வேதநாயகன் இதயப்பிரகாசா காக்ஷி

---

### 10. இராகம்-நாதநாமக்கிரியை, ரூபகதாளம்.

பல்லவி

அருள்புரிவாயே எனதுள
மருள்தெரிவாயே அருள்

அநுபல்லவி

இருளைநிகரும்சுருள்கொள் ஓதியா
இலகும்பொருள் உலகம்புரிகலகம்படர் விலகும்படி அருள்

சரணங்கள்

1 நினைவெல்லாம்உன்நினைவதா யென்நெஞ்சம்உண்ணுதோபழி
புனையும்வாய்வெறும்பேச்சைவிட்டு புகழ்ந்துபண்ணுதோ
சிறுதினையளவு மெய்தனைவிடாது
சிந்தித்துனை வந்தித்திடு புந்தித்திடம் வந்துற்றிட அருள்

2 எத்திசையும்உன்னுருவமாகவே இலக்காணேனோ சொந்த
அத்தம்யாவும்நீயென்றேமிக ஆசைபூணேனோ கன
பத்தியாயுனை நித்தம்போற்றிப்
பாடித்தினம் நாடித்தவம் நீடிக்கதி கூடிக்கொள அருள்

3 நீதமாயரும்போதமாயெங்கும் நிறையுங்கர்த்தாவே நாளும்
வேதநாயகன்காதல்மனம்பெண் மேவும்பர்த்தாவே கொண்ட
ஏதமறப்பிர சாதம்உதவி
இழிவண்டியு பழிவிண்டுநல் வழிகொண்டுனை விழிகண்டிட அரு

---

11. இராகம்-மணிரங்கு, திரிபுடைதாளம்.

பல்லவி

சித்தம்இரங்கிநன் முத்தர்தங்கோஷ்டியிற்
சேர்த்தெனைக் காத்தருளே சித்த

அநுபல்லவி

உத்தமசீலர்தஞ் சித்தமலருறை
வோனே கோனே வானே தேனே சித்த

சரணங்கள்

1 நின்னடித்தொண்டனு னென்ன அறியவும்
நிதம் உலகந்தானே
என்னஉன்தொண்டின் பலனென்றனைப்புவி
ஏசில்என் சொல்வேனே
பன்னரும்உன்னருள் என்னருகாகிடப்
பண்ணே கண்ணே எண்ணே விண்ணே சித்த

2 பொய்த்தெய்வங்களைப் போற்றிப்பெரும்பழி
பூண்டவர் தம்முனமே
மெய்த்தெய்வம்உன்னைத் தொழும்எனக்கென்ன
விசேஷப் பிரயோஜனமே
கைத்தொழில்அண்டம் அனைத்தையுந்தாங்கிடு
கையா துய்யா மெய்யா ஐயா சித்த

3 கழுவக்கழுவ அழுக்குடல்மீது
கலந்தடரும் தன்மையே
தழுவிஎன்னெஞ்சுரு மாசுகள்நீங்கிடத்
தந்தருள்வாய் நன்மையே
எழுமன்பொடுவேத நாயகன்போற்றிடும்
ஏகா யோகா தியாகா சித்த

---

## 12. இராகம்-தர்பார், திரிபுடைதாளம்.

பல்லவி

என்னை ஆளையா என்விண்ணப்பம்
தன்னைக்கேளையா என்னை

அநுபல்லவி

மின்னைநிகரும்வாழ்வை வெறுப்பவர்க்குரியோனே
அன்னைபிதாசற்குரு வாகியபெரியோனே என்னை

சரணங்கள்

1 அடியேன்மேற்சினமா என்குறைநீக்கி
ஆள்வது கனமா
கடினம் நின்மனமா என்றுநெஞ்சங்
கவலைக்கா சனமா
படியில்என்னகத்துறு பாவஇருளைமாற்றித்
திடமுறவேமெய்ஞ்ஞான தீபந்தனையேற்றி என்னை

2 என்றுஞ்சஞ்சலமா ஐயனேமாயைக்
கிவ்வளவு பலமா
வென்றுகொள்புலமா அதனால்ஏழை
மெலிவது நலமா
நன்றுருவாகியநாதா என்முகம்நோக்கிக்
குன்றெனநான்செயுங் கொடுவினைகளைப்போக்கி என்னை

3 கைவிடலாமா என்னிடம்வரக்
கால்மலர் நோமா
மைவினைபோமா இனிமைதங்கும்
நன்னய நாமா
தெய்வநாயகனாகித் திகழுறும் அகளங்கா
கைவல்லியஞானநெறி கயழ்மதுரப்பிரசங்கா என்னை

4 தித்திக்குந்தேனே அமுதேகன்
தேவர்கள்கோனே
எத்திக்குந்தானே எள்ளெண்ணெய்போல்
இருக்குங்கோமானே
புத்தியுடையோர்சூட்டும் புகழ்மலை அணிதேவனே
புத்தியுடனேவேதநாயகன் பணிவோனே என்னை

---

### 13. இராகம்-கல்யாணி, ரூபகதாளம்.

பல்லவி

தருணங்கருணைபுரிகுவாய் ஐயா-உனக்கனந்தங்கோடி
சரணஞ்சரணந் தெரிகுவாய்மெய்யா தருணங்

அநுபல்லவி

அருணகோடி தேஜோமயனேபொன்
கிரணமென்றுன்னுவோர்பயனே இத் தருணங்

சரணங்கள்

1 இந்திரியசத்துருக்கள் செய்மோசம்
என்னசெய்வேனிவர்வகித்தால் பிரயாசம்
நிந்தனையா அதுபந்தபாசம்
நீங்கச்செய்வாய் புண்ணியஉபதேசம்

நீயேகதியன்றோ ஒரு
தாயே துயர்ஒன்றோ சிறு
நாயேன்கெடல்நன்றோ கன
தீயேன்உடல்குன்றோ இது தருணங்

2 கோரமாய்த்தன் பிள்ளைசெய்யினுந்தீது
கோபித்துநீக்கிடுந் தாயுண்டோஓது
காரமாநான்செய்யும் பாபம்பாராது
காத்தெனைரட்சிப்பா யுலகத்தின்மீது

காயத்தைஎடுத்தேன் அருள்
மாயத்தைஅடுத்தேன் அநி
யாயத்தைஉடுத்தேன் இனி
நேயத்தைவிடுத்தேன் இது தருணங்

3 நச்சுமரத்தையும்வைத்தவன் தானே
நாள்தோறுங்காவல்செய்யாமல் இரானே
இச்சகமீதில்எனை அழைத்தோனே
என்னைநீஆளாவிடிற் பிழையேனே

ஓகந்தழையுருவே சுக
போகந்தழைதருவே கன
யோகந்தழைதிருவே முதிர்
பாகந்தழைகுருவே இது தருணம்

4 நிதியும்நிலமும் பாதகச்சேறு
நீக்கிடப்போதுமே நின்னருள்ஆறு
விதியும்கதியும் இல்லையேவேறு
வேதநாயகனே அருள்பேறு
பேதத்துருவோனே பல்
பூதப்பெருமானே கன
போதத்தமர்கோனே உன்
பாதத்தைவிடேனே இது தருணம்

---

## 14. இராகம்-தேசிகதோடி, ஆதிதாளம்.

பல்லவி

ஐயாஎனை ஆண்டருளே-உனை
அண்டினனே மனம் வேண்டினனே ஐயா

அநுபல்லவி

பொய்யாம் வாழ்வினில் நான்குழையாமல்
போகாதிகளில் என்மனம் நுழையாமல் ஐயா

சரணங்கள்

1 ஒருநிமிஷமு முனதடிமறவாமல்
உலகழியினுமுன தருள்துறவாமல்
இருதயமதனிலோ ரிடர்பிறவாமல்
இழிவுறுபழியோடே நானிறவாமல் ஐயா

2 உன்னையலாதொரு வரையுந்தொழாமல்
உதரநிமித்தம் எங்குமோடியழாமல்
இந்நிலமீது துராசைஎழாமல்
இறந்தபின்னுநெறி நரகில்விழாமல் ஐயா

3 நல்லவழிதனை எந்நாளும்விடாமல்
நாட்டில்அசடனென நான்பேரெடாமல்
பலவகையாகிய பழிகள்தொடாமல்
பாவையர்மோகத்திற் படிந்துகெடாமல் ஐயா

4 என்னுயிர்போல எவ்வுயிரையும்பேண
இச்சகபோகத்தை என்றுமேகாண
மின்னும்குழைபர ணந்தனைப்பூண
வேதநாயகனே நானுனைக்காண ஐயா

---

## 15. இராகம்-நாதநாமக்கிரியை, ஆதிதாளம்.

பல்லவி

இந்தவரந்தருவாய் ஸ்வாமி இந்த

அநுபல்லவி

பந்தவினையெலாம் அறவேண்டும் உன்
பாததரிசனம் பெறவேண்டும் இந்த

சரணங்கள்

1 தினமும்உன்பதமலர் தொழவேண்டும் நான்
தேகபரவசமா யெழவேண்டும்
அனல்மெழுகாயுருகி யழவேண்டும் இனி
ஆனந்தக்கடலில்நான் விழவேண்டும் இந்த

2 தேகவிஷாதிகள் கெடவேண்டும் ஞான
தீபத்தையென்னுளத்தில் இடவேண்டும்
பாகஅறப்பயிரை நடவேண்டும் அந்தப்
பயிர்க்குள்அருட்புனலை விடவேண்டும்

3 மோகப்பசாசுதனை வெலவேண்டும் நல்ல
முத்திநெறியிலே செலவேண்டும்
நாகமெனும்புலனைக் கொலவேண்டும் வேத
நாயகனின்னுமம் சொலவேண்டும் இந்த

---

## 16. இராகம்-பைரவி, ஆதிதாளம்.

பல்லவி

இந்தப்பிழைகளெல்லாம் பொறுப்பாயே பாச
பந்தக்கணைகளை வேரறுப்பாரே இந்த

அநுபல்லவி

சொந்தப்பிள்ளைகளான தூயவர்க்குப்பிதாவே
அந்தப்பரமசுகம் அளிக்குங்கன்தாதாவே இந்த

4 என்னுயிர்போல எவ்வுயிரையும்பேண
இச்சகபோகத்தை என்றுமேகாண
மின்னும்குணபூர ணந்தனைப்பூண
வேதநாயகனே நானுனைக்காண ஐயா

---

## 15. இராகம்-நாதநாமக்கிரியை, ஆதிதாளம்.

பல்லவி

இந்தவரந்தருவாய் ஸ்வாமி இந்த

அநுபல்லவி

பந்தவினையெலாம் அறவேண்டும் உன்
பாததரிசனம் பெறவேண்டும் இந்த

சரணங்கள்

1 தினமும்உன்பதமலர் தொழவேண்டும் நான்
தேகபரவசமா யெழவேண்டும்
அனல்மெழுகாயுருவி யழவேண்டும் இனி
ஆனந்தக்கடலில்நான் விழவேண்டும் இந்த

2 தேகவிஷாதிகள் கெடவேண்டும் ஞான
தீபத்தையென்னுளத்தில் இடவேண்டும்
பாகஅறப்பயிரை நடவேண்டும் அந்தப்
பயிர்க்குள்அருட்புனலை விடவேண்டும்

3 மோகப்பசாசுதனை வெலவேண்டும் நல்ல
முத்திநெறியிலே செலவேண்டும்
நாகமெனும்புலனைக் கொலவேண்டும் வேத
நாயகனின்நாமம் சொலவேண்டும் இந்த

---

## 16. இராகம்-பைரவி, ஆதிதாளம்.

பல்லவி

இந்தப்பிழைகளெல்லாம் பொறுப்பாயே பாச
பந்தக்கணைகளை வேரறுப்பாயே இந்த

அநுபல்லவி

சொந்தப்பிள்ளைகளான தூயவர்க்குப்பிதாவே
அந்தப்பரமசுகம் அளிக்குங்கன்தாதாவே இந்த

சரணங்கள்

1 ஆதியானபரஞ்சோதி உன்னைநான் வெறுத்தேன்
என் மனந்தனை
ஆகமாதிகள்சொல் யோகசாதனையில்நிறுத்தேன்
அநுதினமும்
வேதவேதியர்கள் நீதியையுமறுத்தேன்
சமர்த்தன்போல்
வீம்புபேசிப்பெரும்பாம்புபோல விடம்பொறுத்தேன்
சதாகாலமும்

பூதவாழ்வினை நாடினேன்-மறு
மாதர்கள்சுகந்தனை சாடினேன்-பஞ்ச
பாதகரோடும் உறவாடினேன்-வன்
காதகனென்றுபெயர் சூடினேன்
ஆதுலர்க்கமுதியாமலே தடுத்தேன்
சாதுஜனங்களைக்கண்டே தடியெடுத்தேன் இந்த

2 நேயமானதந்தைதாயைச் சற்குருவைப்பழித்தேன்
ஜெபதபத்தை
நித்தியதர்மங்களைப் பக்திமார்க்கங்களைஒழித்தேன்
கைடபொருளெல்லாம
காயமோசுகமாய்வாழ்விற் செலவழித்தேன்
உனைத்தொழாமல்
காட்டில்வாழ்மிருக கூட்டம்போலநாள்கழித்தேன்
அநுதினமும

தூயரைக்குறைசொல்லித் தூற்றினேன்-பெரும்
தீயரைத்தினந்தினம் போற்றினேன்-நல்ல
ஞாயவழக்குகளை மாற்றினேன்-பதி
னாயிரம்பொய்சொல்லத் தோன்றினேன்
வாயில்வந்தபடி வம்புகள்தொடுத்தேன
கோயில்மணியமெனக் குடிகளைக்கெடுத்தேன் இந்த

3 பூவிலேபெரியபாவிஎன்று பேரெடுத்தேன்
புரட்டுருட்டும்
பொய்யும்வஞ்சனையும்செய்யும் மார்க்கந்தனையடுத்தேன்
உன்னுமந்தன்னை
நாவிலேஎனதுபாவிலே சொலாமல்விடுத்தேன்
ஞானியைப்போல்
நாட்டில்மாய வேஷங்காட்டி உன்னை நான்கெடுத்தேன்
அநுதினமும்

பாவமும்பழிகளுந் தாங்கினேன்-பெருக
கோபமுங்குரோதமும் ஓங்கினேன்-புண்ணிய
ஜீவனஞ்செய்யாமலே தூங்கினேன்-நல்ல
பாவம்செய்யும்வழி நீங்கினேன்-தினம்
ஆவலாகபிறர்பொருள் அபகரித்தேன்
காவலாநெறியைக்கடந்து சஞ்சரித்தேன் இந்த

4 வாரங்கூலிகளிற்சோரஞ்செய்து நான்குறைத்தேன்
பிறரிடத்தில்
வாங்கியபொருள்களை ஈங்கிலையென்றுநான்மறைத்தேன்
பஞ்சத்திலே வியா
பாரஞ்செய்யப்பலசேரில் நெல்லைக்கட்டிநிறைத்தேன்
நல்லதண்ணீரைப்
பாழிலேசகலநாழிகையும் விழலுக்கிறைத்தேன்
முதலினோடு

நேரவட்டிதனைக் கூட்டினேன்வெகு
தூரம அகவிலையை நீட்டினேன்வெகு
கோரஞ்சொல்லிச்சண்டை மூட்டினேன்-உப
சாரஞ்செய்தோர்க்குக்கத்தி நீட்டினே
தாரம்பிள்ளைகளுக்குந் தான்செய்வேன்வஞ்சம்
நேரில்வேதநாயக னின்னடிதஞ்சம் இந்த

---

## 17. இராகம்-சுருட்டி, திசிரஜாதி.

பல்லவி

தேவாதி தேவனே தயைசெய் தருள்வாயே

அநுபல்லவி

பாவஉடலம் எடுத்துநீரும்
பாதகனும்என்னை நாளும்
பந்தப்பகை சாடாமல்
சிந்தைத்துயர் கூடாமல்
நிந்தைப்பழி மூடாமல்
இந்தப்படி வாடாமல் தேவாதி

சரணங்கள்

கற்பகோடிகாலம்போல அற்பவாழ்வினைமதித்தேன்
காரணமாகஎந்நேரமும் அகங்காரம்நெஞ்சினிற்பதித்தேன்
தற்பராஉன்பொற்பாதம்புயந் தாழ்ந்திடாதெனைத்துதித்தேன்
சாந்தமாம்யோகாந்தமார்க்கஞ் சார்ந்திடாமற்குதித்தேன்

நற்பதஞ் சார்ந்தாளு நனைந்து
நாசவினைகள் யாவுந்தீர்ந்து
ஞானந்தனிலே நீட
மோனந்தனையே தேட
வானந்தனையே தேட
ஆனந்தமுமே கூட தேவாதி

2 பசவாம்புசாசன்என் மனம்வாசஞ்செய்வது நிலையே
பாபங்கடுங்கோபமும் பலர்சாபமும் பெருமலையே
நேசமும்விசுவாசமும் பிரகாசமும் எனக்கிலையே
நிந்தையா அகந்தைமூடும் என்சிந்தையுங் கடுஞ்சிலையே

ஈசனே என்பாவம்நீக்கி
என்னையே உன்தாசனாக்கி
இன்பக்கடலே சேரத்
துன்பக்கடலே பேர
அன்பர்க்கினமே சார
என்பொய்க்குணமே தீர தேவாதி

3 அன்பர்களிக்கஇன்பம் அளிக்கும்ஆனந்தப்பெருநிதியே
அனவரதமுங்கனவிரதர்கள் அகத்திலொளிருமதியே
துன்பசாகரமென்பதுகெடத் தோன்றிடும்பரகதியே
தொண்டன்வேதநாயகன் மனப்பெண்டகமகிழ்பதியே

நின்பதந்தனை நாளும்வத்தி
நேசமாய்க்கவி மாலைசாத்தி
ஆதிப்பழியை தள்ள
வேதப்பயனே கொள்ள
போதத் தினிலேதுள்ள தேவாதி

---

18. இராகம்-பியாகு, ரூபகதாளம்.

பல்லவி

இந்த நிமிஷமே பாபநிவர்த்தி
எனக்கருள்வாய் ஸ்வாமி இந்த

அநுபல்லவி

எந்த நிமிஷத்தில் சாவுவருமோவென்
றேங்கியே நான்பயந்தேனே உயிர்
நீங்கிடி லென்ன செய்வேனே சுரர்கோனே இந்த

சரணங்கள

1 காலையோமாலையோ நாளையோசாவெனுங்
காலக்கணக்கறியேனே வந்த
வேலைமுடியுமுன் ஓலையனுப்பிட
வேண்டாஞ்சொன்னேன் சிறியேனே என்னை
ஆண்டாவுனைப்பிரியேனே பெரியோனே இந்த

2 பொட்டென்றுதேகந்தான் சட்டென்றுவீழ்ந்திடில்
கிட்டஒருவர் நில்லாரே குழி
வெட்டென்பர் பிரேதத்தைக் கட்டென்பர் மண்ணைமேற்
கொட்டென்பர் போவர்பொல்லாரே ஆன்ம
நஷ்டம்வராமற் காண்பாரே துயர்தீர இந்த

3 கப்பல்இல்லாமலே எப்படியேனும்
கடலைநடக்கவொண்ணுதே நாளும்
அப்படிநின்பதத் தெப்பமில்லார்க்கந்த
ஆனந்தவீடு நண்ணுதே நல்ல
ஞானந்தருவாயிப்போதே கைவிடாதே இந்த

4 ஆதிமத்தியாந்த ரகிதப்பிரபோதே
அபேதபுராதனநாதா நாளும்
காதலுடன்வேத நாயகனுள்ளக்
கமலந்தங்குந் திருப்பாதா எனக்
கமலந்தர இன்னம்வாதா கிடையாதா இந்த

---

## 19. இராகம்-கல்யாணி, அடதாளம் சாப்பு.

பல்லவி

இந்த உபகார மறவேனேபூமி
அந்தரம் எங்கும் நிறைகோனே இந்த

அநுபல்லவி

விந்தைநரஜன்மம்நான் மேவஅருள்நோக்கினுய்
தந்தைதாய்மனைசேயர் தந்துகுறைநீக்கினுய் இந்த

சரணங்கள்

1 குருதியாகியசேறு கூட்டி நல்ல
கொழுமாமிச்சுவரை நாட்டி
வரிஎன்புவிடங்கள் பூட்டி கட்டும்
நரப்புகளை மாட்டி

இருகாலில் நவவாசல் உடல்மனையை வீக்கினாய்
இன்பங்கள் நுகர ஐந்திரியம் ஆக்கினாய்
அரியஆன் மாவிசல் லறிவினைத் தேக்கினாய் இந்த

1 பூமியாகிய விடமத்தாய் பஞ்ச
பூதாதிஊழியர்கள் சமைத்தாய்
மாமதுரவுணவுகள் கொடுத்தாய் அந்த
வானமாம் பந்தலும் எடுத்தாய்

சோமசூரியதாா காதீபன் ஏற்றினாய்
சகவாயுவாய்உஷ்ண சோகத்தைமாற்றினாய்
சேமவுணவாக்கவே கேரிவினை ஆற்றினாய்
சீதக்கடங்கொண்டு தண்ணீரை ஊற்றினாய் இந்த

3 கடலாறுகுளம் ஓடைதந்தாய்மலர்க்
காவுகளம் உதவினா யெய்தாய்
தடமலைதருக்களும் வகுத்தாய் வனம்
சார்மிருகபக்ஷிகள் பகுத்தாய் •

திடமானநவமணி உலோகாதிநீட்டினாய்
ஜெகஜோதியாகவே சிங்காரம்நாட்டினாய்
அடமன்றிநானா விநோதங்கள் காட்டினாய்
ஐம்புலாதிகளுக்கும் இன்பங்கள் ஊட்டினாய் இந்த

4 சிலபறவைக்கானஇசை பாடும்வேறு
சிலபறவை திருநடனம் ஆடும்
பலமிருகம்காார்வேலை புரியும்நல்ல
பகவாதிபாலினைச் சொரியும்

மலர்கனிகள் காய்கிழங்கு மரமெலாம் நீட்டுமே
மண்ணன்னம் விளவித்து வயிறார ஊட்டுமே
சலதாமுமெங்களைத் தலைமுழுக்காட்டுமே
சர்வபொருள்களும்நல்ல சந்தோஷமூட்டுமே இந்த

5 பித்தர்க்கு நீசெய்யா நரகமேவளம்
பெரிதேனிதுமீதற்ப சுகமே
சுத்தர்க்குநீசெய்பே ரகமேபரம
சுகமென விரும்பும்என் அகமே

பத்தர்அனுகூலா பரமகாருண்ணியனே
பகிரண்டகோடிகள் பரித்திடுந்திண்ணியனே
வித்தகசொரூபமேவுநற் புண்ணியனே
வேதநாயகன்உள்ள மீதுவளர்கண்ணியனே இந்த

---

20. இராகம்-கேதாரகௌளம், ஆதிதாளம்.

பல்லவி

சிந்தைக்குள் உறைந்தும்நீ சிந்தைதுயரந்தனைத்
தெரியாதோ ஸ்வாமி சிந்தை

அநுபல்லவி

அந்தரம்புவியெங்கும் அரசாக்ஷியளிப்போனே
எந்தப்பொருளின்உள்ளும் இருந்தகங்களிப்போனே சிந்தை

சரணங்கள்

1 பாலையும்விஷம்ஆக்கும் பாம்புபோல்கொடுமனம்
பலசுகத்தையுந்துன்பம் ஆக்குமே
பூலோகமெல்லாம்வச மாயினும்வேறொரு
புவனத்தையும் பிடிக்ககோருமே

காலமுழுதும்இந்தக் கருத்தேயாதனுரூபம்
கலியாணவீட்டிலும் கட்டிக்கொண்டழும்சோபம்
மேலவனேயெனக்கு வாய்த்ததென்பாபம்
வேதநாயகனை பாராயோவென்பரிதாபம் சிந்தை

2 இருதலைகொள்ளிநடுவிருக்கும் எறும்புபோல
எந்நாளுந்தொலையா விகாரமே
ஒருசரணாகிய உதிரகுழிஅடைக்க
உலகில்படுங்கஷ்டம் அபாரமே

தரணியின்வாழ்வென்பது தானேவிஷவிருக்ஷம்
சார்வதாயிதில்வரும் சங்கடம்கோடிலக்ஷம்
தருமமேயேகாந்தநிலை சார்தல்உததமபக்ஷம்
சர்வாநுகூலாஉனக் கெல்லாம்பிரத்தியக்ஷம் சிந்தை

3 போர்களநடுவிலே குடியிருப்பதுபோல
புலர்சத்துருக்களின்போ ராட்டமே
சேர்க்குந்தசைவடுவாந் தேகமிதுபிணியுந்
தீவினைகளும்வளர் தோட்டமே

பார்க்குள்இதுவே ஆபாசநடனசாலை
பகலும்இரவும் இதுபடியுமேமோகவேலை
தீர்க்கவைத்தியர்க்குத்தினமும் கொடுக்கும்வேலை
தினமும்வேதநாயகன் சேர்ந்தேன்உன்திருக்காலை சிந்தை

---

21. இராகம்-பமுனகல்யாணி, ரூபகதாளம்.

பல்லவி

சரணம்சரணம் நாதா உன்
சரணம்தர ஒண்ணாதா சரண

அநுபல்லவி

திரணமாகிய காயமே இதில்
தினம்அனந்தம் அபாயமே
மரணம்வரும் முனமே யமபெற
மகிழ்ந்தருள்சகாயமே கோடி சரண

சரணங்கள்

1 பாவியென்இருதயமே பல
பாதங்களின் மயமே
மேவிடுந்துர் விஷயமே இதை
விலக்கிஅருள்நன் னயமே

மாவினைகளை மாற்றுவாய் எதிர்
வந்தென்சிந்தையில் தோற்றுவாய்
சேவைதந்தெனைத் தேற்றுவாய்-இந்த
தீயனைக்கரை யேற்றுவாய் சரண

2 மதம்இராகதுவிசேஷம் பொய்
வஞ்சகம்பல தோஷம்
எதிலும்நான் விசேஷம்-எனக்
கில்லைபுண்ணிய சேஷம்

மதனப்பேயை ஓட்டுவாய் நல்ல
மார்க்கத்திலெனைக் கூட்டுவாய்
விதனரகைப் பூட்டுவாய்-உன்
வீட்டுக்குவழி காட்டுவாய் சரண

3 தாசர்கள்பரிபாலா கன
சாத்வீககுண சீலா
நீசர்கள்பிரதி கூலா சத்ய
நீதியுறுசெங் கோலா

ஆசறுமுதல் நூலனே அகி
லாண்டகோடி சாலனே
நாசரகித மூலனே வேத
நாயகன் அநுகூலனே சரண

---

22. இராகம்-கற்கடா, ஆதிதாளம்.

பல்லவி

சீலம்நீதா தேவநாதா
சிறியேன்மீது வாதா ஆவேதா சீலம்

அநுபல்லவி

மூலகாரண தயாபரவேதா
மோக்ஷசாம்பிராச்சியப் பிரதாதா சீலம்

சரணங்கள்

1 நன்மைதின்மைஇன்ன தென்பதுதெரியேன்
ஞானமார்க்கந்தனையே யநுசரியேன்
சின்மயானந்தனே ஜெபம்புரியேன்
தீயனானநான் பாபத்திற்பெரியோன் சீலம்

2 தாயிருக்கப்பிள்ளை தயங்குதல் சரியோ
சாமிநீ என்மனம் வாழவும் வரியோ
நீயிருக்க என் துன்பம் உரியோ
நீயேதாமசிக்க என்னுடல் கிரியோ சீலம்

3 ஜீவசிட்டிஸ்திதி லய அதிகாரா
ஜென்மசாபல்லியப் பிரதான உதாரா
தேவதேவதன பூசித்திரா
சிறியேன்வேதநா யகன்உபகாரா சீலம்

---

### 23. இராகம்-உசேனி, ஆதிதாளம்.

பல்லவி

நின்பதமேதுணை ஐயாமனத்
துன்பம்அகலஅருள் செய்வாய் நின்

அநுபல்லவி

இன்பமகோதியே இனியதயாநிதியே
அன்பர்பரகதியே அமரர்க்கதிபதியே நின்

சரணங்கள்

1 என்மனம்இளகாத பொருப்பே மாயை
என்றைக்கும்அதிற் குடியிருப்பே
தன்மனமேஅதற்கரு வருப்பே கெட்ட
தாமசகுணமென்றால் விருப்பே
நன்மைகெடுக்கும்இசை நாசக்கொடுநெருப்பே
தின்மையேயெல்லாம்அகலத் திருவருட்கண்திருப்பே நின்

2 ஐதும்அறியேன்ஞான சாஸ்திரம் புவ
னேசாஉனக்குநாம் எம்மாத்திரம்
சோதனைக்கெளியேன் அபாத்திரம் அதி
தூயனேஎன்இன்னம் நக்ஷத்திரம்
வேதனைமிகக்கொண்டு மெலிவுற்றேன் அகோராத்திரம்
சாதகமுறவேநீ தருவாய்மெய்ஞ்ஞான நேத்திரம் நின்

3 நீசனென்வினைக்கெல்லா மூலம் எந்தன்
நெஞ்சம்செய்வதும்பிரதி கூலம்
பாசபந்தஉலகஜாலம் தன்னில்
ஈசனேகேளாயோ ஏழைநாடும்ஓலம்
தாசன்வேதநாயகன் தனக்குநீயருள்சீலம் நின்

---

### 24. இராகம்-மூகாரி, ஆதிதாளம்.

பல்லவி

ஆள்வாயெனதுள மூள்வாயெனக்குந்தன்
அடியிணையேதுணையே ஆள்

அநுபல்லவி

நீள்சுககனியனே நேசருக்கினியனே
நாள்வளர்தனியனே நயமறைத்தொனியனே ஆள்

சரணங்கள்

1 பேதைநான்பயனில்லாப் பேச்சிகண்டப்பிரசண்டம்
பிறரைமயக்குவதிற் பெரியஉற்பாதபிண்டம்
வேதவினைஎனக்கு விளைசருக்கரை கண்டம்
விரைந்தருள்புரிஉனக் காயிரங்கோடிதண்டம்
வேதனேவரப்ர சாதனேஆசீர்
வாதனேசுரர்புகழ்கொள் காதனேநாதனேஎனை — ஆள்

2 மனமெனுங்குரங்குக்குக் கனஅறமேஉபேக்ஷை
வாதனைநீக்கிடாமல் ஏதின்னமுமபரீக்ஷை
தினகரரூபனே திவ்வியமெய்ஞ்ஞானதீக்ஷை
திடமுடன்கொடுத்தருள் அதுவேஎனதபேக்ஷை
தேவனேமனோ பாவனேமறைசொல்
நாவனேதயைநின்ற சுபாவனேஜீவனேஎனை — ஆள்

3 நிகரில்கனதெய்வீக நின்மலசுலக்ஷணா
நித்தியம்நினையும்பக்தர் நெஞ்சப்பிரதக்ஷணா
சகலஜீவாத்மகோடி தாங்கும்சமரக்ஷணா
சாஸ்திரம்புகலுமசுரர் ஸ்தோத்திராமிர்தபக்ஷணா
தாங்குவாய்நெஞ்சில் ஓங்குவாய் துயரம்
நீங்கவேவேதநாயகன் பாங்காநின்றனுதினம் — ஆள்

---

## 25. இராகம்-ஆரபி. ஆதிதாளம்.

பல்லவி

வேதநாயகனே என்மீதிலுன்
திருவுளம் இரங்குவை'ய — வேத

அநுபல்லவி

ஜீவன்முக்தியூர்ஜித சீலாபிதூரஜீத
தாவில்அதிபூஜித சர்வசமயயோசித — வேத

சரணங்கள்

1 கரதலாகமலம்போல்உனக்கு யாவுந்திர்ஷ்டாந்தம்
கர்த்தனே அறியாயோநீ எனதுவிர்த்தாந்தம்
பரவும்பதங்களென்றால் பாலருக்குஆனந்தம்
பலபதங்கேட்டுந்தயைபண்ணா யேதோசித்தாந்தம்
பற்பலநற்ப உற்பவிற்பன
கற்பனைசெப்பரும் அற்புதஉற்பன — வேத

2 தனமிகவேண்டுவோர்க்குச் சல்லியோடுதானமோ
தானமுள்ளோர்க்குக்கானல் ஜலமதுபானமோ
கனசுகந்தேடெனக்குக் கவலைசன்மானமோ
கதியருள்வாயுனக் கதுபராதீனமோ

கர்த்த சமர்த்த பிரசித்த சம்வர்த்தன
பக்தர்கள் சுத்த அகத்துறு நிர்த்தன வேத

3 தினமும் அனந்தபாவஞ் செய்வதென்சம்பிரதாயம்
சிந்தைக்கறங்கசப்புமா வேப்பிலைக்கஷாயம்
இனவேதநாயகனென் றேற்றேன்உன்னுமதேயம்
உனக்கெல்லாவிடினும் அப்பெயர்கெனுஞ்சகாயம்

எம்பர உம்பரும் அன்பரும் நம்பிய
அம்பர சம்பிரம இன்பம் நிரம்பிய வேத

---

23. இராகம்-அடாணா, ஆதிதாளம்.

பல்லவி

ஈசாநின்பொற்பாதமலர் நம்பினேன் என்னை
இக்ஷணமேவந்து ரக்ஷணஞ்செய்தருள் ஈசா

அநுபல்லவி

தாசர்மனகம லாசனகேசர
சாசுவதயோக சாம்பிராஜ்பகீரகேசுர
ஆசைக்கினிவை அவாங்கனேகோசர
அண்டபிர மாண்ட அகண்டசராசர ஈசா

சரணங்கள்

1 எத்தனைபேர் சுகித்தமர்வீட்டில்
எனக்கிடம் பூச்சியமாதயை
சித்தங்கொள்வாயெனப் பித்தனெனக்குத்
தினமனோராச்சியமா நல்ல
நித்தனேஇன்ப மிகுக்தமுக்திநலன்
நீதரில்வானவ ரோதுவரோகலன்
சத்தில்வழக்கவர் பேசிஎன்னபலன்
தாயேஉற்றதுணை நீயேபின்வேறிலேன் ஈசா

2 மாகுணபாக சையோகமின்றிப்புவி
வாழ்ந்தவர் தாமெவரோ எங்கும்
ஏகும்நெஞ்சுனரு காகவராதிதற்
கேகுறுக்குச்சுவரோ விஷ
நாகமாயையெங்குஞ் சர்வகொள்ளையோ
நான்பயனில்லாமற் பேசிடுங்கிள்ளையோ
ஆகிலுமென்புத்தி தான்சுத்தவெள்ளையோ
ஐயனேநானென் தாயில்லாப்பிள்ளையோ ஈசா

3 வந்துன்தரிசனந் தந்தருளியென்
மனக்குறை தீரேனோ உன்தன்
சுந்தரபாதமென் சிந்தனையூன்றிற்
சுமக்கடல் சாரேனோ-பெரும
பந்தநெருப்புக்கென் சிந்தனைசெய்தையா
பாவியென்றனைக்கை நீவிடில்சத்தையா
விந்தைநலந்தந் திடல்பெருவித்தையா
வேதநாயகன் பங்கென்னசொத்தையா ஈசா

---

## 27. இராகம்-துசாவந்தி, ஆதிதாளம்.

பல்லவி

ஆதியேபரஞ்சோதியே எனை
ஆதரித்தருள்வாயே ஆதியே

அநுபல்லவி

ஓதிஉணர்ஒண்ணு தோங்குங்குணகர
நீதிவடிவமுறு நின்மலசாகர ஆதியே

சரணங்கள்

1 உலககாரியத்தில் நான்வெகுதிராணி உன்னை
உண்ணுவதிற்கேவலம் அப்பிராணி
நலம்என்பதெனக் குண்டாமோராணி எந்தன்
நாவைஏற்றப்போதுமோ ஆயிரந்தோணி
மலவசமாகிச் சோர்ந்தேன்
தலைவாஉன்னடி சார்ந்தேன்
மதிக்கும்அடியார்கள் துதிக்கும்ஆரிய
கதிக்கும்நானென் உதிக்கும்வீரிய ஆதியே

2 கண்ணுள்ளபோதல்லவோ கண்காட்சி சீவன்
கழியுமுன்னல்லவோ புண்ணியமாட்சி
மண்ணில்எனக்குஞான அரசாட்சி மிக
வாய்க்கும்படிஐயனே நீகடாட்சி
எண்ணரிய பிரதாபா
நண்ணருஞ் சுப்பிரதீபா
இணங்கும் அமரர்கள் வணங்குபெருவர
மணங்குலவு சுகுணங்கொள் குருபர ஆதியே

3 செய்கைகளே மனுஷகுலகர்மமே
ஓதிவிட்டேன்எனக்கென் உள்ளமர்மமே
ஓகோஐயனே இன்னம்என்வர்மமே
பாதகமலம்அணி வேதநாயகன்பணி
படர்ந்ததிருவருள் அடர்ந்திடும்பிரம ஆதியே

---

## 28. இராகம்-கேதாரம், ஏகதாளம்.

பல்லவி

தேவனேஉன்னை நம்பினேன்
அடியேனை ஆண்டருள் தேவனே

அநுபல்லவி

தேவா துரித அபாவா சுகுண சுபாவா
மகாநு பாவா வாவா தேவனே

சரணங்கள்

1 ஐயாநிலை அறு பொய்யாம்உலகில்
நையாவகை அருள் செய்யாயோஉயிர் தேவனே

2 வாராயோமுகம் பாராயோ அருள்
கூராயோவினை தீராயோகன தேவனே

3 பெரியாய்கைவிடல் சரியாநான்வினை
புரியாவிதமருள் சொரியாயோஉயர் தேவனே
தீதுபொறுத்தல் தெய்வகுல தர்மமே தீய

4 நொந்தேன்வினைசுட வந்தேன்உனதிடம்
வந்தேன்சுகமில்லை தந்தேஅருள்புரி — தேவனே

5 நாதா அருள்ஒண்ணுதாமனம் இரங்
காதா அநுதினம் வேதநாயகம்பணி — தேவனே

---

## 29. இராகம்-காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

பரனே அடியர்மனே கரனேநிமலதின
கரனேநீ அருள்வரனே — பர

அநுபல்லவி

உரனேமிகும்புன தரனேகஅண்டசரா
சரனேபரமசுக கரனேதீரனே அரும் — பர

சரணங்கள்

1 என்னைவந்திரக்கும் ஏழைதன்னைநான் தள்ளிவிடில்
ஈசனேகோபம்பண்ணுயோ தந்தை
அன்னையேஉனையிரக்கும் என்னைநீதள்ளில்எனக்கும்
அவ்விதமென்றே எண்ணுயோ
முன்னைநீஅனேகரைஉன் பொன்னடியிற்சேர்த்தனை
இன்னமும்பலபேர்தமைப்பின்னும் வினைதீர்த்தனை
என்னவேநான்கேட்டுன்மீது சொன்னேன்பலகீர்த்தனை
பின்னையொன்றும்வேண்டேன் அருள்உன்னையிதேபிரார்த்தனை

2 உத்தமனேநான்பெரிய பிததனுயினும்எனை
அடுத்தவனேஉன்னுயோ பாரில்
சித்தமிசைபைத்தியமிகுந்த பாலகனைக்கை
விடுத்தகனுவாள் தாயோ
முத்தொழிலில்முதல்தொழில் கொண்டுசெய்தாயென்சடம்
முத்தஞானம்அளித்தெனைக் காத்தருளாயேன்அடம்
அத்தனேஅவ்விரண்டாந்தொழிலில் உன்னசங்கடம்
அதுதாமூன்றாந்தொழிற் கஞ்சிடேன்இதுதிடம்பரனே — பர

3 பாடுகவியிற்பனை வேடுவதல்லால் உன்னருள்
கூடுவதைகுறியேனே என்னை
நாடுமெவரோடுமேவாதாடுவதல்லால் என்வாயை
மூடும்வகை அறியேனே
வாடுதலில்பாதமலர் சூடுபெரியோராக
வாசபுவனேசவளர் பாசவினைமாராக
வீடுதவியாக அலையாடுகடற்பாராக
மீதுவேதநாயகன் எப்பொழுதுமேகொள்தாரக பரனே

---

30. இராகம்-பியாகடை, திரிபுடைதாளம்.

பல்லவி

அம்புயப்பதம்நம்பினேன் ஐயாபரலோகசாதம்
சம்பிரமத்தை விரும்பினேன்மெய்யா
கனதியாககையா அம்புய

அநுபல்லவி

தம்பமாம்ஆவலம்பம்வேறிலையே தேவாதிதேவர்கள்
சகிதமாகியசுகிதம்மாமனையே மெய்ப்போதகிலையே அம்புய

சரணங்கள்

1 தினமும்அலையுமென்மனமே கீசகமா அடியேனும்பால்இஷ்ட
சத்திவேண்டியே நித்தியம்யாசகமா
கனஅநீதனென்மீத்ரே சகமா என்சொல்உன்காதுக்குக்
கடினமாகிய கொடியவாசகமா
நான்ஒரு மசகமா அம்புய

2 மண்ணின்வாழ்க்கையில் எண்ணில்வாதனையே-அதுநீக்கவேயரு
மன்னிடாமலேன் இன்னஞ்சோதனையே [ள்
திண்ணியம்பெறுபுண்ணியவாதனையே அடியேனுக்கேஸ்வய
தீனமாகச்செய் ஞானபோதனையே
செயதே னவந்தனையே அம்புய

3 எண்ணிமகிழ்ந்திடு விண்ணியவிக்கிரா பரிசுத்தசீவர்கள்
இஷ்டபிரணதுஷ்டநிக்கிரகமே
வின்னிஞேதினம நண்ணுசுகக்கிரகமே இனிநீபுரிந்தருள்
வேதநாயகன் தனக்கனுகிரகமே
பணியார் உக்கிரகமே அம்புய

---

### 31, இராகம்-ஆகிரி, திரிபுடைதாளம்.

பல்லவி

சம்மதியெனக்கு மெய்யனே-உனைநிக
நன்மதிதந்திடல் ஐயனே சம்மதி

அநுபல்லவி

அம்மாவென்றழு மென்மேலும்
வெம்மனநோயோ சூழ்ந்தாலும் சம்மதி

சரணங்கள்

1 தன்னைஉன்னவே கூடாதென்றே-தடைசெய்வோன்தான்
இந்நிலத்துண்டோ குணக்குன்றே
நின்னையே தொழுவிரதம்
நேர்துணை அநவரதம்
உன்னவே என்மனோரதம்
உதவுவாய் கருணாமிர்தம்
ஓங்கிவளர்தனம் நீங்கியொழியினும்
வீங்கியுடல்பிணி தாங்கியழியினும் சம்மதி

2 பதமலர்மேல் ஆசைகொண்டேன் உலகவாழ்வு
சதமலவென்றுண்மை கண்டேனே
நிதமுனைப் பணியுமதி
நீதர இலையோவிதி
அதிற்குறையுமோ உன்னிதி
அண்டினேனு னுன்சன்னிதி
அடரும்வறுமையோ டிடர்கள்சூழினும்
படருபவத்துயர்க் கடலில்ஆழினும் சம்மதி

3 உத்தமபிரசை அனியமே சௌஜஅனியமே மெய்ப்
பத்தர்கள் அல்லா தாக்க அனியமே
சுத்தமதுர பாஷணு
சோபனகுண பூஷணு
வித்தகவி சேஷணு
வேதநாயகன் போஷணு
விலகியேயெனை உலகம்நகைக்கினும்
கலகமாகவே பலர்கள் பகைக்கினும் சம்மதி

## 32. இராகம்-கேதாரம், ஆதிதாளம்.

பல்லவி

ஐயனே உயர் மெய்யனே ஐயனே

அநுபல்லவி

உய்யவே அருள்புரி செய்ய பதந்தந்தெனை

சரணங்கள்

1 ஈசனேநான் ஆத்ம இரக்ஷண்ணியமே
இரங்கியருள் கடாக்ஷ வீக்ஷண்ணியமே
தாசன்நானுனக்கென்னுந் தாக்ஷண்ணியமேகொண்டு
தந்தருள்வாய்விவேக தீக்ஷண்ணியமே ஐயனே

2 இகநிதி அழிந்து போம்நிலலாது அதை
ஈந்தனம்போவ மென்றால்செல்லாது
நிகழ்நித்தியசுகந் தந்தால்அல்லாது
நில்லாமல்நச்சும் என்வாய்பொல்லாது ஐயனே

3 கோதையர் மைந்தர்முதற் பரிஜனமேசந்தை
கூட்டம்அவர்மேற் கொள்ளுங்கரிசனமே சந்தை
வேதைதரும்இது நிதரிசனமே
வேதநாயகனுக் குன்தரிசனமே ஐயனே

---

## 33. இராகம்-ஜயந்தஸ்ரீ, ஏகதாளம்.

பல்லவி

நாதா நிரந்தர விநோதா உன்தன்
பாதார விந்தம்எனக் காதாரம் தாதா நாதா

அநுபல்லவி

வேதாந்தசார நவபோதா பஞ்ச
பூதாந்தகால விபரீதா விக்கிரயாதா ஜெக நாதா

சரணங்கள்

1 பேசருஞ்சர்வ பவநேச நல்ல
தாசர்மனோ லயவாசா பரவாசா ஜெய நாதா

2 மாவரந்தா லாகாதா வினை
போவெனநீசொலிற் போகாதா சாகாதா புவி — நாதா

3 மாயையின் சபதமே நிசமா அந்தப்
பேயைக்கொள்வ துனக்கவசமா தாமசமா தெய்வ — நாதா

4 அடியன்மனங் கடின இரும்பா அருங்
கொடியவினை அதற்குக்கரும்பா நானோர்துரும்பா ஜெக — நாதா

5 ஆதிமத்திய அந்தரகிதா சுயஞ்
சோதிமய அமரர்சகிதா நனசுகிர்தா மகி — நாதா

6 மாயாந்தகாரம் அகில்கிரணா வேத
நாயகன்தொழு மலர்ச்சரணா அந்தக்கரணா தெய்வ — நாதா

---

## 34. இராகம்-புன்னாகவராளி, ஆதிதாளம்.

பல்லவி

காக்கவேண்டும் கடவுளே காக்கவேண்டும் — காக்க

அநுபல்லவி

காக்கவேண்டும்என்னை அன்பன் ஆக்கவேண்டும் என்கவலை
நீக்கவேண்டும் பாவமெல்லாம் போக்கவேண்டும் தினமெனைக் கா

சரணங்கள்

1 பண்ணியவினையுமனம் எண்ணியவினையும்வாக்கில்
கண்ணியவினையுந்தீரக் கண்ணியவரந்தந்தென்னைக் — காக்க

2 ஆரணனேநீகொடுத்த தாரணியச்செல்வத்தின்மனம்
பூரணமானேன்பாவநி வாரணசுகந்தந்தெனைக் — காக்க

3 எந்தவேளைமரணமோ அந்தவேளைவந்துன்அர
விந்தமலரேநிகருஞ் சுந்தரஅடிதந்தெனைக் — காக்க

4 பூதமுதலானஜீவ பேதகாரணனே நாளும்
வேதநாயகன்பணிபிரக் கியாதபூரணனே எனைக் — காக்க

---

35. இராகம்-கேதாரகௌளம், திரிபுடைதாளம்.

பல்லவி

ஈசனேமல நாசனேமன வாசனே பிரகாசனே

அநுபல்லவி

பாசயிருளினை நீக்குவாய் உந்தன்
பதத்துக்கெனவுற வாக்குவாய் ஈசனே

சரணங்கள்

1 சிறியன்மதிவெறும் ஸ்தூலமேஅதன்
செயலெல்லாம் அலங்கோலமே
குறிகொள்பாச நிர்மூலமேசெய்து
குணந்தந்திட இதுகாலமே
அறியநானிடம ஓலமேசெவிப்
பொறிகொண்டுத வனுகூலமே ஈசனே

2 அடருங்காமங்கொள் பேழையேநிகர்
ஆகும்உடலெனும் பாழையே
திடமென்றுன்னும்நாம் ஏழையேகுறை
தீரக்கற்றறி லோழையே
தாடுசிலேட்டுமங் கோழையேஉயர்ந்
திடுமுன்தொலைபவப் பீழையே ஈசனே

3 என்னைக்கெடுத்திடக் கங்கையேஇடை
இருக்கிக்கட்டிக் கொண்டிச்சையே
முன்னைவருந்திடக் கொச்சையேகொண்டுன்
முன்வந்திரந்தனன் பிச்சையே
உன்னுமாவரத் தியாகமழைபொழி
பன்னுவேதநாயகன் வல்வினையொழி ஈசனே

---

36. இராகம்-ஆனந்தபைரவி, ரூபகதாளம்.

பல்லவி

நிரந்தரனே மா-துரந்தரனே கன
நிர்மலத்துவ தர்மகர்த்தத்துவ நிரந்தரனே

அநுபல்லவி

பரந்தபொருள் சுரந்துகார்த்தருள்
பரந்தந்தென்னை விரைந்துதீர்த்தருள் நிரந்தரனே

சரணங்கள்

1 சித்தமிரங்கி யென்னைத்தனை நீதயை
செய்யிற்பிழையேனோ கன
நித்தனேஎன்பிழை எத்தனையென்னிலும்
நீக்கித்தழையேனோ நல்ல
உத்தமம்என்னிடம் சுத்தசரித்திரம்
ஒன்றோபலவிதம் என்துர்ச்சரிதம்
நித்தம்என்நெஞ்சம உடுத்தாமல்வஸ்திரம்
நீக்கினேச்சேர் சௌபாக்கியசமுத்திரம் நிரந்தரனே

2 உதிமதிகதிர் முதலெல்லாஞ்செல்லும்
உன் ஆணைவழியே எந்தன்
மதியொன்றேஅந்த விதியைக்கடந்து
வளர்க்குமாபழியே இந்தப்
பொதிமதிக்கேன் தனியரசாக்ஷியே
நினிதஞ்செய்குவ துன்பெயர்மாக்ஷியே
புனிதஞ்செய்குவ துன்பெயர்மாக்ஷியே
பதிதனென்பதற் கென்செய்கைசாக்ஷியே
பாவனனீயென ஈவாஅத்தாக்ஷியே நிரந்தரனே

3 பாரிருள்நீக்காத சூரியனாலேஅம
பாருக்கென்னசாரம் ஞான
ஆரியனேஉன்முன் சாரலாமோஎன்
அகத்தில்அந்தகாரம் நாளும்
சாரமில்லாச் சமுசாரகோலாகலம்
சாருமெனக்கென்றுநீ திராவியாகூலம்
வீரனேநீயறிவா யென்பலாபலம்
வேதநாயகனே நீதருவாய்நலம் நிரந்தரனே

---

37. இராகம்-ஆனந்தபைரவி, ஆதிதாளம்.

பல்லவி

அப்போதுனைத்தொழல் அரிதையா உனை
இப்போதேதொழ அருள்செய்வாய் அப்போ

அநுபல்லவி

முப்போதும்உனது முதலேசுரர்தொழும்
அப்பாமரணம்உற் றடியேன்உடல்விழும் அப்போ

சரணங்கள்

1 இடமாற்பிற்பாறைபோலே இரண்டுகோழைகள்கட்டும்
சிறிதும்பேசாதவண்ணஞ் சேர்ந்திருக்கிப்பல்கிட்டும்
படர்ஜீவவாயுவேலிப் படஎங்கும்ஓடிமுட்டும்
பாயுதவேளையெனப் படுமாயைத்தொடைதட்டும்
பலங்கொள்உணர்வது கலங்கிலைகெட
இலங்குடலைஉயிர் விலங்கிவெளிவுறும் அப்போ

2 மனைவிசேய்கடன்காரர் மட்டிவார்த்தைவிரிப்பார்
வகையெமக்கென்னவென்று மணல்கயிறுத்திரிப்பார்
மனையிற்பொருளையெல்லா மாவலைபோட்டரிப்பார் செரிப்பார்
வகையொன்றுமின்றே கையால்மணித்தொண்டையை
மணங்குகழல்கற குடங்குசெயலொடு
திடங்கொள்கரணமும் அடங்கிமாளிறும் அப்போ

3 அழுகைக்குரலும்பல முழக்கமும்நாணுபேதம்
ஆகப்பலபக்கத்தும் அடக்குமேகடனுதம்
விழுகையுறும்உடலின் வேதனையுப்பிரமாதம்
வேதநாயகனே அப்போதுனைஉன்னலேதம்
விரிக்கும்இடர்பல கரிக்கும்உடலினை
முரிக்கும்இசிவொடு மரிக்கும்வேளையில் அப்போ

---

38. இராகம்-காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

எவ்வகையிலும் நானே நல்வழி பற்றி
உய்வகை யருள்கோனே எவ்

அநுபல்லவி

செல்வழிநிற்போர்மனத் தேன்கள்வளரும்பூவே
பௌமாகப்பேரின்பம பழுக்குங்கற்பகக்காவே எவ்

சரணங்கள்

1 வழியர்ச்சிடவென்றுலென் குறியகைகளிற்சூலை
வாங்கநீட்டினுன்உலகும் வானமும்எந்தழலை
பிறர்நோய்செய்யில்எனக்குப் பெருங்கோபாக்கினிச்சுவாலை
பேதைஎன்பிழை எழுதிடவேண்டுங்கோடியோலை எவ்

2 நல்லவழிநடக்கவென்றால் இருகாற்குந்தளை
நாளுந்துர்வழிநடப் பதில்எனக்குண்டோகளை
புல்வினையேன்செவிபொய்கள் நுழையும்தளை
புண்ணியவுபதேசமென்றால் புகஅதில்லதுளை எவ்

3 உன்னைத்துதிக்கவென்றால் உலகில்உளன்வாய்க்குநோயே
ஊர்வம்புபேசஎனக் குடம்புமுழுதும்வாயே
மின்னைநிகர்பிரபஞ்ச வேதனைநீக்குவாயே
வேதநாயகனுக்குச் சாதகமானதாயே எவ்

---

39. இராகம்-செஞ்சுருட்டி, ரூபகதாளம்.

பல்லவி

கதியிதென்முகம் பார்ஐயா
கதிநினையன்றி ஆர்ஐயா கதி

அநுபல்லவி

மதியுள்ளோர்கள் ருசிக்கும்அமுர்த
வாரியே அருள் மாரியே கதி

சரணங்கள்

1 உனக்கென்எண்ணம் அந்தரங்கமா
உதவிதான்செய்யிற் பங்கமா
எனக்கிங்கக்ஷய அங்கமா
இன்னமென்ன ஆடங்கமா
தனக்குநிகரில்லாத ஞானசாகராகுணாகரா கதி

2 அதஞ்செய்யும்வினை கற்கண்டோ
அதைத்தொலைப்பதென் பலங்கொண்டோ
நிதம்நான்செய்வது வீண்தொண்டோ
நீயல்லாற்பதி வேறுண்டோ
பதகமங்கன்பரவும் பக்தர்கள்பாக்கியமே மனோக்கியமே கதி

3 அன்னைக்குபிள்ளைமேற் குரோதமா
அருள்செய்வது பிரமாதமா
வினைக்குநான் முதற்பந்தமா
விலக்கஇன்னம் விவாதமா
நினைக்கும்வேதநாயகன்பணி நீதனே பிரபோதனே கதி

40. இராகம்-கமாஸ், ரூபகதாளம்.

பல்லவி

ஜாலஞ்செய்வதோ ஐயா
சீலம்மியொண்ணுதோ மெய்யா காலம்

அநுபல்லவி

ஞாலமெல்லாந் தாங்குங்கையா
நற்குணமில்லார்க்கு வெய்யா ஜாலம்

சரணங்கள்

1 பெண்டுபிள்ளையோடினமே
பேய்சுரைபடர்வனமே
அண்டும்இவரால்தினமே
ஐயையோநொந்தேன்மனமே ஜாலம்

2 பாழுமனமேமற்கடம்
பண்ணும்அகவிகடம்
ஊழ்வினைதருமசங்கடம்
ஒழித்துநீயருள்வாய்தினம் ஜாலம்

3 நீதிவழுவாதச்செங்கோலா
நித்தியசங்கீதலோலா
வேதியர்பரவுஞ்சீலா
வேதநாயகன்சேர்கோலா ஜாலம்

---

41. இராகம்-சாமா, திரிபுடைதாளம்.

பல்லவி

வேதநாயகனே எவ்விதமும்உன்
பாதமலர் அருளே வேத

அநுபல்லவி

போதநாயகனே பொய்நீங்கிய
புனிதநாயகனே மெய்தாங்கிய வேத

சரணங்கள்

1 என்னுமனமேதுர்க் குணங்கள்நின்றபாண்டம்
ஏதும்அறிகிலும் ஞானகண்டம்
பண்ணும்பாவங்களே பிரமாண்டம்
பகரும்வார்த்தைகளே அபாண்டம் வேத

2 மண்ணில்அறு தினம்பூததேகம்
வளர்ப்பதெனக் ககலாஉத்தியோகம்
புண்ணியஉடல் வளர்த்திடும்வைதீகம்
பூண்டிலேன் அருள்வாய்விவேகம் வேத

3 விதனவிஷதருகி கஸ்தாசிரமம்
விரும்புவோர்க்கிதில் விலகிடாச்சிரமம்
நிதங்கொண்டேன்இந்த வாழ்விலேபிரமம்
நீங்கவேதநாயகனே அருள்மகிழன்பன் வேத

---

## 42. இராகம்-காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

எனக்குகாட்டியவீட்டை எனக்குகொடாதிருப்ப
தென்னஞாயம் ஸ்வாமி எனக்கு

அநுபல்லவி

இனிக்கும்அவ்வீடு செய்ததெங்கள்நிமித்தமே
என்றுநீசெய்யவில்லையோ வாக்குதத்தமே
உனக்குநான்பிள்ளையென்ப துலகப்பிரசித்தமே
உவந்துகேளாயோ என்பிரபலாசத்தமே எனக்கு

சரணங்கள்

1 சித்தவிகாரமுரு வார்க்குச்செல்வுலகம்
சிறப்புள்ளதெனில் சேரனேநல்ல
உத்தமர்க்கமைத்த நித்தியானந்தமுத்தினியின்பம்
உணர்வதெப்படி நானே
சுத்தமணிபொன் அங்கே துருமகள்கூடவே
தொல்லுலகின்பமெல்லாந் துனபமாபால்வீட்டமே
அத்தமியாநித்திய சூரியர்அன்பர்க்கூட்டமே
அனுதினம்யெனக்கற வீட்டினிதநாட்டமே எனக்கு

2 முகமுமாகஉனைத் தரிசிக்கும்பாக்கியத்தை
மொழியநினைக்க ஒண்ணுமோ இந்த
இகமிசைமனமொடு புலன்கட்கெட்டாத அந்த
இன்பம்எப்போது நண்ணுமோ

அகமிசை உன்னஉன்ன ஆனந்தம்பொங்குமே
ஆயிரங்கோடிசூரியர் ஒளிமங்குமே
நிகரறுகீத விநோதங்கள் எங்குமே
நிரதிசயாநந்தம் நிரந்தரம்தங்குமே எனக்கு

3 இகமனைக்கட்டிநார் குடும்பப்பிரதிஷ்டைசெய்த
இனையரும் எந்தாயே நித்திய
சுகமனைதன்னில் பிரவேசிக்கவே நல்ல
சுந்தரம் அருள்வாயே
அகிலலோகப்பிரபஞ்ச நாகசூத்திரனே
அற்புதபரமநித்தி யானந்தக்ஷேத்திரனே
நிகரதுசௌந்தர நிர்மலகாத்திரனே
நிதம்வேதநாயகன்தொழுங் குணபாத்திரனே எனக்கு

---

43. இராகம்-செஞ்சுருட்டி, ஆதிதாளம்.

பல்லவி

ஐயனே உன் அழகைக்காண
ஆசைநான் கொண்டேனே

அநுபல்லவி

வையகமீதுபல அழகையும்
வகைவகையா வந்துகாட்டும் ஐயனே

சரணங்கள்

1 உதயசூரியன் சோமன் தாரகை
உன்முன்னே மின்மினியே
நிதிநவமணி யென்னனும்குப்பைகள்
நிகருமோஉனை இனியே ஐயனே

2 கனியுந்தேனும் பாலும் சீனியும்
கற்கண்டும் கரும்பும் சிறுமை
இனிஉனது தரிசனத்தின்முன்
இவைகள்யாவும் வெறுமை ஐயனே

3 செழுமையாகி வண்ணமர்கொள்
சிங்கார வனக்காட்சி
அழகின்ஆலய உன்முன்
அதற்கெத்தனையோ தாட்சி ஐயனே

A7026

4 அதிசயவுந்தா மயில்குயில்கிளி
யாதிபறவைக் கூட்டம
வெட்கிபஞ்சுபோ லோட்டம் ஐயனே

5 சத்தஸ்பரிச ரூபகந்தந்
தான்அல்லாத பொருளே
எத்தன்மையுன் னுருவென்றறிய
இன்பக்காட்சி அருளே ஐயனே

6 பதில்நீசெய் பலபொருள்களைப்
பார்க்கபார்க்க வடிவே
அதிசயம்தரும் எந்தன் அற்புத
அழகினுக்குண்டோ முடிவே ஐயனே

7 பிறந்தநாள்முதல் தாயைக்காணுப்
பிள்ளைதனை ஒத்தேனே
சிறந்தவேத நாயகா உன்மேல்
சிந்தையாவும் வைத்தேனே ஐயனே

---

44. இராகம்-மாஞ்சி, ரூபகதாளம்.

பல்லவி

என்னைநீ ஆளுவாய் ஏகனே யோகனே என்

அநுபல்லவி

பொன்னை மாதைபூவை எண்ணம்
பூண்டுநான் கெடாத வண்ணம் என்

சரணங்கள்

1 யாதனுசரீரமே யாதுமில்லைசாரமே
வாதபித்தவுகாரமே வாதனைகள் அபாரமே
மலநிவாரணு வடிவபூரணு
நமஉதாரணு ஞானகாரணு என்

2 எந்தநாளும்கிலேசமே என்னெஞ்சிற் பிரவேசமே
பந்தனையைநாசமே பண்ணிசெய் வாசமே
பதிதபாவனு பரமஜீவனு
அதிகசோபனு அகிலஸ்தாபனு என்

3 அன்னைதந்தைநீ அல்லவோ ஆபிரந்தரஞ் சொல்லவோ
என்னைமாயை கொள்ளவோ எங்குநான் இனிச்சொல்லவோ
ஏதபேதகா இனிய சாதகா
வேத நாயகா விமல தாயகா என்

---

45. இராகம்-சைந்தவி, திரிபுடைதாளம்.

பல்லவி

ஏழைக்கிரங்க வொண்ணாதா இந்த ஏழை ஏழை

அநுபல்லவி

ஆழக்கடலுலகை ஆளும் விநோதா ஏழை

சரணங்கள்

1 சாடும்பிரசண்டக் காற்றாலே திசை
தப்பிய அலைபடும் கப்பலைப்போலே
நாடும்பிரபஞ்சமாலே என்னை
கைவிடுகவாடினே ஞான்புவிமேலே ஏழை

4 நீசெய்வதெல்லாம் சகாயம் இங்கே
நிராதரம என்செய்கையாவும் அநியாயம்
ஈசனே நின்பதநேயம் எனக்
கொள்ளவுமில்லை ஏதென்னமாயம் ஏழை

3 அற்பசுகத்துக் குழைத்தேன் பாரில்
அநுதினம்ஆயிரம் பொய்சொலலிப் பிழைத்தேன்
பற்பலதீவினை இழைதத்தேன் துன்பப
பாரம்பொறுமலே பரிந்துன்னை அழைத்தேன் ஏழை

4 ஆத்மபத்தினி மணவாளா அகி
லாண்டபிரமாண்ட அகண்ட கோளா
வான்மகிழ் தீனதயாளா தினம்
மகிழவேதனயன் வணங்கும் பொற்றாளா ஏழை

---

### 46. இராகம்-தன்யாசி, தாளம்-ஆதி.

பல்லவி

கருணாகரப் பரம்பொருளே அடியேனைக்
கண்பார்த் தருள்வாயே கருணா

அநுபல்லவி

இருணாசஞ்செயும் இரவிசமான
தெருணாடிய தேஜோமயம் ஆன கருணா

சரணங்கள்

1 தோன்றினநாள்முதல் சுகுணமொன் றறியேன்
சொர்ப்பனந்தன்னிலுந் துர்க்குணம்பிரியேன்
ஈன்றவனீயென என்றுமேகுறியேன்
என்னசெய்வாயோவென் றேங்கினேன்சிறியேன் கருணா

2 தரணியில்நான்ஒரு தருவெனமுளைத்தேன்
தமகுணம்யாவுமே யாக்கையாக்கிளைத்தேன்
கருமமாகியவிஷக் கனிகளைவிளைத்தேன்
கண்டனைசெய்வையென் றஞ்சியேகளைத்தேன் கருணா

3 நிகிலலோகங்கட்கெல்லாம் நீயதிகாரி
நிச்சயமா என்மனம் நினக்கொருபாரி
அகிலந்தனிலே அந்தமனம் அகங்காரி
அடக்கி ஆளாவிட்டாள் அழியாளேநாரி கருணா

4 அழுகுக்காலயமான அமிர்த சுந்தரமே
அன்பருக்கருள்மழை பொழியுங்கந்தரமே
தொழுதிடும் வேதநாயகன் சுதந்தரமே
துணைநீஉனை நம்பினேனிரந்தரமே கருணா

---

### 47. இராகம்-மோகனம், தாளம்-ஆதி.

பல்லவி

ஏனின்னம் தாமதமையா
என்னிடம் வர ஏனின்

அநுபல்லவி

தானே உமக்குமுத்தித் தலமொன்றுமிலையோ
வானமுத்தரைவிட்டு வரமனமிலையோ ஏனின்

சரணங்கள்

1 சூரியனை தூண்ட அகன்றீரோ அந்தச்
சோமானுக்கொளிதரச் சென்றீரோ
பாரினைப்புரட்டியே நின்றீரோ அதில்
பகல்இரவுண்டாக முயன்றீரோ
காரிலிருந்துகனகமழை சொரிந்தீரோ
கர்ப்பத்தில்சிசுக்களையே புரிந்தீரோ
சாரும்பல்லுயிர்க்குபிராய் விரிந்தீரோ
சர்வலோககாரியஞ் செய்தீரோ ஏனின்

2 அண்டகோடிகளைத் தூக்கினீரோ நலம்
ஆகச்சில்அண்டம் ஆக்கினீரோ
கண்டகர்உலகை நீக்கினீரோ கடல்
கரையைகடவாமல் தேக்கினீரோ
அண்டும்பல்லுயிர்க்கமு தூட்டுகின்றீரோ
ஐம்பூதங்கட்கும்வேலை காட்டுகின்றீரோ
மண்டுகளிக்குச்சுவை கூட்டுகின்றீரோ
மலருக்குப்பலவண்ணந் தீட்டுகின்றீரோ ஏனின்

3 மரஞ்செடிபயிர்கள் நிறைத்தீரோ அவை
வளரவேதண்ணீரை இறைத்தீரோ
சுரர்கள்இதைகேட்டுக் களித்தீரோ நல்ல
தொண்டர்இதயத்தில் ஒளித்தீரோ
பரமகிருபாகர பரஸிதகேசரே
பரமதகண்டன் பாபவிநாயகரே
சருவவிநோத சராசரவாசரே
தாசன்வேதநாயகன் தன்பிராணேசரே ஏனின்

---

## 48. இராகம்-மத்தியமாவதி, ரூபகதாளம்.

பல்லவி

இவ்வளவுதான் ஐயனே அதிகம் நல்ல
இரங்கிநீயருள் செய்யனே இவ்

அநுபல்லவி

அவனியில்வளரும் மூவாசைப்பரிகரி
எவ்வளவோதுன்பம இல்லாமல்ஆதரி
இதயமலர்தரி விதனமகற்றுபுரி
நிதமும்அருள்புரி இதுவே சரிசரி இவ்

சரணங்கள்

1 எனைஎந்நாளும்நீ நீங்காதே நான்போம்
இடமெங்கும் கூடவாபின் வாங்காதே
வினையனென்றன் மேற்போகம் வீங்காதே மன
வேதைசுமக்க என்னால் தாங்காதே
நினைவிலும்தீதைநான் நினையாமற் பார்த்திரு
நித்திரைசெய்யும்போதென் பக்கத்தில் காத்திரு
நெடியநிலைபெறு கொடிய பிழைபொறு
அடியன்மனமுறு கடியதுயர் அறு இவ்

2 மாயையில்மனம்புக ஓட்டாதே உன்
வஞ்சனைக்காளென்று காட்டாதே
ஆயிரந்தெண்டம் என்சொல்தட்டாதே உன
தனுக்கிரகமின்றி நலங்கிட்டாதே
நாயேன்விரும்பிய நல்லவரங்கள்கொடு
நரகைஅடைத்துமோக்ஷ நாட்டைத்திறந்துவிடு
நனவுகொடுகொடு சினமும்விடுவிடு
தினமுமகிழ்வொடு கனசுகுணம்இடு இவ்

3 நலமின்றிக்குறையை ஆராயாதே பெரு
நன்மைகள்கொடுப்பதில் ஓயாதே
பலவேலைஇட்டென்று காயாதே அற்பப்
பாக்கியம்நான் கேட்கினும்ஈயாதே
புலனில்வேதநாயகன் புகழும் சுகுணசீலா
பூதபவிஷியவர்த்த மானமெனுந்திரிகாலா
போதமழைபொழி மாதர்மயலழி
பாதகத்தையொழி ஏதமறவிழி இவ்

49. இராகம்-சாரங்கா, அடதாள சாப்பு.

பல்லவி

ஆதரித்திட நல்ல தருணம் என
தையா உனக்கனந்தஞ் சரணம் ஆதரி

அநுபல்லவி

பாதகநாசனா பரமகிருபாசனா
சாதகமோசனா தாமப்பிரயோசனா ஆதரி

சரணங்கள்

1 என்பழிமறைப்பதில் யானை தப்பா தாளம்
இதறப்பழிதூற்றலில் என்வாய்பெரியமேளம்
அன்பின்மனப்பேராசை அம்டவியினும்நீளம்
அண்டம்வசமானாலும் அடங்காப்பொருள்வேதாளம்

ஆட்டிமயல்வலை பூட்டுமனுதினம்
கோட்டிசெயும்வினை ஓட்டி அடியனை ஆதரி

2 ஓடி அலையநெஞ்சுக் குலகமுமவானும்அற்பம்
உன்னிடம்வாவென்றால் ஒழியாதஅசகசர்ப்பம்
தேடிநற்கருமங்கள் செய்வதுங்கஜகர்ப்பம்
தீவினைசெய்வதேஎன் சிந்தையின்சங்கற்பம்

திருத்தமுடனேஎன் கருத்துநலமிசைப்
பொருத்தமுறச்செய்து வருத்தந்தொலைத்தெனை ஆதரி

3 என்குறைகாணவென்றால் என்னிருகண்ணும்ஊனம்
இதரர்பிழைகாணக்கண் இரவிகோடிசமானம்
வன்மொழிகளுக்கென் வாயேமுக்கியஸ்தானம்
மதுரச்சொல்பேசுவென்றால் மாறுதீர்க்கமோனம்

வாதமொடுபல பூதகாரண
வேதநாயக நீதனே எனை ஆதரி

---

50. இராகம்-நாதநாமக்கிரியை, திரிபுடைதாளம்.

பல்லவி

உன்னைநம்பினேன் ஐயனே எனையாதரி உன்னை

அநுபல்லவி

உன்னைநம்பிஏழை தன்னைமுகம்பாராமல்
அன்னைபிதாவேநீ கைவிடலாமா

நான் கெடலாமா
துன்பப் படலாமா உன்னை

சரணங்கள்

1 தனமுமின்னார்கள் புவனமும்உலகவாழ்வின்
கனமும்வேண்டிலேன் இதுதோராயோ
தினமும்உனைக்கருது மனமும்உனதுதரி
சனமும்வேண்டினன் அருள்கூராயோ

மருள் தீராயோ
பொருள் தாராயோ உன்னை

2 படிமீதினில்எண்ண முடியாவுதவுகள்
அதுவேனுறச்செய்த பெரியோனே
கொடியேன்உனை அரைநொடியாகிலுந்தொழும்
படியே அருள்நலம் பிரியானே

தூயர்க்குரியானே
தீயர்க்கரியானே — உன்னை

3 அயமேபெருங்கல்லின் மயமேயெனும்இரு
தயமேமெழுகென உருகாதோ
ஸ்வயமேபரமாதி சயமேவேதநாயகன்
நயமேவினைசெல்வம் பருகாதே

துன்புகரு மாதே
இன்புபெரு காதே — உன்னை

---

### 51. இராகம்-பந்துவராளி, ரூபகதாளம்.

பல்லவி

கடைக்கண்ணால் எனைப்பாராய் உன
தடைக்கலம் வினைதீராய் — கடை

அநுபல்லவி

கிடைக்கொண்ணாப் பதந்தாராய்
படைக்கவே அருள்கூராய் அருட்
கொடைக்குநானென்னவே யவதரித்த
கோலாகலா மூல அநுகூலா குணசீலா நிதம் — கடை

சரணங்கள்

1 வஞ்சகமாயையில் ஆழ்ந்தேன் ஒரு
தஞ்சமென்றுன்னடி தாழ்ந்தேன்
அஞ்சலென்றேயெனை ஆதரித்தாளுவாய்
ஐயாமிருபொய்யால்மனம நையாதருள்மெய்யா ஒரு — கடை

2 ஐயனேதீரா யென்பாபம் அருள்
செய்யஉனக்கென்ன லோபம
வையகமாதிவர் அண்டமெலாவினும்
வாசா புவநேசா மஹாநாசா பிரகாசா ஒரு — கடை

3 அஞ்சலெனில்உன் வாய்கோமோ ஏழை
நெஞ்சம் வருந்திடலாமோ
பஞ்சமோகைப்பொருள் கொஞ்சமோபூபரி
பாலா அநுகூலா ஒரு மேலாமுதல் தூலா ஒரு கடை

4 இத்தரைமீதினில் நீயே நல்ல
பத்தரைக்காக்க வந்தாயே
சித்தமுவந்தெனை நித்தமும்ஆளெளிர்
தேகாகனயோகா அதிதியாகா தனியேகா குளிர் கடை

5 பூதலம்போற்றும் பொற்பாதா அரு
மாதவஞானப் பிரசாதா
வேதநாயகன் பாடுந்தமிழ்க்கருள்
வேதா உயர்நீதா கனதாதா நயபோதா உன் கடை

---

## 52. இராகம்-அசாவேரி, திரிபுடைதாளம்.

பல்லவி

பாசத்தால்மனம் வாடினேன் உந்தன்
வாசத்தால்மலர் கூடினேன் பாச

அநுபல்லவி

நேசத்தோர்கள்கை வல்லியமேஉயர்
நிர்மலாநித்த துல்லியமே கன
மாசற்றோங்கும் பிரபல்லியமே ஜெகம்
மகிழும்பக்தவாற் சல்லியமே மல பாச

சரணங்கள

1 நினைவிலேன் பிழையாவுமே என்ன
நினைக்குந்தாளென்ன சாத்தியமா
எனைவருத்தும் இந்திரியப்பேய்தனக்
கித்தனை ஆகாத்தியமா
வினைஎனக்கு விரோதியா என்றும்
விலகிடாக்கர்ம வியாதியாகொடு
கனமுமேபிரதி வாதியா கெட்ட
மாயைஎன்ன தாயாதியா பாச

2 இருதலைக்கொள்ளி எறும்புபோலெனக்
 கிடைவிடாமன வாட்டமா
மருவும்பந்தப்பசாசு தன்னோடு
 மாறிடாதபோ ராட்டமே
மருமமாய விகாரமேசெய்யும்
 கலகஜாலம் விஸ்தாரமே நல்ல
தருமம்எனகருத் தூரமேபின்னும்
 தப்புக்கள்கப்பற் பாரமே ஐயா — பாச

3 வளர்கல்லியாதூத்தில் தாசுபூட்டிட
 மறக்குமூடர்கள் போலவே
தளர்பிரபஞ்சவி யாபாரத்தால் உந்தன்
 தாள்மறந்தனன் சாலவே
உள்வியாதிக்கா ரோக்கியமே நிதம்
 உண்ணுவோர்கள் மனோக்கியமே
விளையுமாமறை வாக்கியமேதொழும்
 வேதநாயகன் பாக்கியமே பந்த — பாச

---

53. இராகம்-கன்னடகௌளம், ஆதிதாளம்.

பல்லவி

ஆதிபரமநாதா ஞானஜோதிதா ஓண்ணுதா

அநுபல்லவி

பூதலம்பரவும் விநோதனே கன
அநிதமாயஇருள் பேதமாகவே — ஆதி

சரணங்கள்

1 காமக்குரோதமதம் லோபம் அகங்
காரம்பொய்மாற்சரியங் கோபம் இன்னும்
பூமியிற்பலபாவம் செய்யும்
பாலன்மனம் அவித்தியாரூபம நலல — ஆதி

2 பெண்டுபிள்ளைகள் சமுசாரம் முதற்
பேசும்லௌகீக வியாபாரம் தன்னில்
மாண்டுமேயோகாந்த காரம் தூயா
மாற்றியருள்வை நிர்விகாரம் நல்ல — ஆதி

3 பாவக்கடல்கடக்குங் கமலமேதொண்டப்
பயிர்கள்வருந்தெய்வ நீலமேகன்
நாவலர்போற்றிடும் நிர்மலவேத
நாயகாநானுன் அடைக்கலமேநல்ல ஆதி

---

54. இராகம்-கரகரப்பிரியை, ரூபகதாளம்.

பல்லவி

இந்தவரந்தருவாய் எனக்
கெந்தவரங்களு மில்லையென்றாலும் இந்த

அநுபல்லவி

சுந்தரமாகத் துலங்குந்தெய்வீகனே
சந்ததமும்புவி தாங்கும்நிர்வாகனே இந்த

சரணங்கள்

1 காயநிமித்தங் கலங்கினையாமல்
கண்டவர்க்கெல்லாம்நான் தொண்டுசெய்யாமல்
மாயப்பிரபஞ்சத்தில் மாட்டிவையாமல்
மாதர்கண்ணம்பென் மனத்தில்வையாமல் இந்த

2 எங்கெங்குமேஉன் னுருவமாய்மின்ன
எண்ணம்வேறின்றி உனைநினைமுன்ன
மங்களநாமமென் வாய்நிதம்பன்ன
வார்த்தைகள்யாவுமுன் வார்த்தையாய்மன்ன இந்த

3 சுத்தசைதன்னிய நிலைமையில்சார
தோஷம்கர்மானுபந் தங்களுந்தீர
அத்தனேநித்த முனக்கன்புகூர
ஆனந்தவீட்டிலே நான்வந்துசேர இந்த

4 சூதுபொறாமைபொய் கோபமில்லாமல்
சோரமுலோபந்துன் மார்க்கங்கல்லாமல்
வேதநெறியை விலகிநில்லாமற்
வேதநாயகர் விளம்பச்செய்யாமல் இந்த

---

55. இராகம்-கமாஸ், ரூபகதாளம்.

பல்லவி

ஏகபராபரனே கருணைப்பிர
வாகமனேகரனே ஏக

அநுபல்லவி

தேகமுறும்பல மோகஉபாதிகள் யேகஎனக்கு
விவேகமருந்தருள் ஏக

சரணங்கள்

1 சஞ்சலமானேனே மனம்நொந்து
தளர்ந்துபோனேனே
அஞ்சலெனத்தானே அடியனை
ஆண்டருள்வாய்கோனே
பஞ்சபூதாதிபிர பஞ்சமெலாஞ்செய்து
தஞ்சம்செயும்நிஷ்பிர பஞ்சப்பொருளான ஏக

2 சங்கடமாற்றாயோ எளியேன்
தன்முன் தோற்றாயோ
இங்கிதஞ்சாற்றாயோ நமியனை
யேகரை யேற்றாயோ
அங்குமிங்கும்புவி எங்கும்உயிரெனத்
தங்கும்படிஅருள் பொங்குங்குணகர ஏக

3 நேயர்சகாயனே அருமறை
நீதிசொல் வாயனே
தூயநிகாயனே அமரர்கள்
சூழ்சமு தாயனே
மாயவிஷயாதி நோயணுகாமலே
தாயெனவேதநாயகனை ஆளும் ஏக

56. இராகம்-எதுகுலகாம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

கருணைகடாக்ஷஞ் செய்வாயே-சுவாமி கருணை

அநுபல்லவி

மருணைசமாகவே மகிழ்வாகநீயே கருணை

சரணங்கள்

1 அநியாயம் உலகவிர்த்தாந்தம்-இதில்
அழியாதவண்ணம்நீ அருள்வையுபசாந்தம்
தனிஉன்றனோடு மேகாந்தம்-கொள்ள
சார்வதாகாலமு மெனதுசித்தாந்தம் கருணை

2 நாமரூபகமாம் பிரபஞ்சம்-ஆன்ம
நன்மையை அழிக்கும் என்னுளும்இதுநெஞ்சம்
காமவிஷயாதிகளின் நெஞ்சம்-நாளும்
கலங்கினேனின்பாத கமலமேதஞ்சம் கருணை

3 போதாந்தநிலைமை யுறுவதே-நல்ல
புவனகோடிகள்செய் தளிக்கின்றகோவே
வேதாந்தரசமொழுகுகாவே-நிதம்
வேதநாயகன் இதயவண்டுவளர்பூவே கருணை

---

## 57. இராகம்-காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

ஆதிபரமநாதா நல்ல
அற்புதநற்பதம்பெறப் பொற்பதமெனக்கருள்செய் ஆதி

அநுபல்லவி

ஓதரும்உயிர்க்குயி ராகிஎங்கும்நிறையும்
பூதசராசரப்பொருள்கள் எல்லாம்உறையும் ஆதி

சரணங்கள்

1 ஜீவன்பிழைக்கும்வழி அறியேனே நான்
தெற்குவடக்கறியாச் சிறியேனே
பாவலகரிகொண்ட வெறியேனே பந்த
பாசக்களையைவெட்டி எறியேனே
ஆவலுடனேஎங்கும் அலைந்தகம்வெம்பினேன்
வேதநாயகனே உன்திருவடிநம்பினேன் ஆதி

2 ஐயனேஎனக்கருள் ஊட்டாயோ கெட்ட
அகங்காரமெனும்பேயை ஓட்டாயோ
உய்யவழிஎனக்குக் காட்டாயோ
உள்ளத்தில்உன்பதத்தை நாட்டாயோ
பொய்யுலகநடையைப் பொருளெனநாடினேன்
மெய்யறிவில்லாமலே மிகமிகவோடினேன் ஆதி

3 அண்டங்கள்படைத்தளித் தழிப்போனே கணம்
ஆகப்பல்கோடிகாலங் கழிப்போனே
தொண்டர்மனத்துயரம் ஒழிப்போனே நல்ல
சுகமுத்தரொடுகூடிச் செழிப்போனே
அண்டும்வேதநாயகன் அகத்தொளிர்ஜோதியே
மண்டும்வினைகளெல்லாம் மாற்றும்நீதியே ஆதி

58. இராகம்-பரசு, அடதாளசாப்பு.

பல்லவி

ஜெகநாதா வினை அகலாதா ஜெக

அநுபல்லவி

பகலோனென அருப்பல இருள்நீக்கும் ஜெக

சரணங்கள்

1 பரிதாபம்பரிதாபம் ஐயா என்நிலைமை
பஞ்சப்புலாதியர்க் கார்தந்தார்தலைமை
தரைமிசைஎன்செய்கை யாவுமேபுலமை
தந்தருள்ஞான சாஸ்திரப்புலமை ஜெக
2 அநுகூலசத்துரு வாகுமென்னுள்ளம்
அநுதினஞ்செய்வதெல்லாம் பெருங்கள்ளம்
தினமுமேபடிந்திடுந் தீவினைப்பள்ளம்
தீர்த்தெனையாட்டுவை திருவருள்வெள்ளம் ஜெக
3 ஈசனே அறநெறி எனக்கென்றும்விலக்கம்
என்பிழைகளை எண்ண இல்லையோ இலக்கம்
கூசியேநான்மிகக் கொண்டேன்கலக்கம்
குணவேதநாயகா கொடுத்தருள்துலக்கம் ஜெக

59. இராகம்-மத்தியமாவதி, திரிபுடைதாளம்.

பல்லவி

இரக்கஞ்செய்வாயே ஐயா என்மேல் இரக்

அநுபல்லவி

இரக்கஞ்செய்வாயோ புரக்கும்என்தாயே
ஏகமாகியேயோகபூரண மாகமேபெற மோகமேஅற இரக்

சரணங்கள்

1 தேகநிமித்தம் செய்வதனர்த்தம்
யேகப்பிரசித்தம் யெங்கினேன்சித்தம்
இன்பமேவிய நின்பதாம்புய
அன்புதங்கிட துன்பமங்கிட இரக்

2 நாறொருமுடன் நாயினுங்கேடன்
ஈனர்கள்சீடன் என்றும்பொய்வேடன்
ஈனமும்அவ மானமுங்கெட
ஞானமும்கன மோனமுந்தொட இரக்

3 உலகவியாபாரம் ஓயாவிசாரம்
கலகம்அபாரம் கர்மவிகாரம்
கஷ்டமும்கன நஷ்டமும்பெறு
துஷ்டனானை திஷ்டனாகவே இரக்

4 தாசர்கள்நேசா தர்மவிலாசா
பாசவிநாசா பாக்கியப்பிரதேசா
பாதமேதொழு ர் வேதநாயகன்
மீதருள்மற வாதநாதனே இரக்

---

## 60. இராகம்-சங்கராபரணம், ரூபகதாளம்.

பல்லவி

பரனே பக்தர்சுதந் தரனே நாளும்
பக்ஷம்வைத்தென்னைசம் ரக்ஷணைசெய்தருள் பர

அநுபல்லவி

இரவிகோடியென ஒளிவீசிடும்
யேகஅநேக வைபோகநிகர்த்தேகா தற் பர

சரணங்கள்

1 உன்னையல்லால்கதி பின்னையில்லையென்
றுனக்குத்தெரியாதா நாளும்
உற்றதன்பிள்ளையைப் பெற்றதாய்தள்ளின்
உலகஞ்சிறியாதோ மேகம்
தன்னைப்பயிர்வேண்டு முன்னே அருமழை
தானேசொரியாதா அந்தப்
தன்மைபோல்நீஉயர் நன்மையுதவிலென்
தாபம் மரியாதா

இந்நிலமீதினி லென்னைப்போலோர்ஜடன்
இல்லையேபைங்கிளிச் சொல்லையுற்றருடன்
மன்னமோகக்கடல் தன்னில்விழும்விடன்
மாளுமுன்னாளும் வந்தாளுவதுன்கடன் பர

2 நீவிய அண்டங்கள் மேவிய ஆகாயத்தில்
நிற்கச்செய்தாய்நீயே உந்தன்
நெஞ்சம்உன்தாளிணைக் கஞ்சம்படிந்திட
நீவரம்ஈவாயே உனக்
கோவியமோஇது காவியங்கொள்ளாரும்
உத்தமஎந்தாயே எனக்
குன்னைத்தருமட்டும நின்னை அல்லா
தொழியுமோ என்வாயே
தீவினைநாச னெனப்புகழ்மாலையே
சேர்ந்தஉனக்கென்ன சாந்தர்கண் வேலையே
பாவியென்பானுண்டு வேலைபல்காலையே
பட்டேன்பொய்விட்டேன் கும்பிட்டேன்உன்காலையே பர

3 நீதகலும்பஞ்ச பூதம்வளர்சர்வ
சாதகபூமியே வினை
தீர்ந்திடவேஞானக் காந்திசொரியும்
சர்வாந்தரியாமியே என்றும்
வேதநாயகன்மீ தருள்மறவாத
ஸ்வாமியே உண்மை
விளங்கவேபல வளங்கள்சாரும்நிஷ்
களங்க நேமியே
போதனேநீககாயென் பாதகவெட்டையே
பொய்யுருவாகிய மெய்யெனுங்கட்டையே
நானேநீக்குமுன் சாதகநிஷ்டையே
நண்ணிடப்பண்ணுவாய் புண்ணியப்பிரதிஷ்டையே பர

---

61. இராகம்-எதுகுலகாம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

இன்னமும்பராமுகம் ஏதோஎந்தன்
முன்னம்வந்தாள் ஒண்ணுதோ இன்

அநுபல்லவி

தன்னவரைரக்ஷிக்கத் தானேகங்கணமே
கரித்தவனேஎனை ஆதரித்தல்வங்கணமே இன்

1 யார்க்கோசொல்லுவதுபோல் நீஅசட்டைசெய்யில்
எப்படித்தொலைப்பேன் என்கன்மக்கட்டை
மார்க்கமுடனேநீ மெய்ஞ்ஞானநிஷ்டைதரும்
மட்டும்நான்விடுவேனோ என் அலட்டை
மூர்க்கவினைகளுக்கு நானொருபேயே
மூடமனமுமாயையும் ஒருகையோ
தீர்க்கமாகஉனைநான் அடுத்ததுபொய்யோ
தெய்வமேநீகைவிடில் என்செய்வேன்ஐயோ    இன்னம்

3 தீனருக்குதவுவதே தியாகம் பெருஞ்
செல்வருக்கீவது துர்விநியோகம்
ஞானமுள்ளோர்க்குன் அருள்பிரவாகம் இன்னும்
நலம்அவர்க்கீவதில் என்னுபயோகம்
ஈனனானஎனக்கு ஞானசையோகம்
ஈவதுவேநல்ல தியாகப்பிரயோகம்
நானுன்சந்ததி அதிலென்னசந்தேகம்
நான்விடேன்விடேன் பூர்வார்ஜிதபாகம்    இன்னம்

3 பிள்ளைக்கும்தாய்க்கும் உண்டோபிணக்கு மிகப்
பெருகும்உன்கருணைக் குண்டோகணக்கு
கள்ளமயலுறு மென்மனக்குணக்கு நீக்கி
கனங்கொள்நன்மார்க்கத்தில் எனையிணக்கி
தள்ளரிதாகிய பரமசத்துவமே
சாக்ஷாதுலகெங்கும் விளங்குந்தத்துவமே
விள்ளரிதாகிய சர்வஞ்ஞத்துவமே
வேதநாயகன்தனக்குரிய சொத்துவமே    இன்னம்

---

62. இராகம்-ஸ்ரீராகம், அடதாள சாப்பு.

பல்லவி

வேதநாயகா நம்பினேன் உனை    வேத

அநுபல்லவி

ஏதமும்விபரீதமுங்கெட
நீதமுங்கன பேதமுங்கொடு    வேத

சரணங்கள்

1 தினமும்உன் பணிவிடையே நான்மறவாமல்
செயஅருள் நன்னடையே
இனமாகும் அருட்கொடையே வழங்கிட
ஏனின்னமுந்தடையே
கனமுமேலவர் இனமும்நிர்மல
மனமும்உன்தரி சனமுமேயருள் வேத

2 பொய்வளர்மெய்க்கும்பமே உடையுமுன்
போதிபுண்ணியா ரம்பமே
தெய்வநிராலம்பமே என்கவிகளைச்
செவிகொண்டு சிரக்கம்பமே
செய்குவாயுளம் வைகுவாயருள்
பெய்குவாய்வினை எய்குவாயுயிர் வேத

3 தயைசெயிற் பொல்லாங்கா எந்தனையாளத்
தாமதஞ்செயல் பாங்கா
பயன்உதவிடில்தீங்கா வேதநாயகன்
பரவுங்குண ராங்கா
நயமும்ஆணவ செயமும்நாளும் அ
பயமும்பாதபங் கயமுமேயருள் வேத

63. இராகம்-ஆகிரி, ரூபகதாளம்.

பல்லவி

நாதனே தயைபுரிவாய் எனக்குமெய்ப்
போதமா மழை சொரிவாய் நாத

அநுபல்லவி

தீதால்வரும்பர திவ்யகுணடம்பர
ஓதருஞ்சுயம்வர உலகமுடன் அம்பர நாத

சரணங்கள்

1 நண்ணிநல்வினைகளைப் பண்ணியறிகிலாத
நான்நரன்போலியா இந்த
மண்ணின்மிசை எனக்கும் புண்ணியமென்பதற்கும்
மத்தியில்வேலியா எந்தன்
எண்ணமெல்லாங் கறுப்பே
எனக்குன்னடி வெறுப்பே
பண்ணுதே நீமறுப்பே
பரிந்தாள்வ துன்பொறுப்பே நாத

2 என்பாட்டில் இயங்காமல் உன்பாட்டில்நீசும்மா
இருந்திடில்அநுதகுமா என்றும்
தன்பால்மகிழ்ந்தோனே இன்பூட்டுங்கதியுந்தன்
தயையின்றிக் கைபுகுமா எந்தன்
அன்பெல்லாம் வெறும்பேச்சே
அறமென்பது மேற்பூச்சே
துன்பப்பிரளயம் நீச்சே
தொல்புவியெங்கும் ஏச்சே நாத

3 தினையளவும்நன்னெறி தனையறியாதநான்
தீவினைக்கேயிலக்கா பாரில்
தீவினையன்றிமற்றெனையும் தினையுமென்னெஞ்சுக்கு
நீமாத்திரம்விலக்கா நன்மை
புனையும்நீதிப் பிரமாண
புவனைக்கொடி நிர்மாண
விசுவநித்திய கல்யாண
வேதநாயகன் பிராண நாத

---

64. இராகம்-பியாகு, ஆதிதாளம்.

பல்லவி

தஞ்சம்நீயே தயைபுரிவாயே தஞ்

அநுபல்லவி

அஞ்சலென்றேதினம் ஆளும்என்தாயே தஞ்

சரணங்கள்

1 தினமனவேதை சேர்ந்தநான்பேதை
உனதடிப்போதை உறஅருள்பாதை தஞ்

2 பாதபஞ்சன பண்டிதரஞ்சன
போதககஞ்சன புண்ணியநிரஞ்சன தஞ்

3 தருமசிங்காரா சருவசங்காரா
வரும்வேதநாயகன் மனஅலங்காரா தஞ்

65. இராகப்-பரசு, ஆதிதாளம்.

பல்லவி

நீயேகதிஎனக்குன் அருள்கூறேதந்தை
தாயேநினைஅல்லது துணையாரே நீயே

அநுபல்லவி

தூயகருணைமழை சொரிகாரே
சொல்லுஅறு நலமுறு தலமிசை நிலவென
மலஇருள் செலஅருள் அலரும் உதாரா நீயே

சரணங்கள்

1 முத்தியென்பதெவர்க்குள சமுதாயம்அது
முத்தர்மெட்டுக்கும்என்ப தென்னஞாயம்
நித்தியனேவிடுவேனோ என்தாயஃநீ
நீதியின்படிசெய்குவாய் விதாயம்
சத்தியனேவதோஎன் அபிப்பிராயம்
தகவெனதகமிசை மிகமங்புகஅரும்
இகபரசுகமருள் அகலஜகநாதா நீயே

2 வாழ்மனைதந்திடில் வேண்டாமேயென்று
மாநிலத்துண்டோ மறுப்பவர்தாமே
ஆழ்வேநீயெனது மனப்பூமேல்குடி
ஆகிடின்உனக்கென்ன குறையாமே
சூழநீகுடியுறில் வினைபோமே
துதிபுரிவிதியினர் கதியெனும்நிதிபெற
அதிதயைபதிவுறும் அதிசயயோகா நீயே

3 சாதகனேஎன்துயர் தெரியாதோநல்ல
சர்வாந்தர்யாமியெனும் பெரியாயோ
பாதகம்அறஅருள் புரியாயோபரி
பக்குவஞானமழை சொரியாயோ
வேதநாயகன்மனந் தரியாயோ
மிடலுறுசுடவரன் உடுபதிதடவரை
கடலிடமுடன்இடர் கெடஅடர்தேவா நீயே

---

66. இராகம்-பூபாளம், ரூபகதாளம்.

பல்லவி

தேவாதி தேவ திருவருள்
செய்தென்னை நீ காவே தேவா

அநுபல்லவி

ஜீவசம் ரக்ஷணைசெய்யும் கிருபநிதே
தினந்துஷ்டர்கள் இனஞ்சுட்டவர்
முனஞ்சிஷ்டர்கள் மனம் தொட்டமர் தேவா

சரணங்கள்

1 பாழுமனமேசுத்த பாஷாணம் பெரும்
பாபமென்றால் அதற்குக்கலியாணம்
வாழும்இன்றொழிந்து நிரியாணம் கிட்டி
வருமுன்னம் அருள்புண்ணியப் பிரமாணம்
ஏழையென்செய்கையுன்னில் எனக்குவரும்நாணம்
இறைக்குஞ்சுகம் அழைக்குந்தகை
தழைக்கும்படி பிழைக்கும்படி தேவா

2 அருள்செய்யுனை அலதுன்னைவிடுவேனோ
அன்றுமற்றோரைக் கும்பிடுவேனோ
மருவுமயலிற்சிக்கிக் கெடுவேனோ உன்பால்
வழக்கிரட்டிரக்கநீ பயப்படுவேனோ
மருள்செய்யும்பொருளைநீ வழங்கினுந்தொடுவேனோ
மனந்தந்திடும் அனந்தந்துயர்
முனஞ்சுனந்திடு கந்தங்கிட தேவா

3 துஷ்டபாலகங்கண தாரணனே பெரும்
தீயபசாகண மாரணனே
துஷ்டகண்டன் மந்திரோச்சாரணனே நாளுஞ்
சுயம்பிரகாச நிஷ்காரணனே
இஷ்டன்வேதநாயகன் ஏதவாரணனே
இணங்கண்டார்கள் கணங்கண்டிட
வணங்கும்படி குணங்கொண்டுயர் தேவா

67. இராகம்-நீலாம்புரி, ஆதிதாளம்.

பல்லவி

ஏகாதிபரனே அருள்புரி யோகாதிதரனே ஏகாதி

அநுபல்லவி

ஆகாமியமுலும் மகாமியன் அறும்
அகணிதசிற்பர அதிகுணதற்பர
இகபரநற்பத இணையறும் அற்புத ஏகாதி

சரணங்கள்

1 பழிக்குநான்குருபீடம் பத்தனைப்போலநான்
பரிப்பது வெளிவேடம்
அழிக்கும்பொய்வாய்ப்பாடம் கொடுமாயைக்கென்
அகமே நடனகூடம்
செழிக்கும் வரங்கள் ஈவாய்
சிந்தையிற் குடியாவாய்
தினகரசுந்தர திருவருள்மந்தர
அனகநிரந்தர அகிலதுரந்தர ஏகாதி

2 படியாககொடு நெஞ்சமா ஐயனே அது
படருந்துயர்க்குண பஞ்சமா
அடியேன்துயர்க்கொஞ்சமா வரப்பிரசாதம்
அருள் உனக்குப் பஞ்சமா
படியக்லாம் ஈன்றதாயே
பாரில்நற் கதிநீயே
பரமபவித்திர பதித உபத்திர
தருமசமுத்திர சகல விசித்திர ஏகாதி

3 சுரசேவிதபாதா மலரகித
கஜநவற்சல தாதா
வரதநாளகநாதா வேதநாயகன்
மனவால கியாதா
நரபரிபாலன் நயகுணவாதன்
நாகரீகத்துவ நாமமசத்துவ
போகபிரதத்துவ புண்ணியதத்துவ ஏகாதி

## 68. இராகம்-தன்யாசி, ரூபகதாளம்.

பல்லவி

நிச்சயம்இதுதானே மதி நீயருள்கோனே நிச்சயம்

அநுபல்லவி

நச்சுமரம்போல நானும்வளர்ந்தேன்
இச்சகந்தனில் இதயந்தளர்ந்தேன் நிச்சயம்

சரணங்கள

1 அல்லும்பகலும் பொருளில்மயக்கம்
அநித்தியசுகங்களே என்னிறுக்கம்
நல்லவர்சபை எனக்குநீக்கம்
ஞானவழியில் நானுந்தூக்கம் நிச்சயம்

2 துஷ்டர்களுடனே அன்யோன்யம்
துர்க்குணமெல்லாம் சர்வமான்யம்
இஷ்டம்வைப்பதுவே தனதான்யம்
ஈசனேஎனக் கறிவுசூன்யம் நிச்சயம்

3 தீதுறும்எனக் குனதுவேதம்
செவிடன்காதிற் சங்கநாதம்
வேதநாயகனே உன்பாதம்
விரும்பிவாழ்தலே பிரமாதம் நிச்சயம்

---

## 69. இராகம்-அடாணு தாளம்.

பல்லவி

கருணாசாகரா கனஉபகாரா
காத்தருள்வாய் கோவே கருணா

அநுபல்லவி

அருணோதயமென அடியர்க்குகாட்டும்
ஆத்மகோடிகள் உஜ்ஜீவன் அமுதூட்டும் கருணா

சரணங்கள்

1 நிச்சயஞானமே நினதுஸ்வாதீனம்
நீதராவிடில் எனக்கேதுமெய்ஞ்ஞானம்
அச்சயமில்லாமலே அபயப்ரதானம்
அருள்செய்யின் அடியனுக்கில்லைசமானம் கருணா

2 சிஷ்டன்போல்யாவர்க்குந் திவ்யப்பிரசங்கம்
செய்வதிலேளனைப்போ லவர்சிங்கம்
சட்டமாய்நடப்பதே சர்வவில்லங்கம்
சாமிநீஅறியாயோ தமியன்அந்தரங்கம் கருணை

3 எத்தனையோசெய்தேன் உனக்கபராதம்
இதுநிமித்தம்உனக் கென்மேல்விரோதம்
அத்தனேபிழைபொறுத் தாள்வதேநீதம்
அருள்புரியஇனி வேண்டாம்விகாதம் கருணை

4 தலைவன்இல்லாவிடில் தழைக்குமோராஜ்யம்
தரையிலேநீயல்லால் சகலமும்பூஜ்யம்
விலகிடாதருள்உயிர் விமலசாம்பிராஜ்யம்
வேதநாயகன்இன்னந் தான்எனவியாஜ்யம் கருணை

---

70. இராகம்-தோடி, ஏகதாளம்.

பல்லவி

தயைபுரியஇன்னந் தாமதமேது தயை

அநுபல்லவி

பயநிவாரணா பாக்கியபூரணா
உயரும்ஆரணா உலககாரணா தயை

சரணங்கள்

1 அத்தனேஒருசாணாகிய குக்ஷிக்
காகநான்ஊரெல்லாம் அலைந்துடும்பக்ஷி
நித்தமும்பேசுவேன் ஆயிரங்கக்ஷி
நீதிநெறியில்லா னிரக்ஷரகுக்ஷி தயை

2 தத்துவஞானத்தைத் தள்ளிவேபோட்டேன்
சாமிநான்இந்திரிய வாசலைப்பூட்டேன்
உத்தமம்எனக்கருள் பலதரங்கேட்டேன்
உதவிசெய்யாவிடில் உனைவிடமாட்டேன் தயை

3 சர்வவிநோத விசித்திரநிமாணா
சாசுவதமங்கள சுத்தகல்யாணா
பரமநித்தியானந்த பாக்கியஉக்கிராணா
பாலவேத நாயகபிரமாணா தயை

---

### 71. இராகம்-முகாரி, ரூபகதாளம்.

பல்லவி

காத்தருள்வாய்எனைக் காத்தருள்வாய் காத்த

அநுபல்லவி

சாஸ்திரம்வேதம் ஸ்தோத்திரமேசெய்ய
பாத்திரனேதயை நேத்திரனேதினம் காத்த

சரணங்கள்

1 ஆனாலும்என்பாபம் அநியாயம்
ஞானியைப்போல்நான்காட்டும் நடையேமுழுமாயம்
ஈனமுறுந்தமகுணங்கள் என்தனக்கேகந்தாயம்
தீனனென்மேல்நீகோபஞ் செய்யிலென்னஆதாயம் காத்த

2 மாதாநீஉன்மகனுன் மன்னவனீகுடிநானே
தாதாநீயாசகனுன் சுவாமிஅடியேனே
சாதகஞ்செய்சற்குருநீ தமியேன்சிஷன்தானே
ஆதாரமாகவுனை அடுத்துவந்தேன்சூரர்கோனே காத்த

3 வாக்குமனம்எட்டாத வாசாமகோசரனே
பாக்கியபலதான பரிபாலபரமேசுரனே
தேக்குமலவிருள்நாசஞ் செய்யும்உதயபாஸ்கரனே
ஆக்கும்வேதநாயக னுக்கிரகதாபரனே காத்த

---

### 72. இராகம்-தோடி, ரூபகதாளம்.

பல்லவி

வாவாஜகநாதா வாவாஜகநாதா வாவா

அநுபல்லவி

பாவங்களை நிர்மூலமாக்கப்
பரமார்த்தங்கள் கொடுத்துக்காக்க வாவா

சரணங்கள்

1 தர்மாதர்மந்தெரியேன் ஜெப
கர்மம்அனுசரியேன் உனைக்
கண்டால் இனிப்பிரியேன் வாவா

2 எனைவிடலாமா பல
இடர்படலாமா
இனையேதொடலாமா
வீணேகெடலாமா — வாவா

3 வர்மஞ்செய்தல் முறையா எந்தன்
வாழ்நாள்வளர் பிறையா
தர்மந்தனிற்குறையா இன்னஞ்
சலஞ்சாதித்தல் பொறையா — வாவா

4 ஆவோலிதமுகனே நித்திய
அகலானந்தசுகனே
மேலோர்கள் சதுகனேதயை
மிகும்வேத நாயகனே — வாவா

---

73. இராகம்-சஹானு, ஆதிதாளம்.

பல்லவி

கருணைநீசெய்யவேண்டுமே சுவாமி — கருணை

அநுபல்லவி

சரணுகதியென உனையடைந்தேனே
சாதகம்வேண்டியே உனைதொடர்ந்தேனே — கருணை

சரணங்கள்

1 மாயவாழ்வெனும் பெருவாரிதிச்சுழலே
மாட்டியேஅலைபடும் நானொருவிழலே
காயமாகிசிறு காற்றசைகுழலே
கழியும்போதுநற் கதிமலர்கழலே — கருணை

2 சலத்தையல்லது தாமரைக்குண்டோநிலையே
தரையின்றூன்ருய்ப்பயிர் எடுக்குமோதலையே
நிலத்திலேநீயலால் நிலையெனக்கிலையே
நிதமும்பார்த்தருள் நிரஞ்சனமலையே — கருணை

3 சந்திரசூரியர் உள்ளமட்டும் வாழ்நாளா
சாவையேஜெயித்திட என் கையில்வாளா
தந்தையேஎனது சோதனைக்குநான்ஆளா
சர்வசாதக பரமதயாளா — கருணை

4 அகணிதகுண அகிலாண்டவிலாச
அபரிமிதானந்த தற்பரமேசா
விகசகிருபாகர விமலபிரகாசா
வேதநாயகன் இதயநிவேசா கருணை

---

### 74. இராகம்-சுசமகேசி, ரூபகதாளம்.

பல்லவி

அபயம்நீயருளுவாய் ஆதியே அநுதினம் அப

அநுபல்லவி

உபயபாதம் நம்பினேன் ஓ அநாதியே அநுதினம் அப

சரணங்கள்

1 அலைகடற்சிறுதுரும்புபோலே அலைந்துவாடினேன்
உலைமெழுகெனஉள்ளமுருகி உன்னைநாடினேன் தினமும் அப

2 நீர்குமிழியைநிகரும்வாழ்வை நிலையென்றெண்ணினேன்
மூர்க்கமாககொடியபாவமுழுதும பண்ணினேன்தினமும் அப

3 பாசக்காற்றுப்பஞ்சுபோலப் பறந்துதயங்கினேன்
ஆசைக்கடலில்மூழ்கிமூழ்கி அறிவுமயங்கினேன் தினமும் அப

4 ஆண்டவனீஅடிமைநான் எனை ஆளவொண்ணாதோ
நீண்டவுலகம்ஏழையென்றெனை நிந்தைபண்ணாதோ தினமும்

5 புவனரக்ஷணகாரணார்த்த புருஷவேஷனே
பவவிமோசனவேதநாயக பலவிசேஷனே தினமும் அப

---

### 75. இராகம்-பியாகடை, ஆதிதாளம்.

பல்லவி

ஏதோசோதனை இன்னம்என் சாதனை
ஏகாதிபதியேநிதியே எளியேன்மேல் ஏதோ

அநுபல்லவி

போதோதயசுர பூஜிதபாதா
பூதபேதகாரண சுகநாதா ஏதோ

சரணங்கள்

1 தந்தைதாயொடு பலதனையரைஎடுத்தாய்
தாரங்கள்மூவர்க்குச் சாசுவதம்கொடுத்தாய்
சொந்தமாகியஉடற் சுகத்தினைக்கெடுத்தாய்
ஸ்வாமிநீயிந்த வாறுகைபிடித்தாய் ஏதோ

2 ஒருகையால்அடிப்பாய் ஒருகையாற்பிடிப்பாய்
உதவியில்லாமலே உன்னெண்ணமுடிப்பாய்
பெருமலைகளையுமே பிடிங்கிப்பந்தடிப்பாய்
பிரமாண்டங்களைப் பிளந்திடஇடிப்பாய் ஏதோ

3 துன்பஞ்செய்வதுபோல் சுகங்களைக்கொடுப்பாய்
துஷ்டர்கள்மீதில் எப்போதுங்கையெடுப்பாய்
அன்புள்ளதாயைப்போல் அடியாரைஅடுப்பாய்
அவர்களைத்துயரணு காமலேதடுப்பாய் ஏதோ

4 அதுலஅக்ஷயகுரு பராராவேஷா
அமிர்தவருஷ தல்லியமிருதுபாஷா
விதுரநிர்தோஷா நிர்விகற்பவிசேஷா
வேதநாயகவந் திதகுணபூஷா ஏதோ

---

76. இராகம்-தோடி, ஆதிதாளம்.

பல்லவி

ஏதுபராமுகம் ஏழையென்மீது
ஏகனேயோகனே மாகனேதியாகனே ஏது

அநுபல்லவி

வேதபோதக அநாதரக்ஷணனே
மேகவாகன தெய்வீகலக்ஷணனே ஏது

சரணங்கள்

1 அநித்யசுகந்தம் அதைநான்கேட்டேனோ
ஆனந்தந்தனில் அனுபவிக்கமாட்டேனோ
இனித்தஉன்பாதத்தில் இதயம்நாட்டேனோ
ஈனமாயை எதிர்த்துவாட்டேனோ ஏது

2 ஐயனேஎன்னைக் கேளாமல்முன்நீயே
அரியமானிடஜென்மம் தந்தாயே
வையகமீதுநான் உனக்கொருசேயே
மதியருள்வாய்பெற்று வளர்ந்திடுந்தாயே ஏது

3 முந்திநீபலருக்குக் காட்டினுபனையே
முக்தர்க்குக்கொடுத்தனை மோக்ஷமாமனையே
பந்தியிலாகுமோ ஓரவஞ்சனையே
பக்ஷமாயெனக்கருள் பரசுகந்தனையே ஏது

4 அகடகடன சாமர்த்தியப்பிரதாபா
அசலசுஜநவாற் சல்லியநிஷகோபா
சகலசுலக்ஷண தததுவசொரூபா
தாசன்வேதநாயகன் மனேநிபா ஏது

---

7.. இராகம்-கமாஸ், ஆதிதாளம்.

பல்லவி

ஆரணமயநய பூரணனே
உன்கமல அடிசரணம் ஆரண

அநுபல்லவி

பாரகோரபரி காரகுணகர ஆரண

சரணங்கள்

1 உனைநிதம்நினைவுறும் எனைஅடர்வினை அகலாதா நாதா
உலகமலகமயல்விலக இலகருணை நீதா
கனஉலகஜநப அந்ததிகரமெய்
காவலா அடியேனுக் காவலா அருள்செய் ஆரண

2 துரிதரஹிதகுணசரித சுகிர்தபரமேசா நேசா
சுஜன பஜனமிர்து வசனரசின இதிகாசா
சரதவாத அனவரத விரத்தர
சாபவிமோசனபிர தாபவிலாசன ஆரண

3 கனககனபுவனகவன பரிபாலா மூலா
கரணசரணகுணகிரணபரண அநுகூலா
விநயநிலயஸ்வய விஜயமயஅபய
வேதநாயகன் மனோதயஅதிதய ஆரண

### 78. இராகம்-ரீதிகௌளை, ரூபகதாளம்.

பல்லவி

சரணஞ்சர்வேசா எனைரக்ஷிக்கத்
தருணமிதுபிரகாசா சர

அநுபல்லவி

கருணாலயபர காயப்பிரவேசா
பரமசுகோதய பாபவிநாசா சர

சரணங்கள்

1 நீயேகுருமூர்த்தி உனக்குச்சிறு
நாயேன்வித்தியார்த்தி
தூயஉபதேசஞ்சொல்லி இஷ்டபூர்த்தி
ஈயிற்குருசீஷர் இருவர்க்குங்கீர்த்தி சர

2 நீதான்பரஞ்சோதி எனஉலகின்
மீதேபெருங் கியாதி
வேதமிளவிருள் விலக்குதல்நீதி
ஆதாரமாக உன்னருளைப்பிரசாதி சர

3 ஆதிகாரணநாதா பரமஞான
ஜோதிமய அபேதா
பாதகமோசன பாக்கியப்பிரசாதா
நீதவேதநாயகா நித்தியசங்கீதா சர

---

### 79. இராகம்-லலிதா, ரூபகதாளம்.

பல்லவி

இன்னந்தாமதம் ஏது கஜநாதா இன்

அநுபல்லவி

நன்னயமதாகஉனை நம்பினவனுன் அலவோ இன்

சரணங்கள்

1 சீலம்அருளிற் செலவோ
சேயுனக்கு நான்அலவோ
மேலுமென்னதான் சொலவோ
வேலையுனக்குப் பலவோ இன்

2 சாதுஜன ரக்ஷணனே
தாசர்கள்பிர தக்ஷணனே
கீதாமிர்த பக்ஷணனே
கீர்த்திகொள் சுலக்ஷணனே இன்

3 ஈசனேநான் உன்னடிமை
எப்பொருளும் உன்னுடைமை
நேசமுடன் என்மடமை
நீக்கிடுவ துன்கடமை இன்

4 சாதக குணபரணு
சர்வபுவ நாதரணு
வேதநாயகன் ஸ்மரணு
வேதூரித ஹரணு இன்

---

80. இராகம்-கெங்தாரணி, ஆதிதாளம்.

பல்லவி

உனைநானே தொழுவரம் அருள்கோனே உனை

அநுபல்லவி

விநயசுஜன சேவித பெருமானே
வேதமுடிவில்நடனம் புரிவோனே உனை

சரணங்கள்

1 சிந்தைமீதுனது பாதமேதியானம்
செய்யநீயருள்வாய் திவ்யஞானம்
தந்தைநீயறிவுமே சமஸ்தானம்
தனயன்மீதில்லையோ அபிமானம் உனை

2 ஈசனேயெனது வார்த்தைகள்பொய்யே
இந்தவார்த்தையொன்று மாத்திரம்மெய்யே
பாசமூடுமனம் வெயிலுறுநெய்யே
பாவம்நீங்கும்படி நீதயைசெய்யே உனை

3 அடருமலசலாதிகள் நிறைபேழை
ஆலயமான உடலாகியபாழை
திடமென்றெண்ணி நிறைப்பேன் அதிற்கூழை
சினஞ்செய்யாதே நான்மிகயேழை உனை

4 சகலலோகம் அடங்காதுயர்காத்ரா
சமமிலாக்கபட நாடகசூத்ரா
சுகப்பிந்தாயக கிருபாகரநேத்ரா
துதிசெய்வேத நாயகன்மனக்ஷேத்ரா உனை

---

## 81. இராகம்-பூரிகல்யாணி, ரூபகதாளம்.

பல்லவி

கருணாகர மூர்த்தி காப்பதுவேகீர்த்தி கருணா

அநுபல்லவி

அருணோதயமா சரீர
அற்புதாவதார கருணா

சரணங்கள்

1 தேகம்வளர்ப்பதே என்கீர்த்தி
தினந்துர்க்குணமே பிரவர்த்தி
ஏகமான சக்கரவர்த்தி
எனக்குநீயருள் பாபநிவர்த்தி கருணா

2 அற்பமான போகயோக்கியம்
அழிந்துபோம்இது வேதவாக்கியம்
தற்பராநினைக் காணும்பாக்கியம்
தந்திடில்அது சர்வசிலாக்கியம் கருணா

3 பாதகந்தனைச் சர்வநாசம்
பண்ணுவதில் உண்டோபிரயாசம்
வேதநாயகா நின்னேசம்
விளங்கிடஅருள்வாய் பிரகாசம் கருணா

---

## 82. இராகம்-பரசு, திரிபுடைதாளம்.

பல்லவி

சித்தம் எப்படியோ ஐயாநின் சித்தம் எப்படியோ சித்த

அநுபல்லவி

உத்தமனாகவென்னை உயர்த்திடுவாயே
கர்த்தனேநீயென்னைக் கைவிடுவாயோ சித்த

சரணங்கள

1 அருள்புரிவாயோ அருந்தவப்
பொருள்சொரி வாயோ
தருமவானும்படி தான்தெரிவாயோ
இருள்மூடும்பாவியென் றென்னைப்பிரிவாயோ சித்

2 பாதம்சேர்ப்பாயோ எந்தன்மனக்
கேதந் தீர்ப்பாயோ
ஆதன்செய்வினை அடியோடேபார்ப்பாயோ
ஏதுங்கதிஇல்லானென் றிரங்கிப்பார்ப்பாயோ சித்

3 வாடிநொந்தேனே மெய்ஞ்ஞானக்கண்
மூடி நைந்தேனே
நாடியாள்வாயென்று நம்பிவந்தேனே
பாடும்வேதநாயகன் பருகுஞ்செந்தேனே சித்

---

83. இராகம்-சஹானா, அடதாளசாப்பு.

பல்லவி

எப்படியும்பரமே நலம்பெற
ஈந்தருள்வாய் வரமே எப்

அநுபல்லவி

செப்பருமாணிக்க தீபசொரூபனே
தேவேகனமேநொந்தேன் மாவேரெனவேவந்தேன் எப்

சரணங்கள்

1 கேவலம்வாடினேன் கேள்விமுறையில்லையோ எந்தன்
சீவன்பிழைக்கச்செய்ய வல்லவனீயல்லையோ
பாவனைஎனைப் பண்ணுதல்பாரமோ
பாகேகனியேசத்தே ஓகோதனியேவித்தே எப்

2 அற்பன்ஆனாலும் அன்னைக்குப்பிள்ளை அல்லவோ
பற்பலவாபடித்துப் படித்துச்சொல்லவோ
கற்பகோடிகாலங்கண்டு முடிவில்லாக்
கண்மணியேபொன்னே விண்ணேஅணியசொன்னேன் எப்

3 இன்பதுன்பங்கள் இரண்டுஞ்சமசித்தமே தந்து
நின்பதசேவைநிலைக்கச் செய்வாய்நித்தமே
அன்பன்வேதநாயகன் அகத்தேயணி
ஆணிப்பொருளேமுத்த காணப்படுவோர்சொத்தே எப்

---

84. இராகம்-கல்யாணி, அடதாளசாப்பு.

பல்லவி

உன்னையெனக்குக்காட்டையா காட்டாமல்சுமமா
ஒளித்தென்ன விளையாட்டையா உன்னை

அநுபல்லவி

தன்னைப்பாராமலே தன்பிள்ளை கண்மூடி
தனம்வைட்டுந்தாயுண்டோ சாமிநீதயைகூடி உன்னை

சரணங்கள்

1 கறவைதனைப்பிரிந்த கன்றுகதறல்போலும்
கணவன்தனைப்பிரிந்த கலங்கும்உத்தமிபோலும்
இறகுகள்பறிகொடுத் தேங்கும்பறவைபோலும்
இருகண்ணுந்தெரியாத ஈனக்குருடர்போலும்
ஏங்கினேன்சுகம் நீங்கினேன் துயர்
தாங்கினேன்மனம் நீங்கினேன்நீ உன்னை

2 நினைக்கநினைக்கஎன்னெஞ்ச மெல்லாம்ருசிக்கும்
நினைப்புகழும்வாயே நித்தியாமிர்தம்புசிக்கும்
கணக்கும்நின்னடிகாணக் கண்கள்தினம்பசிக்கும்
கர்த்தனேஉனைக்கண்டால் கவலையெல்லாம்நசிக்கும்
கனத்திலேனுங் கணத்திலேனுமென்
மனத்திலேனும் சொர்ப்பனத்திலேனும்நீ உன்னை

3 விண்ணேநினையல்லால் வேறொன்றைத்தேடுவேனோ
மேதினியெங்குந்தேடி வேதனைப்படுவேனோ
கண்ணேமணியேநினைக் கண்டால்நான்விடுவேனோ
கட்டிக்கொண்டானந்தங் கலக்கப்பின்னிடுவேனோ
கருத்தில்மூடுவன் வருத்தம்போடுவன்
நிருத்தமாடுவன் விருத்தம்பாடுவன் உன்னை

4 தேவனேஉன்னைக்கண்டால் கிட்டிதோஷந்தொடுமோ
திவ்யதேஜோமயம் என்தேகந்தனைச்சுடுமோ
கூவுங்கோழிமிதித்தாற் குஞ்சுமுடம்படுமோ
கொல்லுஞ்சிங்கமானாலும் குட்டிகள்அஞ்சிடுமோ
கோலனே அநுகூலனே பரி
பாலனேகன மூலனே நீ உன்னை

5 ஆணல்லபெண்ணல்ல ஐம்பூதஞ்சுடரல்ல
அரியயன்சிவனல்ல அதுவல்லஇதுவல்ல
காணருமுன்திவ்ய காந்திவிரியும்நல்ல
கனவடிவினைக்காணக் காதல்கொண்டேன்வல்ல
காரணாசுக பூரணாகுண
தாரணாகன ஆரணாநீ உன்னை

6 தேனேகனியே தெவிட்டாததெள்ளமிர்தமே
சீனியேகரும்பே தித்திக்கும்இரசமே
வானேபுவியேசுக வாழ்வேபெரும்பதமே
மதிக்கும்வேதநாயகன் மகிழுமனோகரமே
வாடினேன்கவி பாடினேன்உனை
நாடினேன்தினந் தேடினேன்நீ உன்னை

---

85. இராகம்-பங்காளா, ஆதிதாளம்.

பல்லவி

சஞ்சலமாய்நெஞ்சமிக உடைந்தேனே இனித்
தஞ்சமெனஉன்சரணம் அடைந்தேனே ஸ்வாமி சஞ்

அநுபல்லவி

வஞ்சப்பிர பஞ்சமெனும்
நஞ்சருந்தி மூழ்கியே. சஞ்

சரணங்கள்

1 இட்டவலைபட்டயரும் மான்போலேவெயில்
சுட்டஜலம்வெட்டகலும் மீன்போலேஸ்வாமி சஞ்

2 பொய்யுலகைமெய்யெனவே தடுமாறிநாளும்
ஐயகோமையலெனுங் கடுமீறிஸ்வாமி சஞ்

3 கொட்டுமத்திற்பட்டுடையுந் தயிர்போலேசலத்
தட்டுவாக்கெட்டுலரும் பயிர்போலே ஸ்வாமி சஞ்
4 பாய்புலியின்வாயில்உறும் பசுப்போலேபெற்ற
தாய்கரம்விட்டேஅகலுஞ் சிசுப்போலே ஸ்வாமி சஞ்
5 ஈயவேசகாயமொன்றுங் கிடையாதோநல்ல
தூயமனம்நீயருளத் தடையேதோ ஸ்வாமி சஞ்
6 மாயமலநோயகலும் விசுவேசா வேத
நாயகனேயமனுக்கு கைலாசர் ஸ்வாமி சஞ்

---

86. இராகம்-சுத்தசாவேரி, ரூபகதாளம்.

பல்லவி

தருணந்தருணந் தயைசெய்வாயையா ஓ
தேவ தேவா தரு

அநுபல்லவி

ஒருவனே ஜன்மஜய பாலா
ஓஓ மகானுபாவா தரு

சரணங்கள்

1 சித்தஞ்சேற்றில் நட்டகம்பம்
ஜெகத்தில்இதற்குத் தினமும்கம்பம்
நித்தங்கவலை நிறைந்தகும்பம்
நீயேயினியெனக் கவலம்பம தரு
2 சோதனைக்குநான் பாத்திரவானே
துன்பமூட்டை சுமக்கநானே
சாதகஞ்செய்யிற் பழுதுதானே
தள்ளினுலும்நான் போவேனே தரு
3 வயிறுவளர்ப்பதே என்வேலை
மற்றநேரம் விஷயலீலை
உயிருக்குயிரே ஞானப்பாலை
ஊட்டுவாய்தொழுதேன் உன்காலை தரு
4 சப்தஸ்பரிச ரசசுகந்தா
தர்மரூப பிர்மாநந்தா
வித்தகசுஜ நானுபந்தா
வேதநாயகப் பிரபந்தா தரு

---

87. இராகம்-தேவமனோகரி, ஏகதாளம்.

பல்லவி

இன்னமுந்தாமதமேன் என்சுவாமி இன்ன

அநுபல்லவி

உன்னதமாகிய துரியாதீதா
உலகாதிசர்வ மாரணபூதா இன்ன

சரணங்கள்

1 மழைமுகங்காணுப் பயிர்போலவாடி
மாதாதனைவிட்ட சேய்போலோடி
தழையும்உன்குண சரித்திரந்தன்னைப்பாடி
சாமிநானுனையடைந்தேன்கதி தேடி இன்ன

2 பத்தனைபோலநான் போடுவேன்வெளிச்சம்
பாவத்தின்கடனுக்கு நானொருமச்சம்
அத்தனேமுனியாதே கொண்டேன் அச்சம்
அருவினைபோக்கிநீ அருள்வாய்ஸ்வச்சம் இன்ன

3 அரசேநீயெனைக் கைவிடலாமா
அருளேசெயில் உன்கைப்பொருள் போமா
திருவரம்ஈயா விடில்வினைசாமா
தேவமனோகர திவ்யசோமா இன்ன

4 அனவரதசுகிர்த ஆத்மசொரூபா
அனந்தகல்யாணகுண அனகப்பிரதாபா
தினகர தினகர ஞகியதீபா
சிறியன் வேதநாயகன் இதயசல்லாபா இன்ன

---

88. இராகம்-சாமா, ஆதிதாளம்.

பல்லவி

உன்னைத்தவிர வேறென்னைத்தாங்கிடப்
பின்னைத்துணையிலை மன்னர்க்கரசே உன்னை

அநுபல்லவி

அன்னைக்கிணையாகிய கனபிரபுவே
உன்னர்க்கரிதாகிய மாவிபுவே உன்னை

சரணங்கள்

1 நீமுகம்பார்த்திடில் அணுவும்பர்வதமே
நீமுனிந்தால்பெரு மலைகளும்அதமே
தாமதம்நீசெயிற் பிழைப்பதெவ்விதமே
தயைநீபுரிய இச்சமயம்உசிதமே உன்னை

2 நீரை அடுத்தவர்க்கிலை ஜலகஷ்டம்
நின்னை அடுத்தவர்க்குண்டோ அதிநஷ்டம்
ஆரையடுக்கினும் உண்டோ அதிர்ஷ்டம்
ஐயாநினக்கன்பாக என்னிஷ்டம் உன்னை

3 ஊரார்மெச்சிடப் பாடுவேன்பாட்டு
உன்புகழ்பாடவென்றால் வாய்பூட்டு
சீராகியபெரியோர் சபைதீட்டு
தீயோருடன்எனக் கனுதினங்கூட்டு உன்னை

4 ஆதிமத்தியாந்த அபாவம்பிரகாரா
அண்டசராசர அகிலாதாரா
பூதிநிர்மாண நிர்வாகசங்காரா
போதவேதநாயகா புண்ணியசரீரா உன்னை

---

69. இராகம்-சுத்தசாவேரி, ஆதிதாளம்.

பல்லவி

நானே உனை நம்பினேனே-நலம
தானே அருள் கனவானே நானே

அநுபல்லவி

வானேஎனச்சுகத் தேனேபொழிந்திடும்
மன்னுபிர-சன்னுதினம்-என்னுவுறும்-முன்னுநிதம் நானே

சரணங்கள்

1 காயும்பலதுவாரக் கந்தல்-அதைக்
கார்க்கநான்போடுவேன் வாய்ப்பந்தல்
மாயவலையிற்பட்டு மதியும்விதியும்கெட்டு
மண்டுவினைகொண்டுமிக அண்டுதுயருண்டுதினம் நானே

2 அருணகோடிப்பிரகாச காத்திரா அதி
அற்புதவேதாகம சாஸ்திரா
கருணாநந்தநேத்திரா கனபக்தஜனதோத்திரா
காப்பாய்முகம்-பார்ப்பாய்வினை-தீர்ப்பாயடி-சேர்ப்பாய்நிதம்

3 விபுதகணவுந்திதச் சரணாளும
வேதநாயகன் அந்தக்கரணா
சுபமங்களதரணா சுஜநகுணதரணா
தூயாகன-நோயாபுவித்-தாரணசகாயா-நிதம் நானே

---

## 90. இராகம்-சஹானா, ஆதிதாளம்.

பல்லவி

இந்தவேளைவந்துன் அருள்தந்தருள்வாய் இந்த

அநுபல்லவி

வந்தநிரந்தரம் புரிந்தேன் ஐயனே இந்த

சரணங்கள்

1 அன்னைபிதாவுன்னையன்றிப் பின்னையாரையா
என்னைநிதந்தின்னும் வினை தன்னைத்தீரையா
மின்னுகின்றபொன்னுலகந் தன்னில்வாழ்மெய்யா இந்த

2 பூதலத்தில்ஆதரவுன் பாதத்துணையே
பேதகமாயேதுனக்கிங் கோதயினையே
தீதகலுஞ்சாதகர்க் கபேதத்துணையே இந்த

3 தீயநெஞ்சில்தூய அறத தோயஇல்லையே
மாயையெனும்பேய்செய் அநியாயமல்லையே
நேயன்வேதநாயகனுக் காயநிலையே இந்த

---

## 91. இராகம்-சாமந்தா, ஆதிதாளம்.

பல்லவி

மெய்ஞ்ஞானங்கொடுப்பாய் ஸ்வாமி
அஞ்ஞானந்தடுப்பாய் ஸ்வாமி மெய்

அநுபல்லவி

மெய்ஞ்ஞானியர் அல்லால்மேற்கருணை
பூண்டவனேயென் ஆண்டவனேநீ மெய்

சரணங்கள்

1 ஆஸ்திகள்பாஸ்திகள் யாவையும்வேண்டேன்
அநித்தியப்பொருள்நீ அருளினுந்தீண்டேன்
சாஸ்திரம்சொல்லும்வழி இனிதாண்டேன்
தருவெனநீண்டேன் திருவடிபூண்டேன் மெய

2 அகமேகட்டுக் கடங்காக்காளை
ஐயோவீணே அழிந்ததுநாளை
இகமேலேநம்பினேன் மலர்த்தாளை
என்னவோநாளை இதுநல்லவேளை மெய

3 அந்நியர்க்குரைப்பேன் நான்உபதேசம்
அடியேன்செய்கைகளே ஆபாசம்
என்னசொல்வேன்யென் இதயப்பசாசம்
இதற்குன்மேல்நேசம் இலையவ்லேசம் மெய

4 அத்தனேயெளியர்க் கன்னமும்ஊட்டேன்
அறுத்தகைக்குச் சுண்ணாம்புமேநீட்டேன்
உத்தமமார்க்கத்தில் உள்ளதைநாட்டேன்
உனைவரங்கேட்டேன் இனிவிடமாட்டேன் மெய

5 அவள்அவள்அதுவென அடங்காமூலா
அங்காததீத அபேதவிசாலா
சிவமுறுவேத நாயகன்அநுகூலா
ஜெகபரிபாலா சுசுமுறுசீலா மெய

---

92. இராகம்-பரசு, ஆதிதாளம்.

பல்லவி

தேவாதிதேவபல ஜீவாதிகாரனுஉன்
சேவடியைநம்பினேன் ஓ தேவாதி

அநுபல்லவி

நாதாநானேன்பல தேவாரம்பாடவே
நாதாவரம்நீதாகன தேவாதி

சரணங்கள்

1 அகஇருள்மூடினேன் மிகமிகவாடினேன்
அஞ்சாதேயென்றுசொல்லி அருளொண்ணாதோ
இகபரம்நாடினேன் சுகநிலைதேடினேன்
என்மேல்இரக்கம் உனக்கே நண்ணாதோ
பகவானேநீயென து முகம்நோக்கியேதயை
பண்ணியருள் புண்ணியர்தொழும் தேவாதி

2 அன்னையும்பிதாவும்நீ ஆவியும்உடலும்நீ
ஆசாரியன்கடவுள் யாவும்நீயே
முன்னும்நீபின்னும்நீ முத்திநீசித்திநீ
மூலாதிகாரணமும் மூர்த்தியும்நீயே
நின்னேச வாரியில் நான் எங்கேமும்பாடிய
நித்தியம்பல சித்தியருள் தேவாதி

3 ஏழைநான் அல்லவோ என்னதான்சொல்லவோ
ஈசாஎன்மீதுதயை எண்ணுவாயோ
பாழுடலைநம்பினேன் தாழுமனம்வெம்பினேன்
பாசாந்தகாரம் அறப்பண்ணுவாயே
சூழும்அடியார்கள்மனம் வாழும்வேத நாயகா
சுத்தமுறு சித்தம்அருள் தேவாதி

---

## 93. இராகம்-பலஹம்சா, ஆதிதாளம்.

பல்லவி

ஞானமார்க்கம் நானேசேர
நல்வரம் அருளையனே ஞான

அநுபல்லவி

ஈனஅசேதன இருள்வழிநீங்கத்
தானமுமோனமுந் தர்மமும்ஓங்க ஞான

சரணங்கள்

1 நீசனானும்உன் தாசனன் அலவோ
நின்னையல்லால்தெய்வம் இன்னமும்பலவோ
ஈசனேஎன்குறை எவரிடஞ்சொல்லவோ
என்மொழிகாட்டிலே எரித்திடுநிலவோ ஞான

2 கர்த்தனேஒழியாக் கவலைபிரபஞ்சங்
கண்ணியிற்பறவைபோற் கலங்கினேன்நெஞ்சம்
உத்தமகுணந்தர உனக்குண்டோபஞ்சம்
உன்னையல்லாலினி வேறில்லைதஞ்சம் ஞான

3 அமரர்நரர்சேரபன அமிர்தகக்ஷணனே
அனந்தபேதக ஜீவாத்மாக்ஷணனே
சரசஞானசற் குணசுலக்ஷணனே
தாசன்வேதநாயகன் பிரதக்ஷணனே ஞான

---

## 94. இராகம்-சஹானா, ரூபகதாளம்.

பல்லவி

உதவிசெய்யலாகாதா ஓ ஜகநாதா

அநுபல்லவி

நிதநிதம்உன திணையடிகளை
நெஞ்சில்நினைத்திட வரம்நீ உதவி

சரணங்கள்

1 அடியேன்துயர் படவேதகுமா
சுடமுன்னிருள் தானேபகுமா
கொடிதாகிய வினையால்நிலை
குலைந்தேன்மனம் மலைந்தேன் உதவி

2 மனைவாழ்வுறு துயர்தான்பலையே
உனையல்லது கதிவேறிலையே
அன்னையேகொடு வினையால்மனம்
அயர்ந்தேன் தினம்பயந்தேன் உதவி

3 சுரசேவித பரமேசுரனே
நரபோஷக கருணாகரனே
வரவேத நாயகனேகுண
வரனே பரம்பரனே உதவி

### 95. இராகம்-சாளங்கபைரவி, ஆதிதாளம்.

பல்லவி

உன்னைமறவாமல் எனக்கருள்வரமே
பரமே சுபகரமே உன்னை

அநுபல்லவி

பொன்னைநா டெளியர்போலும் எக்காலம்
அன்னைதனைமறவாப் பிள்ளைபோலும் உன்னை

சரணங்கள்

1 மங்களமாகப்பெரு வாழ்வுவந்தாலும்
சங்கமுடன்கன வாழ்வுவந்தாலும உன்னை

2 பூமண்டலம்எங்கும் புகழ்ச்சிவந்தாலும்
ஈமங்கொள்மலையென இகழ்ச்சிவந்தாலும் உன்னை

3 மகிழ்வுறவேவெகு மானம்வந்தாலும்
இகழ்வுறவேகன ஈனம்வந்தாலும் உன்னை

4 தலைகீழாஇத் தரைபுரண்டாலும்
அலைகடல்பெயர்ந்ததன் கரைபுரண்டாலும் உன்னை

5 அருமையாகிய சதானந்தநிலையே
மருவும்வேதநாயகன் மகிழ்கலையே உன்னை

---

### 96. இராகம்-கண்டா, ஆதிதாளம்.

பல்லவி

வா வா வா தேவே வந்தெனைக்
காவாயே கோவே வா வா

அநுபல்லவி

காவார்பூவே கலையோ பாவோ ஓவே தாவே
ஓ ஓ வேதாவே வா வா

சரணங்கள்

1 வனவேடன் வலையேமாட்டி மனநோயுறுங்கலையை
எனவேதுயர்அலையே சார்ந்தஎன் இடர்யாவையுந்தொலையே
வனமார்நிலையே மதியோர்கலையே
கனமார்குண மலையே வா வா

2 உடல்விழுந்திடுமுனமே பரனேஉனையே அநுதினமே
திடமானென்மனமே நினைந்தறம்செயவே அருள்கனமே
அடியார்தனமே அயலார்சினமே
படியார் தமக்கினமே வா வா

3 நினையாளென்மதியே உடல்நிதமும் செயும்சதியே
வினைதீர்த்துததியேபரவும் வேதநாயகன்நிதியே
அனைவோர்திதியே அருவாரிதியே
தனைநேர் பரகதியே வா வா

---

## 97. இராகம்-உசேனி, ஏகதாளம்.

பல்லவி

தருணம்ஈதையா இக்காலஹரணம் ஏதையா தரு

அநுபல்லவி

கருணையால்உலகனைத்துந் தாங்குபகாரா தீரா உதாரா
காணும்பிரபஞ்சம் தனிறகிக்கிக்
கோதும்என்னெஞ்சம் அனுதினம்
பேணும்பொய்வஞ்சகம் இனிஉந்தன்
மானடிதஞ்சம் எனைத்தொடர்
கருமந்தனையேநீக்கி தருமந்தனைநிலையாக்க தரு

சரணங்கள்

1 ஆண்டான்அடிமையை வேண்டாமெனத்தள்ளி
ஐயாபுகலினி ஏதுமிக
நீண்டநின்கால்களைப் பூண்டுகொண்டேன்
நீ எங்கினிச்செல்வதோது சற்றும்
தீண்டாதெனைத் தள்ளினாலும் விடுவேனோ
திருவே தருவே குருவே
தீனன்என்மீது நினதபி
மானம்விடாது தினமதி
யீனன்செய்தீது தொலையமெய்ஞ்
ஞானம்நீஓது பழுதறு
சித்தத்தமரும்கோவே கர்த்தத்துவமுறுதேவே தரு

2 நீயெனை நீங்கிடில் எங்கும்உள்ளோனே
நின்பெயர்குறைவாமோ அழுஞ்
சேயர்தமக்கமு தீயாதிருப்பாரோ
சிறந்தஅன்னையர் தாமேவரம்
ஆயிரந்தரங் கேட்டுக்கொடாதிட
அழகா குழகா பழகா
தற்றபொன்போலே நடையின்றி
முற்றமென்மேலே பலகலை
சுற்றிப்பொய்மாலே கொண்டேன்என்றன்
சிற்றறிவாலே நினைநிதம்
ஆளாய்ப்பலபுவிநாதா மாலா நலமுறுநீதா தரு

3 எத்தனைசொல்லினுஞ் சித்தம்நன்மார்க்கத்தில்
என்றும்பதிந்திட இல்லைமிக
இத்தரைஎங்கும் பிரசித்தனேசற்
றிளகச்செய்வாயிந்தக் கல்லைஉயர்
வித்தகனே வேதநாயகன்போற்றிடும்
வேதா நாதா அபேதா
இன்னும்பிரக்யாதா அடியேன்மேல்
இன்னமும்வாதா எனை அஞ்சல்
என்னஒண்ணாதா நின்காதில்என்
சொன்னுழையாதா அநுதினம்
வேதத்தமர் சர்வேசா தீதற்றனர் மனவாசா தரு

---

98. இராகம்-பூரிகல்யாணி, ஆதிதாளம்.

பல்லவி

நம்பினேன் உன்னையே கர்க்காத்தருள்
வெம்பியஎனையே அநுதினம்நம்பினேன் நம்பினேன்

அநுபல்லவி

அம்புவியெங்கும் நிரம்பும்பல்உயிர்க்
கின்பம்பொழிபுயலே உந்தன்செயலே
உண்டோ அயலே அனுதினம் நம்பினேன்

1 புவனகாரண பவநிவாரண நவ உதாரணனே
சம்பூரணனே மெய்காரணனே அனுதினம் நம்பி

2 கோரவினைப்பரிகார அகிலவிஸ்தார அதிகார
உபகார அதிதீரா அநுதினம் நம்பி

3 சுகுணசேகர மிகுமனோகர சுகிர்த சாகரனே
பராபரனே தயாபரனே அனுதினம் நம்பி

4 பஜிக்கும்தொண்டர்கள் புசிக்கபுசிக்க ருசிக்கும்
தேன்மயமே அதிசயமே அருள்மயமே அனுதினம் நம்பி

5 வேதநாயகனே போதமுறப் பிரசாதம் அருள்பொருளே
மனஇருளே தொலைத்தருளே அனுதினம் நம்பி

---

99. இராகம்-நாகத்தொனி-திசிரம், திரிபுடைதாளம்.

பல்லவி

தேவாதிதேவனே ஜீவனேபிர பாவனே தேவாதி

அநுபல்லவி

ஜீவாதிகாரனே தீரனே சூரனே
ஜெகத்தில் மனம்வாடி நொந்தேன்
மகத்துவேவனை நாடிவந்தேன் தேவாதி

சரணங்கள்

1 எங்கும்நிறையும்நீ எனக்குன்னைக்காட்டாய்
ஈதென்ன கண்கட்டு மாயமோ
அங்கும் இங்குமே உனைத்தேடி
அலையவைத்தா யிதுஞாயமோ
தங்குபதேசம செய்யாயின்மை
தான்அடியேன் சிறுபிராயமோ
எங்குலதெய்வமே தாயேதந்தையே
இதுதான்புத்திர நேயமோ கன தேவாதி

2 எத்தனையோபிழை செய்தேன் அப்பிழை
எண்ண உன்னாலும் கூடுமோ
கத்தனேநீ அருள்செய்தால் என்னோடு
கருமப்பேய் போராடுமோ
அத்தனேயென்பால் நீவரில்உந்தன்
அடிகள்வருந்தி வாடுமோ

இத்தலம்நீவரில் முத்தர்கள்சமுகம்
எங்கேஎன்றுனைத் தேடுமோஉயர் தேவாதி

3 அருளிற்பெரியநீ மருளிற்பெரியவனை
யாதரிப்பதுன் பாரமே
பொருளிற்பிரியனை யிருளுக்குரியனைப்
புரிந்தேன்துர் வியாபாரமே
ஒருமைப்பாடறு மனதுக்கேதினம்
ஊரெல்லாம் சஞ்சாரமே
திருஅற்புதனே வேதநாயகனே
செய்வாய்நீ உபகாரமேஐந தேவாதி

---

100. இராகம்-குந்தளவராளி, ஆதிதாளம்.

பல்லவி

நிதநிதம் உனையே தொழுதேனே
பதமலர் அருள்சேனே நிதம்

அநுபல்லவி

சுத்தவைபோகா சகலநிர்வாகா
மதுரப்பிரவாகா வரகுணயோகா நிதம்

சரணங்கள்

1 அறம்வர இலையே அகம்வரவிலையே
மறம்ஒருமலையே மனமொருநிலையே
புறமயல்வலையே புகு:திகலையே
துறவறநிலையே துயர்வினைதொலையே நிதம்

2 மலர்வலர்தீயே மனமொருபேயே
புலமொருநாயே புவிசொடுமாயே
பலவிதமாய் படர்வுறும்நோயே
தலமிசைநீயே தயைபுரிவாயே நிதம்

3 அடியவர்இனமே அருமலர்வனமே
கொடியவர்சினமே குறையறுதனமே
முடிவறுதினமே முறையுறுகனமே
அடிதொழுவேத நாயகன்தரிசனமே நிதம்

---

### 101. இராகம்-சாமா, ஆதிதாளம்.

பல்லவி

என்ன சொன்னாலும்நீ இரங்காதிருப்பது
ஏதோ குணக்கடலே — என்ன

அநுபல்லவி

உன்னதவகனே உலகநிர் வாகனே — என்ன

சரணங்கள்

1 இகசுகம் அநுசிதம் என்பதன் அபிமதம்
தகவுறும் உயர்பதம் தாவெனவே நிதம் — என்ன

2 இன்னமும் என்முனம் எனக்குநின் றரிசனம்
மன்னஎன்கண்முனம் வாவெனவேதினம் — என்ன

3 மாயை படாரந்திரம் மாறலர் தந்திரம்
நீயருட் சுதந்திரம் நீட்டென நிரந்தரம் — என்ன

4 உலகவியா பாரமே ஒழியா விசாரமே
கலகசம் சாரமே கவலை அபாரமே — என்ன

5 அருமறை வாசகா அடியர்பிர யோசகா
தருமப்பிர தாயகா தனிவேத நாயகா — என்ன

---

### 102. இராகம்-இந்துஸ்தான்-காப்பி, ரூபகதாளம்.

பல்லவி

நாதா அடியேன்மீதேன் கோபம் — நாதா

அநுபல்லவி

ஆதாரமாகவே அகிலத்தைத் தாங்கும் — நாதா

சரணங்கள்

1 தாரம்சுதர்இல்லாச் சந்நியாசிஎன்றேனோ
சீரூரில்லாப் பரதேசி என்றேனோ — நாதா

2 தந்தைதா யில்லாத் தனியர் யென்றேனோ
எந்தஉயிரும்பெற்ற இனியர் என்றேனோ — நாதா

3 மன்னும்கைப் பொருள்இல்லா வறியர்என்றேனோ
சின்னஅணுவும் நுழைசிறியர் என்றேனோ — நாதா

4 உரிய ஆண்பெண்ணல்லா ஒருத்தர் என்றேனே
விரியபலயுகங்கண்ட விருத்தர் என்றேனே நாதா

5 ஆதிஅந்தம்இல்லா அநாதி என்றேனே
சாதிகுலமில்லா நிர்சாதி என்றேனே நாதா

6 வீடுவாசல் இல்லா வெளியர் என்றேனே
ஈடன்னம் துணியில்லா எளியர் என்றேனே நாதா

7 மனம்புகுந் தொளிகின்ற மாயர் என்றேனே
உனும்நெஞ்சுக் கெட்டா உபாயர் என்றேனே நாதா

8 சகல உலகச்சுமை தாங்கி என்றேனே
மிகநார் அன்புக்கு வீங்கு என்றேனே நாதா

9 மற்றோர் கண்ணிற்படாத மானி என்றேனே
முற்றும்வாய் பேசாத மௌனி என்றேனே நாதா

10 குணமில்லார்களைக்காயும் கோபி என்றேனே
அணிஅங்க மில்லா அரூபிஎன் றேனே நாதா

11 சீர்பேர்இல்லா அநாம தேயர் என்றேனே
ஆரும்துணை யில்லா அபாயர் என்றேனே நாதா

12 மாதின்றி உலகீன்ற மாயம் சொன்னேனே
வேதநாயகா இன்னம் வேறென் சொன்னேனே நாதா

---

103. இராகம்-பியாகு, ஆதிதாளம்.

பல்லவி

உன்னைப்போல் எனக்குற்றபேர்கள் இந்த
உலகந்தனில் உண்டோ உன்னை

அநுபல்லவி

அன்னைதந்தை குருதேவே இந்த அகிலகாரண பிதாவே உன்னை

சரணங்கள்

1 தந்தைதாய்க்கு மனஸ்தாபம்வரில்
சாற்றுவார்கள் பலசாபம் மண்ணில்
எந்தநேரமுமே பாபம் செய்யும்
எனக்குநீசெய்வது லாபம் உன்னை

2 அண்ணன் தம்பிக்குண்டு பாகம் அதை
அடையுமட்டும் அவர்நேசம் பின்பு
எண்ணுவார்கள் பலதுரோகம் நீ
ஈவைநன்மைகள் அநேகம் உன்னை

3 மனைவிபாலர்க்கன்ன வஸ்திரம்தரும்
மட்டுமேஅவர்கள் மித்திரம் பின்பு
நினைவர்செய்வர்பல சூத்திரம் என்றும்
நீடும் உன்னருள் சமுத்திரம் உன்னை

4 வல்மன்னர்க்குண்டு திறையே அதை
ஈந்திடாதவர்க்குச் சிறையே உன்னை
மேவினோர்க்கில்லை குறையே தொழும்
வேதநாயகன் தன் இறையே உன்னை

---

## 104. இராகம்-காப்பி, ரூபகதாளம்.

பல்லவி

நாளே நல்லநாள் புண்ணியம் செய்யும் நாளே

அநுபல்லவி

ஆளும் வேதநாயகன் தாளினை பூசிக்கும் நாளே

சரணங்கள்

1 பாபமில்லாதகால க்ஷேபமும் சர்ஜனசல்
லாபமுமேபரம லாபமாகக் கொள்ளும் நாளே

2 வேதமும்பெரியவர் போதமும் தேவசங்
கீதமும் முதலான நாதங்களுடன் செல்லும் நாளே

3 ஞானமும் ஜீவாபி மானமும் பரன்பத
தியானமுமேசெய் மோனநிலையில் நிற்கும் நாளே

4 பத்தினி சுதர்கும் பத்தவர் யார்க்கும்
சித்தநிர்மலமுடன் பக்தி புரிந்திடும் நாளே

5 கூனர்குருடர்அங்க ஈனர்பிணியுடையோர்
தீனர்முதலியோர்க்குத் தானதருமஞ்செய்யும் நாளே

---

105. இராகம்-சாவேரி, ஆதிதாளம்.

பல்லவி

ஏதோ இன்னம்வாதோ இரங்காதோ உன்மனமே

அநுபல்லவி

வேதவரோதய விமலர்சந்திரோதய
வித்தகநயகுண உத்தமசிரேஷ்ட
பக்தர்கள்பழுதறு சித்தஅபீஷ்ட ஏதோ

சரணங்கள்

1 ஐம்புலவேடர்வேட்டை அடிநிரியுங்காட்டை
வெம்பாசப்பேய்வாழ்வீட்டை விரும்பியே துன்பமூட்டை
மேவிமனம்அயர்ந்தேன் நிலைமையில்லாப்
பூவின்சுகம்வியந்தேன் அநுதினமும்
பாவவழிநயந்தேன் இனிமேல்வரும்
சாவையெண்ணிப்பயந்தேன் நிரந்தரம்
தரைமுதலாகஎங்கும் விரியுங்சுந்தரமே
அரியகருணைமழை சொரியுங்கந்தரமே ஏதோ

2 தீயமனோவியாபாரம் தீர்த்திடவேயிந்நேரம்
நீயருள்பரிகாரம் நின்பதமேஆதாரம்
நேசஅபிமானஞ் சற்றுமில்லாமல்
பேசுவேன்ஞானம் எனக்குறவ
லேசம்அனுஷ்டானம் இலையேஉப
தேசசன்மானம் கொடுத்தருள்செய்
தினமனமகிழ்வுறு கனதிரவியமே
அனவரதமும்ஔிர் தினகரமே ஏதோ

3 நீர்க்குமிழெனவே நிலையாவாழ்வுகனமே
பார்க்குள்உனைஎனவே பரிந்தருள்வாய்கனமே
பாசம்குலையாத எனக்குமோகா
வேசம்கலையாதா உலகம்செய்யும
மோசம்தொலையாதா உன்மீதுகன
நேசம்நிலையாதா நிலைபெறு
நிதநிரஞ்சன அபேதசுகுணமே
வேதநாயகன்மனப் போதமர்—மனமே ஏதோ

## 106. இராகம்-பந்து, ஆதிதாளம்.

பல்லவி

நீயேசர்வசக்தன் நல்ல
நிச்சயனேகன அக்ஷயனே — நீயே

அநுபல்லவி

தாயுந்தந்தையுந் தமரும்அற்றாயே
மாயுந்தொழிலறு வாழ்வுபெற்றாயே — நீயே

சரணங்கள்

1 பல்லாயிரமண்டபம் படைப்பாய்உடைப்பாய்
எல்லாஉலகமுங் எள்ளினுள்அடைப்பாய் — நீயே

2 அஸ்திவாரத்தூண் அருஞ்சுவரிலையே
பத்தியாநீசெய்த பகிரண்டநிலையே — நீயே

3 பலபொருள்தாங்கிடும் பர்வதம்போலே
தலையண்டகோடிகள் தாங்குவாய்மேலே — நீயே

4 திருநெய்செப்பில்லாத் தீபங்கள்போலே
பரிதிசந்திரமீன் பலசெய்தாயே — நீயே

5 அண்டம்அகண்டம் அடங்காதசரீரம்
தொண்டர்கள்மனமலர் சிக்குமோபாரம் — நீயே

6 பாரபூதங்கள்உன் பணிசெய்யுஞ்சரியே
சூரியன்உனதுடற் சோதிமுன்கரியே — நீயே

7 யுகம்பலகோடிகள் உனக்கொருக்ஷணமே
நிகழுமுக்காலமும் நினக்குக்கிரகணமே — நீயே

8 சகலர்க்கும்ஊட்டித் தானொன்றும் உண்ணாய்
நிகழ்பெருங்காவலால் நித்திரைபண்ணாய் — நீயே

9 தினகரசந்திர தீபம்ஏற்றிடுவாய்
தனமுகிற்கடத்தால் மழையூற்றிடுவாய் — நீயே

10 நடவாய்பறவாய் நாடெங்குமிருப்பாய்
உடலாய்உயிராய் உவர்வாய்பொறுப்பாய் — நீயே

11 மரங்களினுழைந்தே மலர்தரகிளைப்பாய்
கரங்களில்லாதே கருமங்கள்விளைப்பாய் — நீயே

12 கண்ணுய்ப்பொருள்களைக் காட்டுவாய்பார்ப்பாய்
அண்ணுசகலமும் ஆட்டியேதீர்ப்பாய் நீயே

13 கனைகடல்உனதருட் கடலிலோர்திவலை
இனிவேதநாயகா எனக்கென்னகவலை நீயே

---

107. இராகம்-தோடி, ரூபகதாளம்.

பல்லவி

ஞானகுருபரவடிவே அருமறை நான்முடிவே ஞான

அநுபல்லவி

மோனசுகாசன சம்பிரமம்
முத்தியளித்திடும் நித்தியபரப்பிரமம் ஞான

சரணங்கள்

1 பரமனைஎன்மீதுனக்குக் கிருபைஇல்லையா எந்தன்
பாவந்தொலைத்தென்னை ஆளவுனக்கொரு மலையா
தாமதம்நீசெய்யா தேகம்எனக்கென்னநிலையா நிதம்
தஞ்சம்பதகஞ்சம்பிர பஞ்சம் தருநஞ்சம்தொலை ஞான

2 தீனகிருபாநிதியென்றுபேர் கொண்டநீ அல்லவா அருள்
செய்தெனைஆள்வதினுல் உனக்கியாதொருசெலவா
ஆனமலர்ப்பதம்அண்டும் நன்கிள்களநீஇலவாபுவி
அஞ்சும்புலன் அஞ்சும்பகை நெஞ்சம்செயும்வஞ்சம்தொலை

3 நின்மலநித்தியநிரஞ்சன நீகவிநோதாநாளும்
நிகியசராசரம்யாவையும் தாங்குமபிரக்கியாதா
தன்மவிலாசுகாநு பவானந்தநீதாளனைச்
சாடும்வினைவாடும்வழி பாடும்பரவீடும்குறி ஞான

4 நம்பும்அடியவர் துன்பம் அகற்றுங்குணுளா பவ
நாசமகேசபிரகாச விலாசதயாளா
அம்புவியில்வேதநாயகன் போற்றும்பொற்றுளா இங்கும்
அம்புவிளங்கும்புகழ் தங்கும்பகிரங்கம்பெறு ஞான

---

108. இராகம்-பரசு, அடதாளம்-சாப்பு.

பல்லவி

மெய்யிது மெய்யிது மெய்யிது தேவே — மெய்

அநுபல்லவி

ஐயையோ என்செய்வேன் அருள்புரிகோவே — மெய்

சரணங்கள்

1 மலர்ந்துனைபோற்றாத வாயனும்நானே
கலந்துநின்பணிசெய்யாக் காயனும்நானே — மெய்

2 கண்டுநீர்பெருகாத கண்ணனும்நானே
அண்டும்பாவியர்க்கெல்லாம் அண்ணனும்நானே — மெய்

3 நிதம்உனைநினையாத நெஞ்சனும்நானே
மதங்கொண்டுதிரிகின்ற வஞ்சனும்நானே — மெய்

4 கனிந்துனைச்சேவியாக் கரத்தனும்நானே
தினம்தினம்வணங்காத சிரத்தனும்நானே — மெய்

5 கருதியுன்புகழ்கேளாக் காதனும்நானே
சுருதியைமறுத்திடும் சூதனும்நானே — மெய்

6 கலகஆலயம்செல்லாக் காலனும்நானே
முடுகியவினைக்கெல்லாம் மூலனுமநானே — மெய்

7 போதஅபேத புனிதநிஷ்போபா
வேதநாயகன்தொழும் விமலசொரூபா — மெய்

---

109. இராகம்-சாமா, ரூபகதாளம்.

பல்லவி

பரப்பிரம்மமே திருவருள் தாக்கிரமமே அநுதினமும் — பர

அநுபல்லவி

வரகுண சுகாநுபவ
சுரகணபூஜித வைபவ — பர

சரணங்கள்

1 செய்வதெல்லாந் தீவினையே
தினையளவும் உனை நினையேன்
தெய்வமேநயபினேன் உனையே
தீர்த்தருள்வாய்துயர் தனையே — பர

2 அறியேன் மேற்குக் கிழக்கு
அன்புமில்லேன் நின் கழற்கு
சிறியேன்மேல் ஏன் வழக்கு
ஜெபதபத்தில் என்னைப் பழக்கு பர

3 பாழ்மனமோவல் விரும்பு
பாவம் ஆதற்குக் கரும்பு
தாழ்வுறுநான் சிறு துரும்பு
சாமியென்மேல் மனந் திரும்பு பர

4 நினையேன் தர்மம் அதர்மம்
நிலமிசைநான் மூட ஜென்மம்
அனையே எதின்னம் வர்மம்
அகற்றிடுவாய் எனது கர்மம் பர

5 அகண்ட மண்டலாதி பத்திய
ஆதியந்த ரகித நித்திய
மிகுந்தகுண பரண சத்திய
வேதநாயகன் ஸ்துத்திய பர

110. இராகம்-பியாக், ஆதிதாளம்.

பல்லவி

பாதம்நம்பினேனே போதம் அருள்கோனே பாதம்

அநுபல்லவி

வேதமுதலோனே மாதவர்பிரானே பாதம்

சரணங்கள்

1 ஆதரவுநீயே ஐயனே என்தாயே
வாதமலநோயே மாற்றி அருள்வாயே பாதம்

2 தீங்குகள் அநேகம் செய்திடும்என் துரோகம்
நீங்கிடவிவேகம் நீயருள்இமோகம் பாதம்

3 முத்தர்கள்சமுகனே முக்கியபிரமுகனே
உத்தமசுதனே ஓவேதநாயகனே பாதம்

111. இராகம்-கனகவசந்தம், ஆதிதாளம்.

பல்லவி

நீயே துணைபரனே-துன்பம்
நீங்கிட அருள்வரனே நீயே

அநுபல்லவி

மாயாதிமிர நீஜயதினகரனே
தாயாகியசர்வ சாதககரனே நீயே

சரணங்கள்

1 அடியேன்செய்வதெல்லாம் அரும்பாபம்
கொடியன்மீது கொள்ளாதேகோபம் நீயே

2 பண்ணேன்றுதியே யடியேன்விதியே
கண்ணேமணியே கதியேநிதியே நீயே

3 உனையேநம்பிடில் உண்டோபயமே
அனையேவினைதீர்த் தருள்வாய்ஜெகமே நீயே

4 மாதவம்உடையவா மகிழ்மலரகிதா
வேதநாயகன்தொழும் விபுதர்கள்சகிதா நீயே

---

112. இராகம்-பைரவி, திரிபுடைதாளம்.

பல்லவி

நாதாகன வேதாதினம் நீதாவரமே நாதா

அநுபல்லவி

போதாசுக தாதா அதி கியாதாபிர சாதாபுவி நாதா

சரணங்கள்

1 நித்தியம்அநித்தியம் சுகத்தினைமறுத்திடு
பைத்தியம்விடுத்தினிய சத்தியம்உதித்திடவே நாதா

2 சுந்தரமடந்தையர்கள் சந்திரமுகந்தனை
நினைந்தென்றுசிந்தனைசெய் தந்திரமொழிந்திடவே நாதா

3 சொப்பனமேஒப்பனைகொள் அற்பஉடலைபொருள்
எனப்பிரியம்வைப்பதற்கு நற்பலன்உவப்புதன நாதா

4 மாதர்கிதிபூதலமேல் ஆதரம்உறுதபடி
சாதகப்பிரபோதமருள் வேதநாயகன்புகழும் நாதா

---

### 113. இராகம்-நாதநாமக்கிரியை, ஆதிதாளம்.

பல்லவி

வேதநாயகனே மெய் மெய் மெய் வேத

அநுபல்லவி

பாதகம்செய்துழலும் பாழ்மதியே ஐயன்
பாதங்கள்அன்றி நமக்கார்கதியே
பூதலவாழ்வினொடு புகழ்கிதியே வெறும்
பொய் பொய் பொய் பொய் வேத

சரணங்கள்

1 அத்தமியாதொளிர் திவாகரனை அதி
அற்புதமான சிவாதரனை
சித்தமிசைஒளிர் சுதாகரனைத் துதி
செய் செய் செய் செய் வேத

2 பூதலம்எங்கும் இசைபோனவனை அதி
புனிதனைஉயிர்க் குயிர்ஆனவனை
மாதவர்காணுகின்ற மாதவனை உன்னுள்
வை வை வை வை வேத

3 நாதபூதபௌதிகஸ்தாபகனை வேத
நாயகன்மீதிலென்றும் ஞாபகனை
ஓதரிதானசிவ வியாபகனைப் பணிந்
துய் உய் உய் உய் வேத

---

### 114. இராகம்-கௌளிபந்து, ஆதிதாளம்.

பல்லவி

ஓஓ ஜெகநாதா ஒருதரம் உதவிடல் ஆகாதா ஓஓ

அநுபல்லவி

தேவே தினம்பல பலவேபாடி என்
நாவே இளைத்தேன் ஓ ஓ

சரணங்கள்

1 மனம்விஷப்பிரியம் சகலமும்
வாசா கைங்கரியம்
சினம்மதம்மாற் சரியம்பூண்ட என்
செய்கைகள் ஆச்சரியம்
இன்பமாகிய பக்தஜனமுடன் ஐக்கியம்
கனவிலும் நீங்காமல் ஓ ஓ

2 பொய்யைமெய்யென நாடி அநித்தியம்
பொருள்களையே தேடி
வையகம்எங்கும் ஓடி நான்செய்த
வஞ்சகம் பலகோடி
மையபற்கரிஇடர்கள் செய்யவேதொடருதே
ஐயோ கூ கூ கூ ஓ ஓ

3 நேசர்சிந்தாமணியே அடியேன்
நெஞ்சகம் பூண் அணியே
ஆகையினால்வரும்பிணியே தொலைந்தால்
அறமேவிடப் பணியே
ஈசனேஉனைத்தொழும் தாசன்வேதநாயகன்
பாசவலை கூறுமல் ஓ ஓ

---

115. இராகம்-தேசமுகாரி, ஆதிதாளம்.

பல்லவி

போதம்தர என்னவிவாதம் எனக்கமல
போதம்தர என்னவிவாதம்

அநுபல்லவி

வேதம் உணர்ந்தொழுகும்
நீதம் உடையவர்க்கும்
பேதம் அறவறப்பிர
சாதம் அருள்தெய்வமே போதம்

சரணங்கள்

1 மோகம் பெருகியெல்லை
கீகம் எனும் பெரும்பிர
வாகந்தனில் அழுந்தி
அகமெலிந்தேன் ஐயா

2 நெஞ்சோர்புறப்புலன்கள்
அஞ்சோர்புறம்மின்னார்கண்
நஞ்சோர்புறம்வருத்தும்
என்சோர்வெலாம் அகலப் போத

3 பெண்ணாசையாலும்வளர்
மண்ணாசையாலும்நிதி
எண்ணாசையாலும்மனம்
புண்ணாகிவாடினேன் போத

4 ஏதும்அறிவில்லாஎன்
மீதுவர்மஞ்செய்தால்
சாதுபரமபக்தர்
ஓதும்வேதநாயகா போத

---

115. இராகம்-கௌரிபந்து, ஆதிதாளம்.

பல்லவி

சர்வேசா சரணம் எனக்குன் தாளே ஆபரணம் சர்

அநுபல்லவி

இரவும்பகலும்உனையே அநு சரணம்
இசைந்திடச்செய்து நல்லபிரகரணம் சர்

சரணங்கள்

1 நீயேசெய்வதெல்லாம் உபகாரம்
நின்மேற்சொல்லவுண்டோ விகாரம்
தீயேன்புரிந்திடும்பிழைகள் அபகாரம்
தேவாசெய்இதற்கோர் பரிகாரம் சர்

2 புண்ணியஞ்செய்திலன்கடுகுப் பிரமாணம்
பொய்யனுன் ஆயினும்இது பிரமாணம்
எண்ணிடில் எனக்குமின்னார் விழிபாணம்
என்சரித்திரப்பெருங்கதா புராணம் சர்

3 பேசுவதெல்லாம்வாசா ஞானம்
பெரும்பாவியர்க்கெல்லாம்நான் தானம்
நேசாகலமும்உனதா தீனம்
நீயருள்எனக்குக்கிருபாரச பானம் சர்

4 ஈமேல்தொடுக்கின்பாணப் பிரயோகம்
எனைநீமுனிந்திடில் ஏதுநிர்வாகம்
மாமோகாதியில்மயங்கி னேன்ஆகம்
வரவேதநாயகஅருள் பரிபாகம் சர்

---

117. இராகம்-நாதநாமக்கிரியை, ரூபகதாளம்.

பல்லவி

சமயப்ஈதையா நலம்எனக் கமையஓதையா சம

அநுபல்லவி

அமர்செய்தீவினைச் சுமைத்தொலைத்தெனை
அமலன்ஆக்கிடல் நேர்த்தி ஒரு
சமமிலாஅருட் பூர்த்தி உரு
நிமலதாரண மூர்த்தி சம

சரணங்கள்

1 இன்னமும்தாமதமோ வினைசுமந்
திடஎன்றால்வசமோ உனக்
கின்னம்சகசமோ உனக்கருள்
ஈய அகாசமோ
அன்னமென்னடை மின்னல்நேரிடைக்
கன்னியர்விழி இணையேமனந்
தன்னில்பாய்ந்திடும் கணையேஇனி
என்னசெய்வேன்நீ துணையே சம

2 கருணைகூறாயோ எனதுளக்
கவலைதீராயோ இந்தத்
தருணம்வாராயோ எளியேன்
தன்முகம் பாராயோ
இரணியபெண்கள் தரணிமதந்தக்
கரணமேவமெய்துறந்தேன் கடல்
திரணம்போலெங்கும்பறந்தேன் உந்தன்
சரணபங்கயம் மறந்தேன் சம

3 மாயைநீக்காயோ எனைமுகம்
மலர்ந்துநோக்காயோ வினைத்

தீயைபோக்காயோ எனை அதி
சீலன் ஆக்காயோ
நீயலாதுசகாயம் ஏதினித்
தீயவர்பயங்கரனே பல
நோய்அறவருள்வரனே வேத
நாயகன் தொழும்பரனே சம

---

### 118. இராகம்-இந்துஸ்தான்காப்பி, ஆதிதாளம்.

பல்லவி

வாவா வாவா என் இதயந்தனில்
வந்தேமலரடிதந்தே ஆண்டிட வாவா

அநுபல்லவி

சாவால்வருந்துமுன் காவா காத்திடில்
தாவா பூவார் ஜீவா தேவா வாவா

சரணங்கள்

1 மின்னார்கள்விழிகளை தன்னால்தயங்கினேன்
உன்னாதரவில்லாமல் பன்னாள்மயங்கினேன் வாவா

2 பொய்யானவாழ்வுதனை மெய்யாகநம்பினேன்
ஐயாநின்அடிக்கன்பு செய்யாமல்வெம்பினேன் வாவா

3 சிந்தாகுலங்கெட வந்தாளில்தின்மையா
எந்தாயேநீயெனைமு னிந்தேகல்நன்மையா வாவா

4 வேதநாயகன்தொழும் சீதமலர்பாதனே
ஆதவன்எனப்புவி மீதில்வரும்நாதனே வாவா

---

### 119. இராகம்-இந்துஸ்தான்காப்பி, ஆதிதாளம்.

பல்லவி

இன்னமும்என்மீ தனக்கேன்பராக்கு
நின்னருள்தந்தேயெனை நீகைதூக்கு இன்

அநுபல்லவி

பன்னரியபுவன மனோகரா
உன்னதப்பிரதாப கிருபாகரா இன்

சரணங்கள்

1 ஏதுங்கதியில்லா ஏழைநானே
என்னசெய்யும்சலம நீங்குமீனே
பாதவனஜமலரே நம்பினேனே
பாகேஅமுதே பசுந்தேனே இன்

2 காலெனும்காய சுகபோகம்நாடி
கர்த்தனேசெய்தேன் வினைகோடிகோடி
வேனில்வெயிலுற்ற புழுப்போலவாடி
வேதனேவந்தேன் உந்தன்பாதம்தேடி இன்

3 அண்டபகிரண்ட சர்வாதிகாரா
அவ்வியக்தமய அசகாயசூரா
தொண்டன்வேதநாயகன் மனோசஞ்சாரா
தோஷபரிகார உதாரதீரா இன்

---

120. இராகம்-சுருட்டி, சாப்புதாளம்.

பல்லவி

இப்படிப்பட்டநான் எப்படி உன்முகத்
தேவந்து விழிப்பேன் ஐயா இப்

அநுபல்லவி

தப்பறியாதவர் தமதறிவினைத்தூண்டும்
தாயேதந்தையேஎன்மேல் நீயேஇரங்கவேண்டும் இப்

சரணங்கள்

1 பாதாதிகேசபரியந்தமுந்நான்விடப்
பகலும்இரவும்மாயை பண்ணும்என்நெஞ்சில்நடம்
ஏதம்அறஅந்நெஞ்சம் ஏதாயிடம்எவ்விடம்
எனினும்உன்னிடம்வர வெனில்அதுமுழுமுடம் இப்

2 கர்த்தனேஎன்மேல் அற்பக்காற்றடிக்கினும்பொறேன்
காசினியெல்லாங்கெட்டுக் கலக்கினும்துயருறேன்
எத்தனைபொருள்பிறர் எனக்கீந்திடினுமாறேன்
எச்சிற்கையாலுங்காகம் ஓட்டிநான்இழிவுறேன் இப்

3 இகமிசைநான்சுமந் திடுவதுபழிச்சுமை
எனினுமபிறர்செய்யற்ப இடருக்கும்செய்யேன்க்ஷமை
மிகஅற்பர்தமைசேர்வ தல்லால்மேலவர்தமை
வேதநாயகனேநான் மேவிஅறியேன் இமை இப்

---

121. இராகம்-மோகனம், திரிபுடைதாளம்.

பல்லவி

எந்தவிதமும் உன்கந்தமலர்பதமே அடியேன் அடைந்திடச்
சிந்தைமகிழ்ந்துநீ தந்தருள்வாயிதமே எந்த

அநுபல்லவி

அந்தரமெங்கும் அமர்சர்வசாக்ஷியே
வந்தனைசெய்பவர் மனசாக்ஷியே எந்த

சரணங்கள்

1 சகசமானிடர் தமக்குப்பாவமே பிழையாவும்பொறுத்துத்
தயைசெய்தாள்வது நின்சுபாவமே
தகவே உன்சரித்திரப்பாவமே அநுதினமும்பாடிச்
சாதகம்பெறஎன்மனோ பாவமே
தந்தைநீயேதானே உனக்கொரு
மைந்தனும்நானே இவ்வாறுநான்
சொந்தமானேனே தாசனம்
தந்தருள்கோனே புவிதனில்
நிகரில்லாதநியாயப் பிரசித்தனே
சகலலோகசராசர கர்த்தனே எந்த

2 மணல்அன்னத்தில்கல்லாய்ந்திடும்வகைபோலெனைச்சோதித்திடில்
என்மனதில்உள்ளதெல்லாம் வினைத்தொகையே
குணமுமுண்டோபுவிவாழ்வுவெறும் புகையே அதைவிரும்புஎன்
மனக்குரங்கு ஐம்புலன்களும் செயும்பகையே
கோதையர்மோகம் தனில்வரு
வாதைஅநேகம் எவர்க்குமே
ஈதனுபோகம் எனக்கினிப்
போதும்இப்போகம் அநுதினம்
புணரும்ஆனந்த பொக்கிஷசாலையே
மணமிகுந்தருள் மலரும்சோலையே எந்த

3 தந்தைபிள்ளையைத்தள்ளல் பந்தமா இதுநான்குபேரும்
சரியென்றெப்புக்கொள்ளும் சித்தாந்தமா
நாதனேஎனைமுனிதல் சாந்தமாஎனதுள் இரும்பையென்னளும்
இழுக்கும்விஷயம்காந்தமா உன்னையேகதியென

நண்ணியசித்தர் பெருந்தவம்
பண்ணியசுத்தர் நிகராறு
பண்ணையபத்தர் முதலிய
எண்ணிலாமுத்தர் அடையுமுன்

பாதநிதி அவர்க்கே பிதிராஸ்தியா
வேதநாயகன் பங்கென்னநாஸ்தியா எந்த

---

## 122. இராகம்-பைரவி, ஆதிதாளம்.

பல்லவி

ஏகாகனயோகா அனுதினம் எனையாண்டருள்வாயே ஏகா

அநுபல்லவி

சேகரகுணதிவ்ய தேஜோமயகாத்திர
பாகநித்யானந்த பாக்கியபரக்ஷேத்திர ஏகா

சரணங்கள்

1 கண்டுநிகர்மொழியும் வண்டுநிகர்விழியும்
தண்டுநிகர்புயமும் கொண்டுமக்குமந்தப்
பெண்டுபிள்ளைகட்குழைத் தண்டுறங்கிநிதமும்
மண்டுவினையலாதுன் தொண்டுசெய்தறிகிலேன் ஏகா

2 நாடேன்பெரியரொடு கூடேன்புண்ணியந்தன்னில்
நீடேன்உனதருளைத் தேடேன்நினதுபுகழ்
பாடேன்அனுதினங்கொண் டாடேன்பதமலரைச்
சூடேன்அருவினையைச் சாடேன்சுரர்புகழும் ஏகா

3 நாதாதிவ்யவரப்பிர சாதாஅண்டமுந்
தீதாவினைக்கதீதா அடியர்கள்ச
மேதாநிலைகொள்பஞ்ச பூதாதிகர்மவி
நோதாதினந்தினமும் வேதநாயகன்புகழ் ஏகா

### 123. இராகம்-மோகனம், ரூபகதாளம்.

பல்லவி

இன்னம் பராமுகமாமோ வினை
நின்னருள் தாண்டிப்போமோ இன்

அநுபல்லவி

மின்னல்உறுபுகழ் நன்னலமேவிய
வேதார்த்தா கன போதார்த்தா-ஓ இன்

சரணங்கள்

1 வன்பிழைஒப்புக்கொண்டாலே க்ஷணம்
மன்னர்செய்வார் புவிமேலே
என்பிழையைப்பலகாலே ஒப்பி
னேனேமுனிவ தென்பாலே
அன்பெனும்தெப்பம் இல்லாமல்வினைக்கடல்
ஆழ்ந்தேனே துயர் சூழ்ந்தேனே-ஓ இன்

2 தன்பதியைப்பகையோரே கொள்ளத்
தான்பார்த்திருப் பவள்யாரோ
நின்பதிஎன்மதிதேரே அதில்
நீங்காமல்உன் கண்முன்நேரே
உன்பகையோரேனும் காமக்குரோதாதிகள்
உற்றாரே ஜெயம் பெற்றாரே-ஓ இன்

3 நெஞ்சங்கவலைக்குவீடா ஐயா
நின்சோதனைக்கு நான்ஈடா
அஞ்சாதேநீ இங்குவாடாஎன்
றருளாதின்னம் வேறுபாடா
தஞ்சமெனவேத நாயகன்போற்றிடும்
தாதாவே பெற்ற மாதாவே-ஓ இன்

---

### 124. இராகம்-உசேனி, திரிபுடைதாளம்.

பல்லவி

ஏகநாதா அரும்பரபோகம் நீதா ஏக

அநுபல்லவி

பாகவிகசித கற்பகாருண்ணிய
பதிதபாவன பரமகாருண்ணிய ஏக

தேகம்நிறைஅதி ரூபலாவண்ணிய
தீயர்தமைச்சிக்ஷை செய்ப்நிர்த்தாக்ஷண்ணிய ஏக

சரணங்கள்

1 நாளுமுழ்கினன் பாபஅங்கனம்
நாடேன்பெரி யோர்கள்வங்கனம்
ஆளும்படி தரித்தனைநீ கங்கணம்
அன்போடெனைச்சேர் நல்லோர்கள்தங்கனம்
நீளும்அகண்டித மாகியோங்கிய
மாளுந்தொழிலுது மாசுநீங்கிய ஏக

2 அடியன்மீதுனக் கென்னபிணக்கமோ
அகற்றுவாயென தகங்கொள்உணக்கமே
நெடியநின்பத மலர்க்குவணக்கமே
நிதமும்நான்செய்ய அருள்கல்லுணக்கமே
கடியதுயர்க்கடல் கடக்கஉனதினை
அடியலாதினி அயலுண்டோபுனை ஏக

3 உதிக்கும்பலகதிர் நிகரும்விதுரனே
உயர்நித்தியானந்த நகரச்சதுரனே
துதிக்கத்துதிக்கவே இனிக்கும்மதுரனே
சூழும்சீவராசிகள் தம்பிதிரனே
குதிக்குமாயையைக் கொன்றுதாழ்விக்கும்
மதிக்கும்வேத நாயகனைவாழ்விக்கும் ஏக

---

125. இராகம்-புன்னாகவராளி, ரூபகதாளம்.

பல்லவி

தயைபுரியே எனதுளத் துயர்பிரியே தயை

அநுபல்லவி

உயரும்தர்ம சம்வர்த்தனு
உத்தமர்தம் மனநிர்த்தனு
கயவர்இழி குலிமர்த்தனு
கருதரும்புண்ணிய பத்தனு தயை

சரணங்கள்

1 புண்ணியம் நாயேனுக்கெட்டி
பொய்களெல்லாம் வெல்லக்கட்டி
திண்ணிய மெய்ஞ்ஞான திட்டி
சிறிதியில் என்ன நட்டி
சின்மயமே மெய்வேத நன்மயமே எனையுறு
திண்மைப்பழியோட நனமைப்பலன்நீட
உன்மெய்ப்பதம்நாட கன்மப்பயிர்வாட தயை

2 என்குறை பாராட்டாதே
இன்னம்என்னை வாட்டாதே
நின்கோபங் காட்டாதே
நிபங்கள்என்மேற் சாட்டாதே
நிச்சயம் நிலைபெறும் அக்ஷயமே கன்முறு
நேசத்திடம்ஓங்க பாசத்திடம்நீங்க
மாசற்றறம்வீங்க வாசத்தகைதாங்க தயை

3 அண்ட சராசரரூபா
அகதிகளுக் கனுதாபா
விண்டலமண்டல பூபா
வேதநாயகன் வரபா
விண்மணியே எனதிரு கண்மணியே பழிசெய்யும்
வேகப்பவமோட்டி மோகப்பகைவீட்டி
பாகப்பதம்நீட்டி யோகப்பதிகாட்டி தயை

---

## 126. இராகம்-ஜங்கலா, ரூபகதாளம்.

பல்லவி

நல்லவரந்தந் தாளுவாய்
நாதனே அபேதனே நல்ல

அநுபல்லவி

அல்லும்பகலும் உன்னைநாட
அற்புதபர மார்த்தந்தேட நல்ல

சரணங்கள்

1 அன்பருடனேகூடவும் அனுதினம்துதிபாடவும்
இன்பசாகரம்ஆடவும் ஈனரைக்கண்டால்ஓடவும் நல்ல

2 பஞ்சப்புலன் அடக்கவும் பாவக்கடலைக்கடக்கவும்
நெஞ்சம்ஒடுங்கிக்கிடக்கவும் நீதிநெறியில்நடக்கவும் நல்ல

3 தீனர்களையேதாங்கவும் சிந்தைத்துயரம்நீங்கவும்
ஞானவழியில்ஓங்கவும் நானுன் அடியில்தூங்கவும் நல்ல

4 பத்தர்பரவுந்தேவனே பரமதிவ்யசுபாவனே
வித்தகமனோபாவனே வேதநாயகன்ஜீவனே நல்ல

---

127. இராகம்-பூரணச்சந்திரிகை, ஆதிதாளம்.

பல்லவி

இன்னம்தான் பராமுகமோ இதுதகுமோ ஸ்வாமி

அநுபல்லவி

சந்நிதான தரிசனம் அருளாமல் இன்னம்

சரணங்கள்

1 செந்தாமரைப்பதமே சேரேன்நானிதமே
நொந்தேன்பலவிதமே நோய்தீர்த்தருள்ஹிதமே
சிந்தைதனில் பிரமைகொண்டேன்
தீமைகள்செய்து கைகண்டேன்
சந்ததமும் நலம்விண்டேன்
சர்ஜ்ஜனசங்கமும் அண்டேன் இன்னம்

2 பூண்டேன் அபசரிதம் புகழேனின்சரிதம்
ஆண்டோய்என்துரிதம் அறவேசெய்துரிதம்
நீண்டோன்பெருந்தகை பூணேன்
மூண்டபெரும்பழி நாணேன்
முத்திபெறும்வழி காணேன்
சித்திதருமவழி தோணேன் இன்னம்

3 அடியார்திரவியமே அமலோதயஸ்வயமே
வடிவார்ஆலயமே வளர்ந்தேஜோமயமே
திடமுறு புவனாதாரா இன்னம்

---

128. இராகம்-பிலகரி, ரூபகதாளம்.

பல்லவி

கருணாலயநிதியே தினமும்உன்
சருணாம்புயம் நிதியே

அநுபல்லவி

சருவபேத விநோதசாரண
பரமசாதக பவநிவார கருணா

சரணங்கள்

1 நிதம்வெளுக்க வெளுக்கவெக்தூசு
நிமிஷந்தோறும் நிறையுமேமாசு
அதுபோல்எந்தன் அகமுறும்ஆசு
அகலவேலவன் அருள்வொளிவீசு
அகிலகோடி விசாலகற்பித
சகலஜீவ தயாளஅற்புத கருணா

2 இங்கென்செய்கைகள் யாவுமநிகிர்ஷ்டம்
எனக்குபுண்ணியம் என்றும்அநிஷ்டம்
பங்கம்தீர்க்கில் உனக்குண்டோநஷ்டம்
பரமனே அருளாயோஉத்ரிஷ்டம்
பாரமாகவே பண்ணும்பாதகம்
தீரவேநீ செய்வைசாதகம் கருணா

3 அமலபாஸ்கர கோடிசொரூபா
அகண்டசச்சிதா னந்தபிரதாபா
நிமலவேத வேதாந்தநிரூபா
நிர்விகற்ப நிரஞ்சனதீபா
நீதபூரண நிலயமஞ்சிதா
வேதநாயகன் இதயரஞ்சித கருணா

---

129. இராகம்-அமிர்தகல்யாணி, ரூபகதாளம்.

பல்லவி

நாதா கிடையாதா வரமே ஜெகநாதா நா

அநுபல்லவி

பாதாரவிந்தம்நம்பும் பாவியைமேதாவியாக்க நா

சரணங்கள்

1 எந்தநாளுமுடவிர்த்தி இல்லையேதிரிகரணசுத்தி
மந்தமானஎன் துர்ப்புத்தி மாறவே அருளாயோசித்தி நாதா

2 அகமெனுமதயானைஎன்வசம் ஆகவே அருள்ஞான அங்குசம்
சுகதுக்காதிகளில்சமரசம் தோன்றவே அருள்வாய்தயாரசம் நா

3 அபயவாதநிர்வாக ஆபத்பாந்தவ அருட்பிரவாக
விபவசார்வபௌமயோக வேதநாயகன்ஸ்யாதுபோக நாதா

## 130. இராகம்-அபூர்வம், ஆதிதாளம்.

பல்லவி

சருவவிநோத திருவருள் நாதா

அநுபல்லவி

இரவுபகல்உன திணையடிநாடவும்
தருமநிர்மலசுகசாகரம் ஆடவும் சருவ

சரணங்கள்

1 பசிதாகசோபரோக பாபசரீரம்
கசிவுருமலஜல காமபண்டாரம்
சுசிஅரும்இதில்வினை தோஷம்அபாரம்
நிச்சயமேஅருள் நீபரிகாரம் சருவ

2 கடல்நடுவேகரை காணுதகாசம்
இடர்உறல்போலவே எனதுநிர்வாகம்
மடம்அறஅருள்செய் க்ரமபரிபாகம்
கடவுளேநாடினேன் கருணைப்பிரவாகம் சருவ

3 சுரகணசேவித துரிதவிநாசன
சருவதயாபர சாபவிமோசன
கருவநிவாரண சுருணவிலோசன
வரவேதநாயகன் மனதலாசன சருவ

## 131. இராகம்-சரசாங்கி, ரூபகதாளம்.

பல்லவி

எத்தனைகவிபாடினும் பலன்ஏதுமில்லையே எத்

அநுபல்லவி

சித்தம்வாக்குக்கிரியை அத்தனையும்தினம்
உத்தமமார்க்கத்தில் ஒத்துநில்லாமல் எத்

சரணங்கள்

1 சந்ததமும்பரன் சுந்தரபாதத்தை
அந்தரங்கம்தனில் சிந்தனைசெய்யாமல் எத்த

2 மோசம்செய்யும்ஆசா பாசங்களென்னும்பி
சாசந்தனைச்சர்வ நாசஞ்செய்யாமல் எத்த

3 சோரம்பொறாமைபொய் லோபம்மதமுதற்
பாபங்கட்கேமனஸ் தாபங்கொள்ளாமல் எத்த

4 மும்மலபாசத்தை நிர்மூலமேசெய்து
நிர்மலசித்தனாய் தர்மஞ்செய்யாமல் எத்த

5 தாயகனும்வேத நாயகன்தீர்ச
காயன்தனைநெஞ்சுள் நேயம்பண்ணாமல் எத்த

---

## 132. இராகம்-ஹம்சத்தொனி, ஆதிதாளம்.

பல்லவி

ஞானோதயவரம் அருளே ஞானோ

அநுபல்லவி

பானோதய பரம்பொருளே ஞானோ

சரணங்கள்

1 மாயாவிகாரஜெகமே தோயாமல்அருள்சுகமே
தூயாநேசனே ஸ்வயப்பிரகாசனே
தீயர்நாசனே சித்விலாசனே ஞானோ

2 தேகாபிமானம்அறவே யோகாநுசாரம்உறவே
பாகம்நீட்டுவாய் பாதம்காட்டுவாய்
மோகம்ஓட்டுவாய் முத்திகாட்டுவாய் ஞானோ

3 ஆதாரம்ஆருமில்லையே பாதாரவிந்தம் நிலையே
போதநாயகா புண்ணிய ஆயகா
வேதநாயகா விமலதூயகா ஞானோ

133. இராகம்-தீனசங்கராபரணம், ரூபகதாளம்.

பல்லவி

ஆதிமூலனே நீதிநூலனே நித்ய ஆதி

அநுபல்லவி

வேதபோத சாதகம்பெற
நீதயைபுரிவாய் நித்ய ஆதி

சரணங்கள்

1 திட்டலாமொயைக்கே அஷ்டதிக்கும்விஜயமா நான்
துஷ்டன்ஆதலால்உனக்கும் எனக்கிட்டவரப்பயமா
கெட்டஇதயமே அதிர்ஷ்டம்உதயமே
சிஷ்டரோடெனைக்கூட்டி ஞானகஷ்டம் ஆக்குவாய்நித்ய ஆதி

2 துணைவுன்பாத இணையெது சொல்லவேறுண்டோ [டோ
இணையிலாயொரு நினையிலாத்தெய்வம் எனக்குத்தான் இரண்
குணம்தருவாயே அருள்மணம் தருவாயே
உணரொண்ணுத நினதுசேவை புணரவே அருள்வாய்நித்ய ஆதி

3 மனையைச்சுத்தஞ் செய்தினிதுறல் மனிதர்க்குச்சகசமே
நினதகமெனும்எனது நெஞ்சம்நிலமலவசமே
புனிதம்செய்வாயே அதில் இனிதமாவாயே
தாயகன்வேதநாயகனுக்கு தரிசனமருள்வாய் நித்ய ஆதி

---

134. இராகம்-பியாகு, ரூபகதாளம்.

பல்லவி

பிக்ஷை அருளாயே ஞான பிக்ஷை

அநுபல்லவி

அக்ஷயநிர்மல லக்ஷணனே ஜீவ
ரக்ஷணனேஅதி பக்ஷமுடன் ஞான பிக்ஷை

சரணங்கள்

1 சத்தியமாருத புத்தியும் ஓயாத
பத்தியும்மெய்ஞ்ஞான சித்தியுமுத்தியும் பிக்ஷை

2 நேசருடன்சகவா சமும்ஞானப்பிர
காசமும்உன்விசு வாசமும்நேசமும் பிக்ஷை

3 தானம்பொறைஅருள் மானம்இதரபி
மானம்நிதானமும் மோனமுந்தியானமும் பிக்ஷை

4 பூதமெலாம்விப ரீதம்உருமலே
ஆதரவுசெய்யும் வேதநாயகனே பிக்ஷை

---

### 135. இராகம்-சௌராஷ்டிகம், சாப்புதாளம்.

பல்லவி

இந்தமனம் கெட்டதையா
பந்தவலைப் பட்டதையா இந்த

அநுபல்லவி

சந்ததம் புண்ணியந்திரண்ட
சுந்தரதேகா நான்கொண்ட இந்த

சரணங்கள்

1 சொன்னபடி கேளாச்சண்டி
தோஷமூட்டை தூக்கும்வண்டி
உன்னிடம வரவேணொண்டி
ஓடுமவிஷயத்தை அண்டி இந்த

2 இதரர்வாழக்கண்டால் வாட்டம்
எவருங்கெட்டாலோ கொண்டாட்டம்
மதனநெருப்புக்குக் காஷ்டம்
வாயுவினும்வேகம் ஓட்டம் இந்த

3 சுகதுக்கபேதம் போதிக்கும்
சூழ்நலமெலாம் பேதிக்கும்
பகல்இரவென்று சாதிக்கும்
படும்விஷம்உண்டு சோதிக்கும் இந்த

4 காடுங்கரையும் சஞ்சாரம்
காமப்பசாசுக் காகாரம்
நாடும்பிரபஞ்ச வியாபாரம்
ஞானமிதற்கெட்டாத் தூரம் இந்த

5 பாதங்கட்கெல்லாங் குரு
பாசம்வினைவிக்கும் எரு
ஏதுவில்லா விஷதரு
எனக்கனுகூல சத்துரு இந்த

6 பஞ்சபூதாதி நிர்மாணா
பக்தர்கள் இதயவாணா
விஞ்சையாம் சாஸ்திரபுராணா
வேதநாயகப் பிரமாணா இந்த

---

136. இராகம்-மனோகரம், திரிபுடைதாளம்.

பல்லவி

எந்தையேஉனக்கும் அடியேனுக்கும்
எத்தனைபேதம் ஐயா எந்தை

அநுபல்லவி

சந்ததசர்வ சாம்பிராஜ்ய பிரபுத்துவ
சாசுவத தேவ தேவ மகத்துவ எந்தை

சரணங்கள்

1 தேவனீசகல புவனேசன்
சிறியனான்உந்தன் தாசானுதாசன்
காவலனானநீ ஸ்வயம்பிரகாசன்
கசடன்நான் அந்தகாரப்பிரவேசன் எந்தை

2 சத்தியமாக நீதர்மசொரூபி
தாரணிமீதிலேநான் பெரும்பாபி
நித்தியனான நீசுத்தஅரூபி
நிச்சயமாக நான்மெத்தக்குரூபி எந்தை

3 சமமில்லாத நீயேமலரகிதன்
சாமிநான்உலகில் மலசகிதன்
விமலனேநீபல பிராணிகள்விகிதன்
வேதநாயகன்நான் எவர்க்குமேலகிதன் எந்தை

---

## காலைஸ்தோத்திரம்

137. இராகம்-தேசிகதோடி, ஆதிதாளம்.

பல்லவி

உனக்கேநமஸ்காரமையா இடர்
ஒன்றும்வாராமலே நன்றுசெய்தாயே — உனக்கே

அநுபல்லவி

தனக்கோர்நிகர் என்றுமிலாத
தயாபரனான பராபரனே — உனக்கே

சரணங்கள்

1 நேத்திரங்களைநீ யெம்மாத்திரமுமூடாமல்
காத்திருந்தாயெனை இராத்திரிமுழுதும் — உனக்கே

2 சத்துருபயமின்றி நித்திரைசெயவெனைப்
பத்திரமாயுன்கையில் வைத்திருந்தாயே — உனக்கே

3 முந்தும்அரவம்விஷ ஜெந்துக்களால்அபாயம்
வந்துகெடாமலேகா பந்துசெய்தாயே — உனக்கே

4 தீயும்வெள்ளமும்காற்றும் பேயும்விலங்கும்பல
நோயும்வராமற்காத்தாய் தாயுந்தந்தையும்போல — உனக்கே

5 நாங்களோர்தடையின்றித் தூங்கஇராமுழுதும்
வீங்கிருட்போர்வைதனைத் தாங்கிநின்றாயே — உனக்கே

6 இருட்டுமாறிவிடியும் பொருட்டுநீபுவிதனை
உருட்டிஇராமுழுதும் புரட்டிநொந்தாயே — உனக்கே

7 பூதநாயகனேபிர போதநாயகனேசங்
கீதநாயகனேநல் வேதநாயகனே — உனக்கே

138. இராகம்-தோடி, ஆதிதாளம்.

பல்லவி

ஆளாயோஎனையே நம்பினேன்நெடு
நாளாக உனையே ஆளா

அநுபல்லவி

நீளும்புவனுதாரா நேயருக்குபகாரா
நிகரும்இகபர சுகமருள்வரதா
அகம்அறு சுகுணர்கள் புகழ்அநவரதா ஆளா

சரணங்கள்

1 எத்தனைபதங்களுக் கெடுப்பேன்கற்பனைநிதம்
எல்லாஞ்செலவாய்ப்பாட்டுக் கினிமேல்இலை ஆஸ்பதம்
அத்தனேஇரங்கிநீ அருள்வாய்பரமபதம்
அன்றேழ்பழம்பாட்டன்று அறியேனுன்புதுப்பதம்
அல்லல்வினையகல நல்லவரந்தந்தெனை ஆளுவாய்அத்
தல்லவெனிற்பதங்கள்சொல்ல நல்வாக்குதவி மூளுவாய்கன
அகணிதசுகுணபுர மூகபரமேசா
ஜெகமயல் அகலமெய் திகழ்உபதேசா ஆளா

2 கனியினால்மரத்துக்குப் பலனுண்டோ அதுபோல
காசினிமீதடியேன் பேசின நீதிநூலே
இனிபயன்பிறருக் கீயினும் அதனாலே
எவ்வளவுசுகந்தான் எனக்குண்டோ புவிமேலே
இலக்கஅந்நூலின்மிசை எனக்குண்டோ புவிமேலேவெகு
கலக்கமுறஎன்மனமலர்க்கண் அநுதினமுமேவுமே எந்தன்
இதயமதமயலைமுதல் அறநீக்கி
நிதம்நிதம்உனதிரு பதமலர்தேக்கி ஆளா

3 ஓங்ககிலாண்டகோடி தாங்கிடும்பரிசன்னியா
உத்தமமூர்த்திகர சுத்தபிரமசை தன்னியா
நீங்கருமாமகிமை வீங்கிவளர் சௌஜன்னியா
நித்தமுந்துதிபுரிபக்தர் தமக்கன்னியோன்னியா
நீதிநெறிவிலகுபாதகம்அற அருளூட்டுவாய்பெருங்
கோதகல்இகபரசாதக ஞானநிலைகாட்டுவாய் அரு
நிதிபர கதியெனும் விதிஉபதேசா
துதிசெய் வேதநாயகன் மதிஅமர்நேசா ஆளா

## இசுர வருடத்துப் பஞ்சத்தைப்பற்றி பாடியது

139. இராகம்-உசேனி திசிரஜாதி, மட்டியதாளம்.

பல்லவி

பஞ்சம்தீர் ஐயா உனையன்றித்
தஞ்சம் ஆர் ஐயா பஞ்சம்

அநுபல்லவி

வஞ்சகமேகம் உலோபர்கள்போலே
மண்ணில்மழைபொழி யாமையினாலே
சஞ்சலமாகித்தளர்ந்தோ மென்மேலே
சாமிகதிஉந்தன் தாமரைக்காலே பஞ்சம்

சரணங்கள்

1 எட்டுநாள்பத்துநாள் பட்டினியோடே
இடையிலேகந்தை இருகையில்ஓடே
ஒட்டிஉலர்ந்தஉடல் என்புக்கூடே
ஒருகோடிபேர்கள் வசிப்பதுகாடே
ஊரும்இல்லாமல் குடிக்கத்தண்
ணீரும்இல்லாமல் அன்னமெனும்
பேரும்இல்லாமல் பசிதீர்க்க
ஆரும்இல்லாமல்
பாரில்அனேகர் பரதேசி ஆனாரே
ஊரில்அனேகர் உயிர்மாண்டுபோனாரே பஞ்சம்

2 தாரங்களையே புருஷர்கைவிட்டார்
தந்தைதாய்பிள்ளைகளை விலையிட்டார்
வேரும்இலையும் கிழங்கும்சாப்பிட்டார்
வெறுங்கையராய்வெளியே புறப்பட்டார்
வேலியும்அற்றார் பெண்சாதிகள்
தாலியும்விற்றார் வேலைசெய்து
கூலியும்பற்றார் பலபல
சோலிகள் உற்றார்
தோலும்எலும்புமாய்த் தோன்றியேசோம்பினார்
பாலரும்தாய்முலைப்பால் அற்றுத்தேம்பினார் பஞ்சம்

3 பஞ்சம்இதுபோல் கண்டதில்லையே
பலபேர்அடுப்பில் வையார்கள்உலையே
நஞ்சம்போல்நாட்குநாள் ஏறும்விலையே
நாங்கள்படுந்துன்பம் நாடோறுமலையே
நரர்கள்மெய்வாடி மனமிக
உருகித்தள்ளாடிக் கண்ணீர் ஆறாய்ப்
பெருகிஓடிப் பிக்ஷைகேட்க
வருபவர் கோடி
இரவுபகல்எங்கும் ஏழைகள்சத்தமே
பரனேகலியொடு பண்ணினார்யுத்தமே பஞ்சம்

4 ஏரிகுளம்நதியாவும் நீர்சுண்ட
ஏகமாக்கோடாலிக் கனல்எங்குமண்ட
சேரிமாடாடுகள் செத்துப்போய்வெண்ட
ஜெகமுழுதும்உதராக்கினிஅண்ட
தீனர்கள்நாட அவர்களை
ஈனர்கள்ஜாட தங்கள்கத
வானதைமூட அதுகண்டு
மானிகள் வாட
மேனிகுலைந்து மெலிந்தாரே இப்படி
கோன்உனையன்றிக் குடியாவதெப்படி பஞ்சம்

5 மண்ணில்அனேகர்என் கண்ணின்முன்மாய்ந்தார்
மரஞ்செடிபுல்லையு மாடுபோல்மேய்ந்தார்
எண்ணில்லாப்பேர்கள் சருகுபோற்காய்ந்தார்
இளைத்துக்களைத்துத் தவித்துடல்ஓய்ந்தார்
ஏங்கிடுவாரும் களைகொண்டு
தூங்கிடுவாரும் அன்னம்உண்ண
வாங்கிடுவாரும் உடன்உயிர்
நீங்கிடு வாரும்
ஈங்கிந்தவண்ணம் இருண்டதுமேதினி
தாங்கும்வேதநாயகா தஞ்சம்ஏதினி பஞ்சம்

---

# இதோபதேசக் கீர்த்தனைகள்

## கடவுளைத் தியானிக்கும்படி வற்புறுத்துதல்

140. இராகம்-குந்தளவராளி, ஆதிதாளம்.

பல்லவி

மனமேநீ ஈசனுமத்தை வாழ்த்துவாய்தினம்
வாழ்த்துவாய் மனமே

அநுபல்லவி

அனவரதமும்நீ அரும்பதமபாடிக்
கனசுகமேவிடக் கலந்துகொண்டாடி மனமே

சரணங்கள்

1 வம்புவார்த்தைகளே பெரும்பாபம்
வாய்க்குச்சேதமெல்லாம் என்னலாபம்
எம்பிரான்திரு மகிமைபிரதாபம்
எடுத்துப்பேசுவது சத்காலக்ஷேபம் மனமே

2 ஏகமாஉள் ளுருகியேபரிய
இருகண்ணுனந்த பாஷ்பங்கள்சொரிய
தேகபரவசம தாயன்புரிய
சிரகாதிகள் அஞ்சலிபுரிய மனமே

3 கரும்புதின்னக்கை கூலியும்வேணு
கற்கண்டோஅமுதோ பசுந்தேனே
விரும்பும்பிரமானந்தமே யதுதானே
வேதநாயகன்போக் கிணைசொல்லநானே மனமே

## இதுவும் அது

141. இராகம்-அடாணு, ஆதிதாளம்.

பல்லவி

மனமேநீ மறவாதே ஐயன்பதத்தை மனமே

அநுபல்லவி

கனவிலும்நிதமுறு நனவிலும்பலபல
நினைவிலும்ஒழியாமல் அனவரதமுமே மனமே

சரணங்கள்

1 மண்ணுஞ்சராசரமும் விண்ணும்படைத்தளித்து நீக்கும்
பராபரன் தன்
வண்ணமலர்ப்பதத்தைக் காணும்பொழுதில் இன்பந்தேக்கும்
ஆகையினாலே
உண்ணும் பொழுதும்வேலை பண்ணும்பொழுதும்ஒன்றை
எண்ணும் பொழுதுந்துன்பம் நண்ணும்பொழுதுமே மனமே

2 கல்லும் பெருமரமும் புல்லும்புனலுமே சஞ்சாரம்
செய்யு மந்திபோல்
தில்லும்புல்லும் திரியாவரமுஞ் செய்தென்னசாரம்
வெளியிலே தான்
செல்லும் பொழுதும்வார்த்தை சொல்லும் பொழுதும்பகை
வெல்லும் பொழுதும்பின்னும் அல்லும் பகலுமே மனமே

3 அஷ்ட திசையும்ஓடிக் கெட்டலைந்தோம் புகுவோம்சரீரம்
இருப்பிடத்தை
விட்டகலாமல் தியானநிஷ்டை செய்வதில் என்னபாரம்
பல வியாதி
குஷ்டம்வந்தா லுந்துரைப் பட்டம்வந்தாலும் பெருங்
கஷ்டம்வந்தா லும்பிறர் வெட்ட வந்தாலுமே மனமே

4 கெடுக்கும் பலவினையை ஒடுக்கும்வேத நாயகநாமம்
துயர் வராமல்
தடுக்கும்இகபரமுங் கொடுக்குந்தினமும் உண்டுக்ஷேமம்
நித்திரை செய்யும்
படுக்கும் பொழுதுந்துகில் உடுக்கும்பொழுதும் ஒன்றைத்
தொடுக்கும் பொழுதுஞ்சுகம் அடுக்கும் பொழுதுமே மனமே

---

## இதுவும் அது

142. இராகம்-ஹம்சத்தொனி, ஆதிதாளம்.

பல்லவி

இனியாகிலுமனதே ஐயனை நீ நினையாயோ தினமே
இகபர சித்திபெறவே இனி

அநுபல்லவி

தனியிளம் பருவமுந் தாண்டிப் போனேமே
பனைபோல் வளர்ந்து கிழப்பருவ மானோமே இனி

சரணங்கள்

1 ஆசைக்கொருகறுப்பு மயிரேனும்இலையே
ஐயையோகொக்குபோல் நரைத்ததுதலையே
காசுக்குதவாக்கிழ மென்பதுநிலையே
கன்னியர்க்கும்இனிநாம் கசக்கும்வேப்பிலையே இனி

2 கண்கள்இரண்டும்மூக்குக் கண்ணாடிதேடும்
காலுஞ்சலாடும்ஓர் கழியைக்கைநாடும்
தண்கொள்ளும்வேரற்று தந்தங்கள்ஆடும்
தடுத்தாலும்நில்லாமல் யௌவனம்ஓடும் இனி

3 பசிவந்தபின்னெல்லை விதைப்பதுமதியோ
படுந்தாகம்வந்தபின் வெட்டுதல்நதியோ
விசயஞ்செய்திடச்சாகுங் காலமேததியோ
வீணேயுனக்குக்கெட்டுப் போகச்சம்மதியோ இனி

4 காலந்தனக்கென்னசெய்தோம் அபகாரம்
கனத்தஆபுசை அறுகினஞ்சோரம்
மேலுமேஉடலில் விளைக்கும்விகாரம்
வேதநாயகன்சொல்லே வேதாந்தசாரம் இனி

---

## துர்க்குணங்களை வெளியிடல்

143. இராகம்-எதுகுலகாம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

நெஞ்சேஇந்த நாடெங்குந்தேடினும்
நீசர்நமைப்போலுண்டோ நெஞ்சே

அநுபல்லவி

அஞ்சாமல்நாளும் அகந்தைகள்நீடுவோம்
சஞ்சலப்பேயால் தலைசுற்றிஆடுவோம் நெஞ்சே

சரணங்கள்

1 தேகம்உயிர்முதல் யாவையுமேதந்த
தேவன்தனைமறப்போம் கரு
மேகநிழல்போல் மறையும்பொய்வாழ்வை
விரும்பி நலந்துறப்போம்
மோகவிகாரத்திலேதடு மாறுவோம்
முன்னொன்றும் பின்னொன்று மாகப்பொய்கூறுவோம்
ஏகமாஎங்கும் பிறர்களைத்தூறுவோம்
எப்படிஐயையோ நாங்கரையேறுவோம் நெஞ்சே

2 கோயில்குருக்கள் ஜெபதபம்யாவும்
கொடும்விஷம் போல்வெறுப்போம்தினம்
நேயமதாகவே தூயமறைசொல்லும்
நீதிகளைமறப்போம்
ஆயிரம்பாவம் அடிக்கடிபண்ணுவோம்
அன்னியமாதரை ஆசையாய்எண்ணுவோம்
ஈயாஉலோப குணத்தையேநண்ணுவோம்
ஏழைபசியோடிருக்க நாமுண்ணுவோம் நெஞ்சே

3 உள்ளபடிநமக் கெள்ளளவென்கிலும்
உத்தமமதான் இல்லையே பாவ
வெள்ளம்நிறைந்திடும் பள்ளந்தனிலே
விழுந்துகெட்டோம் நிலையே
வள்ளலைப்போல்வெளி மாயக்கூத்தாடுவோம்
வந்தஎளியர்க்கு வாசலைமூடுவோம்
உள்ளேபகையும் உதட்டன்பும்நீடுவோம்
ஊரைஅடித்தே உலையிலேபோடுவோம் நெஞ்சே

4 உற்றகலைஎல்லாம் கற்றமெய்ஞ்ஞானிபோல்
ஊரைமயக்கிடுவோம் பழு
தற்றமெய்ஞ்ஞானத்தில் பற்றுதலின்றி
அலைய உடம்படுவோம்
மற்றவரைக்கெடுத்துப் பழிவாங்குவோம்
வாழ்வோரைக்கண்டால் வயிறுப்பிவீங்குவோம்
நற்றவம்செய்யாமல் நாளெல்லாம்தூங்குவோம்
நல்வேதநாயகன் பாதத்தைநீங்குவோம் நெஞ்சே

## மனமயக்கந் தவிர்த்தல்

**144.** இராகம்-எதுகுலகாம்போதி, அடதாளசாப்பு.

பல்லவி

நீமலைக்காதே நெஞ்சே நீமலைக்காதே நீமலை

அநுபல்லவி

நேமத்துடன்ஐயன் நாமத்தைப்போற்றிடில்
க்ஷேமத்தைக்கொள்ளுவோம் காமத்திலேசிக்கி நீமலை

சரணங்கள்

1 மோசத்தையும் அவிவேகத்தையும்தரும்
போகத்தையும்உத்தி யோகத்தையும்கர்பி நீமலை

2 ஆட்டையும்மக்தையின் மாட்டையும்கட்டிய
வீட்டையுமுன்கெட்ட கேட்டையுமேயெண்ணி நீமலை

3 கீச்சுக்கீச்சென்றோம் மூச்சுபோனால்ஒரு
பேச்சுக்காகாமலப் பீச்சுக்குழல்நம்பி நீமலை

4 நாட்டைக்கொள்ளையிடும் வேட்டைக்காரன்நமன்
காட்டைக்கலைத்துயிர் கூட்டைக்கொள்வான்ஐயோ நீமலை

5 கேட்டைத்தருஞ்சோற்று மூட்டைதனைஒன்ப
தோட்டைப்பாண்டத்தைக் கற்கோட்டையெனநம்பி நீமலை

6 கொண்டையிலேரத்னத் தண்டையிலேவிழிக்
கெண்டையிலேமதன் சண்டையிலேசிக்கி நீமலை

7 சேலையென்றும்முத்து மாலையென்றும்தினம்
வேலைகொள்ளும்பெண்கள் காலைத்தழுவியே நீமலை

8 சொத்துதமக்கென்று கத்துவதன்றிஆ
பத்துக்குதவாத புத்திரரைநம்பி நீமலை

9 தாயகனைவேத நாயகனைவிட்டு
மாயவனைபட்டுத் தூயநெறிகெட்டு நீமலை

## நற்புத்தி கூறல்

145. இராகம்-சுருட்டி, திரிபுடைதாளம்.

பல்லவி

போனதுபோகட்டும் நீஇனியாகிலும்
புத்தியாய் வாழ்மனமே — போனது

அநுபல்லவி

ஞானமில்லாத நடக்கையைத் தொட்டாயே
நம்பினயென்னை நட்டாற்றில்கைவிட்டாயே — போனது

சரணங்கள்

1 எத்தனைநாள் இருந்தாலும் ஒருநாள்
இறப்பதுசத்தியமே அப்போ
தென்னவரும்புண்ணிய பாவம்அல்லாமல்மற்
றெல்லாம் அநித்தியமே
பித்தஉடம்பை வளர்த்திடச்செய்கிறாய்
பிரேதவயித்தியமே என்றும்
பேதமில்லாப்பரன் பாதம்பணிந்தோர்க்குப்
பேரின்பம் சாரநித்தியமே
பக்தர்சங்கத்தைநீ நித்தம்பிரிந்தாயே
பங்கம்புரிந்தாயே எங்குந்திரிந்தாயே — போனது

2 தன்றாரம்அன்றிப் பரதாரமதாய்க்குச்
சமானம்மிதுதேரே கெட்ட
தாசியைக்கண்டால் நமஸ்காரஞ்செய்துநீ
தப்ப வழிபாரே
இன்றுநாளையென்று நாள்போக்காமல்வினை
இக்ஷணமேதீரே யின்னும்
எந்தவுயிரையும் சொந்தஉயிரென
எண்ணித் தயைகூறே
என்றும்பணப்பேய்தனை நீகும்பிட்டாயே
ஏச்சுக்குட்பட்டாயே சீச்சீநீகெட்டாயே — போனது

3 நாதனைப்பேசிடும் நாவினால்அற்ப
நரஸ்துதிபாடாதே நாளும்
நானெனதென்றபி மானம்பிடித்துநீ
நாடெங்கும் ஓடாதே

சாதகபாதகம் என்னவந்தாலும்
தவம்விடக்கூடாதே கோடி
தர்மம்உனக்குண்டு கர்மம்பிள்ளைக்கும்
தனத்தினைத் தேடாதே
போதவேதநாயகன் தாள்விடுத்தாயே
பொன்னை அடுத்தாயே என்னைக்கெடுத்தாயே போனது

---

## நித்தியானந்தந் தேடல்

146. இராகம்-இந்துஸ்தான்காப்பி, ஆதிதாளம்.

பல்லவி

நித்தியானந்தநதைநாடு பர
நின்மலசுகந்தேடு மனமே நித்தி

அநுபல்லவி

சத்தியமார்க்கர் தணிலேகூடு
சற்சனசங்கத்துடனஉறவாடு நித்தி

சரணங்கள்

1 இந்திரஜாலம் உலகவைபோகம்
இன்றைக்கிருப்பது வோசந்தேகம்
அந்தரமின்னல்போல் அழியுந்தேகம்
ஐயோஅதனுடன் உனக்கென்னஸ்நேகம் நித்தி

2 தனதானியமுத லானசம்பத்து
சாசுவதமோஅதற் காயிரந்தத்து
தினமுங்கவலை விளைத்திடும்வித்து
சீச்சீஅதனை விரும்பல்விபத்து நித்தி

3 மெய்யேஒன்றுக்கும் உதவாபண்டம்
மிருகாதிகள்சூழ் மாமிசகண்டம்
பொய்யோஇதற்கிங்கு நித்தியகண்டம்
புண்ணியஞ்செய்யுனக் காயிரந்தண்டம் நித்தி

4 காண்பதெல்லாம்நிலை யல்லதுநித்தியம்
காயம்இறந்திட வேண்டுமகத்தியம்
வீண்பொருள்மீதுனக் கென்னபைத்தியம்
வேதநாயகன் சொல்லேசதத்தியம் நித்தி

---

## கள்ளஞானம்

147. இராகம்-இந்துஸ்தான்காப்பி, ரூபகதாளம்.

பல்லவி

புண்ணியம்போல் பாபமனமே
புரிந்தோம்நாம் தினமே புண்

அநுபல்லவி

திண்ணமாகக்குளிக்கப் போயுந்தன்மேலே
சேற்றைப்பூசிக்கொண்டு திரும்புதல்போலே புண்

சரணங்கள்

1 கையிலேபிடிப்பது ஜெபமாலை
கக்கத்தில்வைப்பதுவோ கன்னக்கோலை
மெய்யாகத்தினம் படிப்பதுதர்மநூலை
மேலும்மேலும்நமக்கு துன்மார்க்கவேலை புண்

1 ஒருபெண்வேண்டாமென்று கொள்வோம்சந்நியாசம்
ஊரில்உள்ளபெண்கள் மீதெல்லாம்நேசம்
பருக்கப்பசியில்லாத போதுவுபவாசம்
பசித்தால்ஒருபானை பருக்கையுநாசம் புண்

3 கடவுளைத்துதிப்பது போல்வாய்பாடும்
கண்ணுங்கருததுங்கண்ட இடமெங்கும்ஓடும்
திடமாககோயிற்குள்ளே தேகம்போய்கூடும்
சிந்தனைவெளியிலே திரிந்துதிண்டாடும் புண்

4 ஆனதலையில்வளர்ப்பது ஜடைமுடியே
அனுதினமும்கெடுப்ப தாயிரங்குடியே
தானம்பிறர்அறியக் கொடுப்பதோர்நொடியே
தனியேவந்தவனுக்குத் தான்தடிஅடியே புண்

5 அடித்திடும்கொடுமையிற் புலிக்குநாமேலே
ஆகையினால்ஆசனம் புலித்தோலே
நடித்திடும் குரங்கு நாம்சேட்டையினாலே
நமக்குள்ளகுறைவு பின்புறத்தொருவாலே புண்

6 அங்கமெல்லாங்கரு மேகஷியாகி
அதனைமறைக்கமெய்யில் அணிவோம்விபூதி
கங்கையில்இல்லாபொருள் மனைவியாகி
நாம்துறந்தோம்நல்ல துறவறநீதி புண்

7 ஏகஅன்னம்தள்ளிப் பிடிப்போம்ஒருசந்தி
இதரபக்ஷணங்களால் நிறைப்போம்தொந்தி
தேகபலம்ஒடுங்கில் விரக்தியாம்பிந்தித்
திடமானால்நம்செய்கை சிரிக்குமேசந்தி புண்

8 உள்ளத்தில் அழுக்கை எந்நாளுமேகழுவோம்
உடலைக்கழுவநீரில் அடிக்கடிவிழுவோம்
கள்ளத்தனமாகச்சந் நிதிமுன்னே அழுவோம்
காசுக்குநாயையும் கைகட்டித்தொழுவோம புண்

9 பசியில்லாதவர்க்குச் செய்வோம்அன்னதானம்
பசித்துவந்தோரைச் செய்வோம்அவமானம்
சுசியாகப்பிறர்க்குப தேசிப்போம்ஞானம்
துர்க்குணக்கடலிலே தினஞ்செய்வோம்ஸ்நானம் புண்

10 பெருமையாய்அணிவது காவிவஸ்திரமே
பிரதிஷ்டைசெய்வது தர்மசத்திரமே
பாவியநமது துர்க்குணம்சமுத்திரமே
பாடோம்வேதநாயகன் சரித்திரமே புண்

---

## பொருளாசை யொழித்தல்

148. இராகம்-கனகவசந்தம், ஆதிதாளம்.

பல்லவி

பொருளைவிரும்பவேண்டாம் மனமே
பொருளைவிரும்பவேண்டாம் பொரு

அநுபல்லவி

ஒருவரிடமுநில்லா தூரெங்குப்பறக்கும்
திருவேதநாயகன் சேவடிதுறக்கும் பொரு

சரணங்கள்

1 பணமுள்ளவர்க்குஎமன் பயப்படுவானோ
குணமுடன் அவர்களைக் கும்பிடுவானோ பொ

2 தனவான்களைத்துயர் சார அஞ்சிடுமோ
கனசுகமவருடன் கலந்துகொஞ்சிடுமோ பொ

3 பார்க்கவொட்டாமலே பார்வையைக்கெடுக்கும்
வார்த்தைசொல்லாமலே வாயையுந்தடுக்கும் பொ

4 மண்டலத்தில் நமக்குவயி றுருகுகிரா
கண்டபடிஉண்ணநாம் கபந்தனுக்கெதிரா பொ

5 ஊரில்நம்மிருப்பிடம் ஒருமுழமட்டே
பாரிலேநமக்கேன் பலமனைக்கட்டே பொ

6 உலகில்வயிறுநமக் குள்ளதுசானே
மலைமலையாய்க்குவித்து வைக்குதல்வீணே பொ

7 சங்கையில்லாமற்பணந் தலைவெட்டுஒருவாள்
தங்கைவருவாள்பின்பு தமக்கையும்வருவாள் பொ

8 விஸ்தாரமாகப்பொருள் வேண்டுதல்தாழ்வு
செத்தால்தெரியுமே செட்டியார்வாழ்வு பொ

9 அவருடன்ஏழைக்குத வாப்பணமபிணமே
பொருள்அதைக்குழிவெட்டிப் புதைக்குதல்குணமே பொ

10 பூதமானாலும்உண்ணப் போதுமாகாணி
ஆதலால்நமக்கேன் ஆயிரங்காணி பொ

11 கெண்டைச்சேலைக்காரி தான்கிழவியாகாளோ
கொண்டைப்பூமுடித்திடும் குமரிசாகாளோ பொ

12 வெறுங்கழுத்தாயிருந்தால் விக்குமோதொண்டை
உறுந்தலைஅணிபோனால் உடையுமோமண்டை பொ

13 கடுக்கன்இல்லாவிட்டாற் காதுகேளாதோ
உடுப்புகள்இல்லாவிட்டால் உடம்புநீளாதோ பொ

14 கந்தல்அணிந்தவள் கர்ப்பம்ஆகாளோ
விந்தைநகைஉள்ளவள் மெலிந்துபோகாளோ பொ

15 பொருந்தச்செலவிடாமல் புதைத்திடும்பணமே
இருந்தென்னபோயென்ன இதில்என்னமனமே பொ

16 நிதிவெள்ளியாதிகள் நிச்சயம்மண்ணே
புதையல்தன்னினமென்று புசிப்பனமண்பெண்ணே பொ

---

## செல்வச் செருக்கு

---

### 149. இராகம்-தேவமனோகரி, ஏகதாளம்.

பல்லவி

வீண்கர்மம் ஏன்மனமே உனக்கு
வீண்காமம் ஏன்மனமே வீண்

அநுபல்லவி

காண்பொருள்சகலமும் கடவுள் ஆதீனம்
கனதொண்டமானும் தோட்டியுமேசமானம் வீண்

சரணங்கள்

1 நம்முடன்பிறந்ததுண்டோ உத்தியோகம்
நமக்குமுன்னே அதுபலர்அனுபோகம்
அம்மஅதற்குக்காத் திருப்பர்அநேகம்
அனைவர்க்கும்உண்டு ராஜீகதெய்வீகம் வீண்

2 தாசிகள்போல்செல்வம் பலருடனேகூடும்
தனமிருந்தஇடத்தில் தரித்திரம்நாடும்
கூசாமல்யானையைக் கொசுகுமேசாடும்
குப்பையுயர்ந்து கோபுரத்தையும்மூடும் வீண்

3 கனவில்கண்டகத்திரிக் காய்கறிக்காமோ
கல்லால்இரும்பால் காயங்கொண்டோமோ
தினம்அசையாமல்மண்ணில் வேர்கொண்டநாமோ
சினந்துநாம்சபித்திடில் திசையெல்லாம்வேமோ வீண்

4 தம்பொருளென்பர் மனைவியர்மைந்தர்போர்
தப்பினுல்விடுவரோ தாயாதிக்காரர்
வெம்பிச்சமயம் பார்த்திருப்பார்சோரர்
மிச்சத்தைச்சுருட்டுவார் மேல்அதிகாரர் வீண்

5 இடையில்கோவணமின்றிப் பிறந்தோமெய்யே
இறந்திடுங்காலத்தும் நாம்வெறுங்கையே
உடைமைநமதுசொந்தம என்பதுபொய்யே
ஊரார்பொருளைநாம் சுமந்தோம்ஐயே வீண்

6 ஜெகமுழுதும்நமக்குச் சர்வமானியமா
சிந்தித்தகாரியம் எல்லாம்ஜயமா
சுகதுக்கபேதம் இல்லாதிவ்யமயமா
துஷ்டன்இயமனுக்கு நமைக்கண்டால்பயமா வீண்

7 நீடுந்தங்கையும் தமக்கையும்அதிநேசம்
நிதமுங்கைமாறிக் கொள்வார்அவர்வாசம்
சூடுண்டமாடுபோல் துள்ளல்அபாசம
துள்ளினமாடுபொதி சுமக்கும்பிரகாசம் வீண்

8 தாய்வயிற்றிலிருந்து ஜனித்திட்டபோது
சட்டைதலைப்பாகுடன் நாம்வந்ததேது
மாயப்பிரபஞ்சத்தின் வாழ்வெல்லாஞ்சூது
மாவேதநாயகனை மறக்கவொண்ணாது வீண்

---

## உலக வாழ்வை வெறுத்தல்

150. இராகம்-இந்துஸ்தான்காப்பி, ரூபகதாளம்.

பல்லவி

வாழ்வைநம்பாதே மனமே வாழ்வைநம்பாதே வாழ்

அநுபல்லவி

தாழ்வில்லாத நமதுஸ்வாமி
தாளைத்தேடு பாடுபூமி வாழ்

சரணங்கள்

1 தேகமாம்ஸமூட்டை பல
ஜெந்துவுக்கும்நல்லவேட்டை அதில்
ஓகோஅனந்தம்ஓட்டை உயிர்
ஓடிடஎத்தனைபாட்டை இந்த வாழ்

2 இன்றைக்காணுவார்நாடு நாளை
எடுப்பார்கையிலே ஓடு உடல்
ஒன்றுக்குதவாத கூடு இதை
உற்றுப்பார்த்தால்வெட்கக் கேடு புவி வாழ்

3 பெண்டுபிள்ளைக்கென்ன வாட்டம் நம்மைப்
பிடுங்கித்தின்பதிலே நாட்டம் கையில்
உண்டாகும்போது கொண்டாட்டம் செல்வம்
ஓய்ந்தால்சகலரும் ஓட்டம புவி வாழ்

4 இந்தஉலகத்திற் பிறந்தார் முன்னம்
எத்தனையோபேர்கள் இறந்தார் பெற்ற
தந்தைதாய்பாட்டரும் மறந்தார் நாலு
தாரங்கள்போய்நம்மை மறந்தார் புவி வாழ்

5 இன்றுபல்லக்கினிற் போவார் நாளை
எடுக்கும்ஆள்களும் ஆவார் நார்
என்றவர்யாவருஞ் சாவார் மதி
ஈனர்நரகத்தில் வேவார் புவி வாழ்

6 கூத்தில்அரசனைப்போலே வேஷம்
கொண்டவர்க்குண்டோ செங்கோலே இந்த
சாத்தியநாடகசாலை அந்தச்
சாலையில்நாம்வந்த மூலை புவி வாழ்

7 வண்டியும்ஓடத்தில் ஏறும் ஓடம்
வண்டியில்ஏறும் நாள்தோறும் நாம்
கொண்டபொருள்கைமாறும் வேதம்
கூறுஞ்சொல்லே நிறைவேறும் புவி வாழ்

8 எண்ணிக்கையில்லாமல் இங்கே முன்னே
இருந்தவரெல்லாம் எங்கே நாமும்
நண்ணியேபோகவேண்டும் அங்கே வேத
நாயகன்பாதம் நம்பங்கே புவி வாழ்

## உடலை வெறுத்தல்

**151.** இராகம்-இந்துஸ்தான்காப்பி, ரூபகதாளம்.

பல்லவி

உடலைநம்பாதே மனமே — உடலை

அநுபல்லவி

குடலுந்தசையும் எலும்புந்நரம்பும்
கொழுத்துப்பழுத்துப் பழித்துநிரம்பும் — உடலை

சரணங்கள்

1 இந்திரியம்மலமூத்திரம் தசை
இரத்தம்நிறைந்தபாத்திரம் பாச
பந்தப்பேய்வளர்க்ஷேத்திரம் வெறும்
பவபந்தநாடகசூத்திரம் இந்த — உடலை

2 ஆசைப்பக்ஷியின்கூடு பல
அசுத்தஞ்சேர்குப்பைமேடு இதை
ஏசிப்போபோவென்னும் வீடு கிட்ட
எட்டிவாவாவென்னுங்காடு இந்த — உடலை

3 கண்ணில்பீளைகள்வடியும் இரு
காதிற்குறும்பி படியும் சளி
வண்ணமூக்கில் வடியும் நல்ல
வாயுமளச்சிலாய்முடியும் இந்த — உடலை

4 பயனின்றுவிழுமட்டை கொடும்
பாம்புகழற்றுஞ்சட்டை போலே
உயிர்போனால்வெறுங்கட்டை இதை
உற்றுப்பார்த்தால்லொடலொட்டை இந்த — உடலை

5 காகம்நாய்நரிக்கூட்டம் பல
கழுகுக்கும்நல்லஊட்டம் கரு
மேகம்நிழல்போலஓட்டம் இது
மெய்யல்லபொம்மலாட்டம் இந்த — உடலை

6 எத்தனைபேர்புவியாண்டார் அவர்
எல்லவருமுன்னேமாண்டார் இங்கே
செத்தவரில் எவர்மீண்டார் தெய்வ
சித்தம்ஒருவருந்தாண்டார் இந்த உடலை

7 மோடியேன் ஒருக்காலே உடல்
முழுதும்எலும்புதோலே அதில்
நாடிஒடுங்கினாலே பின்பு
நமக்கிங்கேயென்னவேலை இந்த உடலை

8 கணவன்தெய்வமென்பாள்பாரி அவள்
காரியத்திற்கெட்டிக்காரி செத்த
பிணமுன்வருவாளோ நேரில்சுகம்
பிரிந்ததற்கல்லோ ஒப்பாரி இந்த உடலை

9 கிருமிகட்குபகரணம் தசை
கிழிந்தவடியும் இரணம் சிறு
கருமமேற்கொள்ளுந்திரணம் இது
கரணந்தப்பினால்மரணம் இந்த உடலை

10 வேதநாயகன்கூறும் சொல்லை
மீறினால்நலமாறும் பல
காதந்தூர்க்கந்தநாறும் பித்த
கபமலஞ்சலம்ஊறும் இந்த உடலை

---

## பணதூஷணை

---

152. இராகம்-சங்கராபரணம், ரூபகதாளம்.

பல்லவி

பணமேஉன்னால்என்ன குணமே தண்டம்
பண்ணினேன்சற்றும்என் கண்ணின்முன்னில்லாதே பண

அநுபல்லவி

மணமில்லாதமோகம் குரோதந்தன்
மார்க்கமுமூர்க்கமும் யார்க்குமேபோதிக்கும் பண

சரணங்கள்

1 தேடியஉனைவைத்து மீடியவர்க்குநீ
தீர்க்காயுசுதருவாயோ இனி
நாடியமன்வந்து சாடும்போது
நானென்றுமுன் வருவாயோ
கூடியபேர்கள் குடியைக்கெடுப்பாயே
கொல்லச்சொல்லிபின்னுங் காட்டிக்கொடுப்பாயே
ஓடிஓடிஅற்பரைப்போ யடுப்பாயே
உத்தமரைக்கண்டால் ஓட்டமெடுப்பாயே பண

2 மத்தியில்உன்னைப் படைத்ததல்லால்முன்
வரும்போதுகூட வந்தாயோஇஷ்ட
சித்தியும்சக்தியும் நித்தியங்கைகூடச்
சிலாசாசனம்நீ தந்தாயோ
புத்தியிருக்கும இடம் விட்டுநீங்குவாய்
பொய்யும்பிரட்டும்உள்ள இடத்தேதாங்குவாய்
எத்திசையுங்கெடுத்துப் பழிதாங்குவாய்
ஈயாதவர்கையகப்பட்டுத் தூங்குவாய் பண

3 மண்ணில்உனை நரர்பண்ணினதன்றி
மனிதரைநீபண்ணினாயோ உயர்
விண்ணினைமண்ணினைப் பண்ணினோன்நேசம்
விலகச்செய் சத்துருநீயோ
என்னரிதான இடமெங்குமோடுவாய்
இந்திரஜாலஞ்செய்து விளையாடுவாய்
வண்ணநரர்கள்மனக்கண்ணை மூடுவாய்
வைத்துப்புதைப்பவர் வாயில்மண்போடுவாய் பண

4 வஞ்சகமாயப்பிரபஞ்சமெல்லாம்நீ
வளைத்துச்செய்வாய் கொடுங்கோண்மைகெட்ட
நஞ்சம்நீ கருணை நெஞ்சர் எண்ணுதமெஞ்
ஞானிகட்கல்லவோ மேன்மை
பஞ்சமாபாதகங்கட்கு நீஆலயம்
பாரில்துன்பமென்பதெல்லாம் உன்தன்மயம்
மிஞ்சஉனையுடையோர்க் கொழியாப்பயம்
வேதநாயகன்மேல் உனக்குண்டோஜயம் பண

## பரஸ்திரீகமனம் விலக்கல்

### 153. இராம்-கமாஸ், ஆதிதாளம்.

பல்லவி

மாதரை நினையாதே நெஞ்சே — மாத

அநுபல்லவி

பூதலமேல்பெரும் பாதகமும்விப
ரீதமுமேவரும் ஆதலினால்மறு — மாத

சரணங்கள்

1 அருமஞ்சட்பூச்சல்லோ முகக்காந்தி
அடிக்கடிபெண்கள்நிற மாறும்பச்சோந்தி
ஒருமையாயவர்களை விரும்புதல்பிராந்தி
உடற்குட்புகுந்துபார்த்தால் வரும்வாந்தி — மாத

2 முன்னழகும்பின் னழகுமேபட்டு
முகஅழகானது நெற்றியிற்பொட்டு
அன்னநடையென்பது கவிஞர்கள்கட்டு
அழகுநில்லாமற் பறந்திடுஞ்சிட்டு — மாத

3 மரித்திடும்மாதர்கள் சுகம்அரைக்ஷணமே
மறுநிமிஷத்தில்உண்டாந் துன்மரணமே
பிரிந்திடில்மலஜலம் எலும்புதோல்பிணமே
பிராணன்போனால்நரிநாய் பிடுங்கிடும்பிணமே — மாத

5 மேனிமுழுதும்வெளி வேஷத்தின்தளுக்கு
மினுக்கெண்ணைபூசியே காட்டுவாள்தளுக்கு
ஈனம்அறவேதினந்தினந் தண்ணீர்முழுக்கு
இல்லாவிடில்கப்பல் ஏற்றலாம்அழுக்கு — மாத

4 இடையில்மயக்குவது சாலியன்சேலை
இருகாதில்ஜொலிப்பது தட்டான்கைவேலை
கடையிலேவிற்பது கொண்டைப்பூமாலை
கன்னிக்குச்சொந்தமெல்லாம் வெறுந்தோலே — மாத

6 கன்னியர்விழிஉயிர் பிளந்திடும்அம்பு
கனதனம்கமன்குழல் உனக்கட்டுந்தும்பு
அன்னியமாதர்கள் விஷமெனநம்பு
அவருடன்பேசுவதே பெரும்வம்பு மாத

7 இதமாகவேமணஞ் செய்தசீமாட்டி
இகபரம்இரண்டிற்கு மேவழிகாட்டி
இதாமின்னார்களைச் சேர்வோன்காமாட்டி
என்றைக்கும்அவனுக்கு மூத்தவள்பேட்டி மாத

8 என்றுங்காமதுரர்க்கு ரோகங்கள்நிலையே
ஈனமும்போட்டகையில் வேண்டும்வேப்பிலையே
அன்றுகொண்டவன் அறிந் தால்வருங்கொலையே
அறபசுகத்தில்வரும் ஆபத்துமலையே மாத

9 கழுவிவாசனைஊட்டா விடில்கெட்டவீச்சு
காதவழிஅடிகளும் இதுநிசப்பேச்சு
தொழும்அழகென்ப தெல்லாம்மேற்பூச்சு
தோகையர்கிழமானால் கனவச்சு மாத

10 அழகழகென்பதெல் லாம்வெறும்ஜாலம்
அணியுந்துணியும்போனால் அலங்கோலம்
விழல்நரகசுகத்தினை வெறுப்பதுசீலம்
வேதநாயகன்சொல் அநுகூலம் மாத

---

## இதுவும் அது

154. இராகம்-கௌளிபந்து, ஆதிதாளம்.

பல்லவி

மனமேஉனக்குமகாசுகுர்தம் மறு
மாதரைநினையாதே மன

அநுபல்லவி

தினமென்சொற்படி கேட்டால்உனைத்துதி
செய்வேன்மறுத்திடில் வைவேன்வைவேன் மன

சரணங்கள்

1 சட்டிமுகத்தைச்சந்திர பிம்பமென்றுவெறும்
சதைக்கட்டிகளைத்தங்கக் கும்பமென்றும்
முட்டிக்கால்களைச்சொர்ண ஸ்தம்பமென்றும் மாதர்
முன்கமலைக்குஞ்சபாக் கம்பமென்றும்
மொட்டைத்தலைக்கு முழங்காலுக்கும்பிணைத்தே
முடிந்தாயேவினை படிந்தாயேகெட்ட — மனமே

2 உச்சிட்டத்தைஅமிர்தக் கட்டியென்றும்நாறும்
ஊத்தவாயைப்பவளப் பெட்டியென்றும்
மச்சமயிரைவடியுங்கிட்டி யென்றும்தே
வாங்குநாளை அபூர்வசிட்டி யென்றும்
பிச்சைக்காரன்கந்தையை மெச்சிக்கொள்வதுபோல்
பிடித்தாயேபொய்யைப் படித்தாயேகெட்ட — மனமே

3 செட்டிகளால்அல்லவோ இடையழகுஎண்ணெய்ச்
செக்கர்களால்அல்லவோ சடையழகு
தட்டார்களால்அல்லவோ நடையழகு மாதர்
தம்மழகெல்லாம் பலநடையழகு
குட்டிச்சுவரில்முட்ட வெள்ளழுத்தோ நீ
குதித்தாயேபெண்ணைத் துதித்தாயேகெட்ட — மனமே

4 சொத்தைப்பற்களைமுத்து சரங்களென்று மிக
கும்பியதோளை மூங்கில்மரங்களென்றும்
சித்தமாகக் கமலங்களென்றும்
சிக்குமயிரைச் சலதரங்களென்றும்
பித்தன்போல்வர்ணித்து வேதநாயகன்அடி
பிரிந்தாயேதுன்பம் புரிந்தாயேகெட்ட — மனமே

---

## இதுவும் அது

### 155. இராகம்-சௌராஷ்டிரம், ஆதிதாளம்.

பல்லவி

பெண்ணாசையே பெருப்பித்து அதில்
பிரமிப்பதெல்லாம் விபத்து — பெண்

அநுபல்லவி

கண்ணாலேவலைபூட்டி அற்பசுகமே
காட்டிப்புருஷரை வாட்டிவதைக்கும் பெண்

சரணங்கள்

1 கலகலென அசைப்பார் அவர்தண்டை
காட்டுமிருகமயிரே கொண்டை
உலகைமயக்கும் அவர்சேலைக்கெண்டை
உற்றுப்பார்த்தால்நம்மை ஏசுவர் அண்டை பெண்

2 கேவலம்அங்கமெல்லாம் பிணநாற்றம்
கிறுகிறெனமயக்கந் தலைக்கேற்றம்
ஓவியமேனிமினுக்கும் பொய்த்தோற்றம்
உள்ளேதிரும்பிப்பார்த்தால் முழுநாற்றம் பெண்

3 கட்டிகட்டியாகக் கண்பீளைசாரும்
காதிற்குறும்பிகளின் எச்சல்சேரும்
கொட்டும்வியர்வைதலைப் பேனும்ஈறும்
கும்பிநாற்றமாங் குளித்திட்டநீரும் பெண்

4 மண்ணில்எலும்புதோல அல்லவோமாது
மற்றதெல்லாஞ்செட்டி தட்டாற்செய்சூது
பெண்ணில்லாவிட்டால் பிழைப்பவர்க்கேது
பெண்ஜெயமும்அவர் போனால்செல்லாது பெண்

5 மண்ணிற்பரஸ்திரீயைச் சேருநிமித்தம்
வாழ்வுஞ்சுகமுந்தனமும் அநர்த்தம்
எண்ணிலாத்துன்பமும் புண்களும்சித்தம்
ஈளுறும்புக்கு மகோற்சவம்நித்தம் பெண்

6 இரவில்கூத்தாடிகள் வேஷம்எடுப்பார்
இருட்டில்எவரு மயங்கிக்கொடுப்பார்
தரையில்மின்னார்பகல் வேஷங்கொடுப்பார்
ஜாலவித்தைசெய் துலகைக்கெடுப்பார் பெண்

7 உண்டாய்விஷம்வெட்டி னாற்கொல்லுங்கத்தி
உன்னினோர்கண்டோரைநீ கொல்லும்பெண்சத்தி
அண்டாமல்ஆடவர் ஓடுதல்புத்தி
அமர்வேதநாயகன் சொற்கேட்டால்சித்தி பெண்

## உய்யும் வழி

156. இராகம்-சங்கராபரணம், ரூபகதாளம்.

பல்லவி

உய்யும் வகையேது நெஞ்சமே வேறு
செய்யும் உபாயங்கள் வஞ்சமே உய்யும்

அநுபல்லவி

மையல்தருமம் மலங்களைநீக்கு
ஐயன்பொற்பாதத்துக் கென்னை ஆளாக்கு உய்யும்

சரணங்கள்

1 நிந்தைமலந்த மூவாசையே நாளும்
நிக்கிரகஞ்செய் அப்பாசாசையே
எந்தவிதத்திலு மாசையே
என்றென்றுஞ்செய் தெய்வபூசையே உய்யும்

2 நான்எனதென்றபி மானமே மிக
நாட்டுவதுமதி யீனமே
ஏன்எனக்கிந்த அஞ்ஞானமேநீதான்
என்றுஞ்செய்வாய் ஜெபத்தியானமே உய்யும்

3 பெண்டுபேய்பண்ட பதார்த்தமே பெரும்
பீடையாம்அந்தச் சங்கார்த்தமே
கொண்டஅறந்தான் யதார்த்தமே
கூடில்உண்டாம் பரமார்த்தமே உய்யும்

4 மையல்மிகுந்து கெடாதே புவி
வாழ்வென்பது வெறும்சூதே
மையும்மெய்யன்பு விடாதே வேத
நாயகனைநிதம் ஓதே உய்யும்

## நெஞ்சொடுபிணங்கல்

### 157. இராகம்-அசாவேரி, ஆதிதாளம்.

பல்லவி

அநுதினம்இந்தப்படி உன்னுடன்போர் கொடுக்க
யாராலாகும் நெஞ்சே அநு

அநுபல்லவி

கனபக்தரொடுசேர்ள்ளாய் காமானுபந்தந்தள்ளாய்
தினமும்என்னுரைகொள்ளாய் சீச்சீஇதென்னபிள்ளாய் அநு

சரணங்கள்

1 அனந்தமுறைநான் சொல்லக்கேளாய்
அகந்தை அழியாயோ
தினந்தினமும்ஒழியாயோ நீபுரிந்திடுந்துர்ச்
செய்கைகள் ஒழியாயோ நீ
நினைந்ததேதிடமா உன்னால்
நிதமுஞ் சங்கடமா
சினந்தல்லவலைக்கு நீயிருப்பிடமா
செய்வதெல்லாம் அடமா அநு

2 படித்ததனிவேதந்தான் சொல்லிய
படிநீ நடவாயோ
கடித்தவிஷம் ஒப்பாகியவினையின்
கடலைக் கடவாயோ நீ
பிடித்ததேபிடியா ஆசைப்
பேயுன்னிடம் குடியா
எடுத்தமாயைக்கு நீமிதியடியா
இருப்பதிலுனக்கு மதியா அநு

3 கடந்தமேலோர் பகர்ந்தமொழியைக்
கனவிலு மதியாயோ
நடந்தபொய்யாகிய வழிநீங்கி
நல்வழிமிதியாயோ நாம்
அடைந்தஉடல்சதமா புவிவாழ்
வானது சாசுவதமா
தொடர்ந்துவேத நாயகன்ஹிதமாய்ச்
சொல்லியுமே மதமா அநு

## துர்க்குணம் போன்ற நற்குணங்கள்

158. இராகம்-தன்னியாசி, ஆதிதாளம்.

பல்லவி

செய்யவேண்டுமானால் நீ அநுதினம்
செய் செய் செய் மனமே — செய்

அநுபல்லவி

ஐயோவெறுத்தாய் நற்செய்கைகளையே
ஆகையிற்பின்சொலுந் துர்ச்செய்கைகளையே — செய்

சரணங்கள்

1 எதிர்உதவிகருதி ஈயாலோபம்
ஈனர்கள்காற்றடிக்கினும் அதில்கோபம்
வதிதீவினைமேல் தீராமோகம்
வருவதுவரட்டும் இப்படிபாபம் — செய்

2 பரன்அடிமீதில் அடக்காமோகம்
பலதெய்வங்களைப் பணிபாத்துரோகம்
இரவும்பகலும் புண்ணியந்தன்னில்இராகம்
இப்படியேதான் பாபம்அநேகம் — செய்

3 பலருக்கும்உதவிசெய்வதில் பலவந்தம்
பரஸ்திரீக்கிடம்ஈயாத நிர்ப்பந்தம்
தலமிசைபிறர்க்கிடர் செய்வதில்மந்தம்
தளராதிவ்வகைதோஷம் அனந்தம் — செய்

4 பொய்கொலைகளவு செய்தறியாமை
புனிதர்போல்நாம் இலையென்னப்பொறுமை
மெய்விலகிய அவதூறுதராமை
மேன்மேல்அப்படியே பலதீமை — செய்

5 நற்குணந்துர்க்குணம் எனச்சொலும்அசத்தியம்
நற்காரியம்பேணாத அபத்தியம்
நற்கதிபெறுவதில் ஒழியாபைத்தியம்
நானிலத்திவ்விதமான துஷ்கிருத்தியம் — செய்

6 நன்மைதுன்மைகள்மேல் காமக்குரோதம்
நாளும்அச்செய்கையிலே பிடிவாதம்
தன்மநிமித்தம்சர்வலோக விரோதம்
தளராதிவ்வாறே அபராதம் செய்

7 ஆட்கொள்வேதநாயகன் பாதமுத்தாரம்
அடியேன்உனக்குரைத்தேன் சவிஸ்தாரம்
கேட்கிலைஆதலிற்கொடுத்தேன் உத்தாரம்
கெட்டசெய்கைகள் உனதிஷ்டப்பிரகாரம் செய்

---

## மன வஞ்சகத்தைப்பற்றி கூறுதல்

### 159. இராகம்-பந்துவராளி, ஆதிதாளம்.

பல்லவி

புரட்டெல்லாம்எங்கே படித்துக்கொண்டனை
புகலுவாய் மனமே இந்தப் புர

அநுபல்லவி

முரட்டுமார்க்கம் சென்றழைக்கிறாய் அணு
முனையின்உள்ளும்நீ நுழைக்கிறாய்இந்தப் புர

சரணங்கள்

1 பொருளைத்தந்தவன் அருளைமறந்து
பொருளுக்கே உபசாரம்செய்யும்
மருலற்போல்அற்றப் பொருளைவிரும்பு
வான்பரன்உபகாரம் தன்னை
மறந்தாய்உன்னைத்துறந்தாய் பொன்னைச்
சிறந்தாய்பின்னைப் பறந்தாய்பாரில்
உருளில்லாமல் தேரோட்டுகிறாய்பானு
உதயம்இரவிற் காட்டுகிறாய்கன
இருள்கொள்பாசத்தில் மாட்டுகிறாய்
என்னைப்பம்பரம் ஆட்டுகிறாய்இந்தப் புர

2 மண்டலந்தனில்கண்ட பொருளெல்லாம்
வண்மையென்றுநீ குறித்தாய்பிர
சண்டைஆசைகள் உண்டதாலேநீ
தலைமயங்கியே வெறித்தாய்தனத்

தாசிஎனப்பேசி வினை
பூசினையே சீசீ பார
அண்டங்களைக்க அடக்குறாய் கால்போல்
ஆழ்கடல்மீதும் நடக்குறாய்சல
எண்டருவிண்ணுங் கடக்கிறாய்புண்யம்
என்றால்எழாமற் கிடக்குறாய் இந்தப் புரட்

3 என்னசொல்லினும் உன்னைச்செய்யாயுனக்
கேனிந்தத்தலையாட்டை மாறும்
முன்னமேஐயோ வின்னாஞ்செய்கிலே
மூனுந்தீவினைத்திரட்டை த்து
மோசம்எய்தும் நாசம்லவ
லேசும்விசு வாசம்இன்றி
அன்னம்போ லெங்கணும்பறக்கிறாய் கல்லின்
ஆவிடத்தும்பால் கறக்கிறாய்சுக
தன்னலந்தனைத் துறக்குறாய்வேத
நாயகன்சொல்லை மறக்கிறாய்இந்தப் புரட்

---

## மன மயக்கம்

1‘0. இராகம்-வசந்தா, ஆதிதாளம்.

பல்லவி

மயங்குறாய்மனமே ஐயோவீணே மயங்

அநுபல்லவி

மயங்குறாய்மனமே வாழ்வுசொப்பனமே
மாறாமல்தினமே ஐயோவீணே மயங்

சரணங்கள்

1 ஏகனைமோக்ஷத் தியாகனைக்கருணைபிர
வாகனைப்பணியாமல் ஐயோவீணே மயங்

2 எண்ணியபெரியோர் நண்ணியபொருளாம்
புண்ணியம்புரியாமல் ஐயோவீணே மயங்

3 நேயம்உள்ளோர்கள் தாயகன்வேத
நாயகனைத்தொழாமல் ஐயோவீணே மயங்

---

## கால தூஷணை

### 161. இராகம்-தர்பார், ஆதிதாளம்.

பல்லவி

ஓகோகாலமே உன்போலெவர்க்
குண்டிந்திர ஜாலமே — ஓகோ

அநுபல்லவி

போகமாகவே அண்டம் பூவெல்லாமேய்வாய்
பூனைபோலிருந்துநீ புலியைப்போற்பாய்வாய் — ஓகோ

சரணங்கள்

1 ஊரெல்லாந்தூங்கினும் உனக்கில்லை தூக்கம
ஓயாமல்ஓடுவா யுனக்குண்டோதேக்கம்
ஆர்கேட்டால்உனக்கென்ன அறியாய்நீநோக்கம்
அதிகவட்டிகள்கொடுப்பவருக் குன்மேல்ஏக்கம் — ஓகோ

2 பாலரைக்கிழவராய் பண்ணியேகெடுப்பாய்
பகைமகன்ஜெபம் நடவாமலேதடுப்பாய்
காலிரண்டையார்க்குக கோலென்றுகொடுப்பாய்
காலனுக்குயிரெல்லாங் காட்டியேவிடுப்பாய் — ஓகோ

3 ஆயுதமில்லாமல் யாவையும்அறுப்பாய்
அழுதாலுந்தொழுதாலும் அகன்றெம்மைவெறுப்பாய்
சாயுந்திராசுபோலே சகலமுமகிறுப்பாய்
சகலஉயிரையுஞ் சட்டியிலிட்டுவறுப்பாய் — ஓகோ

4 கல்லைப்போல்உடம்பையும் வில்லைப்போல்வளைப்பாய்
கணந்தினம்மதிவாரம் ஆண்டெனகிளைப்பாய்
வில்லைப்போல்வதனத்தைச் செல்லுபோல்துளைப்பாய்
வீங்சழகியர்க்குத் தேவாங்கு விளைப்பாய் — ஓகோ

5 துக்கம்உற்றவர்க்குநீ தொலையாமற்கிடப்பாய்
சுகமுள்ளபேர்க்குநீ துரிதமாய்நடப்பாய்
விக்கலும்இருமலும் வேதையுங்கொடுப்பாய்
மிஞ்சங்கருமயிரைப் பஞ்சுபோற்கெடுப்பாய் — ஓகோ

மலைகள்மண்டபங்களை வலிமையாய்யிடிப்பாய்
வாரிஏழுகடலும் வற்றிடகுடிப்பாய்
தலைதடுமாறநீ தான்கொள்ளையடிப்பாய்
தனிவேதநாயகன் தலையபாலேலநடிப்பாய் ஓகோ

# உத்தியோக சம்பந்தக் கீர்த்தனை

## நியாய பரிபாலனஞ்செய்ய வரம் வேண்டல்

162. இராகம்-சாவேரி, ஆதிதாளம்.

பல்லவி

நானேபொதுநீதி தானேசெலுத்திட
நல்லவரம் அருள்கோனே நானே

அநுபல்லவி

தானேயாகிய சாக்ஷாத்காரமே
தேனேஅமுதே திவ்வியஞானசாரமே நானே

சரணங்கள்

1 வட்டவுலகில்யாரும பொதுவில்அனுபவிக்கும்
மழைகால்வெயில் பூதாதிபோலவே
இஷ்டர்அநிஷ்டர் எளியர்செல்வர் பெண்பூமான்
என்னும்பேதம் உன்னால்லவே
திட்டமாச்சரிநீதிசெலுத்தலின் மனநாட்டி
சிறியவழக்கம்பெரு வழக்கெனத்திண்ணநீட்டி
சட்டசாஸ்திரங்கள்மிக உணர்ந்தறிவினைதீட்டி
சகலஉயிர்களும்என் தன்னுயிர்போல்பாராட்டி
சிட்டபரிபாலன னெனுமுடிசூட்டித்
தீயர்மொழிபுகாமற் செவிவழிபூட்டிக்
கூகூஎனப்பொய் கதறும்படிமாட்டி நானே

2 அருணன்சந்திரனிலை நீக்கிலுந்தரைமேல்கீழ்
ஆயினும்அறத்தைநான் விடாமல்
வருணன்போற் பொருள்மாரிவழக்கர் பெய்யினும்அதை
வாங்கயாசகன் போற்கைநீட்டாமல்

வரும்வழக்கர்மனத்தை வன்சொற்களாற்சுடாமல்
மற்றைகீழ் உத்தியோகஸ்தர் வம்புக்கிடங்கொடாமல்
அருமடியாய்வழக்கா ராச்சியில்பின்னிடாமல்
அப்பன்பாட்டன் சொன்னுைய அறநெறிகைவிடாமல்
தருமதேவதைஞாய ஸ்தலந்தனில்நடிக்கத்
தப்புச்சாக்ஷிகள் கிடுகிடெனவேதுடிக்க
இருமையகல் அநிதியே ஓட்டமபிடிக்க
இலஞ்சவாங்கிகள் வெட்கத்தாலுயிர்மடிக்க நானே

3 அந்தவிலங்குமுடன் கூன்குருடுமைமுதலான
லானஜன்மம்வராமல் தடுத்தாயே
முந்தமானிடஜன்மம் வராமற்கடுத்தாயே
முன்சீப்பதிகாரமுங் கொடுத்தாயே
இந்தஉபகாரத்தை இதயத்தெழுதித்தேக்கி
எவர்க்குபெரியவனு னெனுமஅகங்காரம்நீக்கி
நந்தாவிளக்கம்போலே நவைபிருளைப்போக்கி
நான்செய்தநீதிநூற்சென் னடையைத்திட்டாந்தமாக்கித்
தொந்தமெனவேவிளை யாடிஉண்டுதூங்கிச்
சுடஉடல்வளர்க்குஞ் சோம்பினைநீங்கி
விந்தைநன்முயற்சியில் மேன்மேல்ஓங்கி
வேதநாயகன்நல்லோன் எனஇசைதாங்கி நானே

---

## துர் வழக்காளிகளைப் பற்றி

163. இராகம்-சௌராஷ்டிரம், அடதாளம்-சாப்பு.

பல்லவி

இந்தவழக்குக்கெல்லாம்நாமதானோ கோர்ட்டில்
வந்தவனெல்லாம் நமக்கெஜமானோ இந்த

அநுபல்லவி

நந்தன்வலியச்சண்டை பிடித்தானும் அந்த
நாகனைத்தட்டி அவன் அடித்தானும் இந்த

சரணங்கள்

1 தந்தைதுர்மார்க்கஞ்செய்து கேட்டானும்பிள்ளை
தாரங்களைத்தெருவில் விட்டானும்
முதல்அதிகக்கடன் பட்டானும்
முழுதுந்துர்விநியோகம் இட்டானும் இந்த

2 அண்ணன்தன்தம்பிமார்களை வெறுத்தானும் அவர்க்
காஸ்திபாகங்கொடாமல் மறுத்தானும்
கண்ணன்வயலைப்பொன்னன் மறுத்தானும் கடைக்
காரன்கெட்டசரக்கை நிறுத்தானும் இந்த

3 ககனப்பூவந்திமகன் கொய்தானும் அதைத்
கண்டுகுருடன் அப்பால்எய்தானும்
ஜெகமிசைஊமையனும் வைதானும் அதைச்
செவிடன்கேட்டு நகைசெய்தானும் இந்த

4 துங்கன்வாதியைக்கண்டு சிரித்தானும் சிங்கன்
தும்மிஇருநெட்டி முரித்தானும்
தங்கன்இரண்டுகையும் விரித்தானும் அந்தச்
சாந்தனுந்தன் முகத்தைச் சிரித்தானும் இந்த

5 கரமிலான்வாதியைப் பிடித்தானும்இரு
காலிலான் உதைத்துதைத் திடித்தானும்
சிரமில்லாதவன்கடித் தடித்தானும் பதம்
செப்பும் வேதநாயகன் படித்தானும் இந்த

---

## உத்தியோக சங்கடம்

164. இராகம்-நாதநாமக்கிரியை, ஆதிதாளம்.

பல்லவி

அப்பா இதென்ன அதிகாரம்ஐயோ
எப்போதும்பக்திசெய்ய இல்லையேநேரம் அப்பா

அநுபல்லவி

சுப்பையரே அபத்தமூட்டை அந்தச்
சுந்தரையர்வழக்கிலே தொளாயிரம ஓட்டை
அப்பையர்கற்பிப்பார் பொய்சீட்டை அந்த
அனந்தையர்கட்டுவார் ஆகாசக்கோட்டை அப்பா

சரணங்கள்

1 சிலர்கேட்பார் கற்பகச்சோலை வேறு
சிலர்கேட்பார்நமன் அணுகாமலே ஓலை
பலர்கேட்பார்நூறு புலிப்பாலை அல்லும்
பகலும்உலகில்நமக் கிதுதானு வேலை அப்பா

2 அண்டப்புரட்டன் அந்தவாதிஅகி
லாண்டப்புரட்டன் அப்பா அவன்பிரதிவாதி
சண்டப்பிரசண்டன் நியாயவாதிநாளும்
சகஸ்திரப்புளுகன் சாக்ஷிக்காரனெனும்கியாதி — அப்பா

3 எப்போதும்பொய்வழக்கர் கூட்டம்அவர்க்
கிந்திரலோகங்கிடைத்தாலும் இன்னமுந்தான்வாட்டம்
தப்புசாக்ஷிகள்வாய்நீட்டம் பொய்ச்
சத்தியமாணையென்றால் அவர்க்குக்கொண்டாட்டம் — அப்பா

4 பேராசைக்காரன் குப்பன்செட்டிஅவன்
பிரமாதிகளிடத்தும் வாங்குவான்வட்டி
சோரன்வழக்கில் சிங்கக்குட்டிஇவர்
சூதால்வேதநாயகன் பதந்தொழஅட்டி — அப்பா

---

## இதுவும் அது

### 165. இராகம்-புன்னாகவராளி, திரிபுடைதாளம்.

பல்லவி

போதும்போதும் உத்தியோககனமே இதில்
ஏதுசுகநமக்கு மனமே — போ

அநுபல்லவி

ஓதக்கடலின் அலைக்கோய்வுண்டோ ஆரவாரம்
வேதநாயகன்நாமம் விளம்பவுண்டோநேரம் — போ

சரணங்கள்

1 சிலர்நிலவழக்குகள் கொடுப்பார்வேறு
சிலர்பணவழக்குச் செய்தடுப்பார்
பலருநம்முடன் சண்டைதொடுப்பார் அல்லும்
பகலும்நம்பிராணனை எடுப்பார்
உலகில்வழக்கிழந்தோர் ஊரெங்குந்தூற்றுவார்
நலமில்அப்பீல்கோர்ட்டார் நம்தீர்ப்பைமாற்றுவார் — போ

2 ஒருவன்கேட்பான் அளகாபுரியை வே
றொருவன்கேட்பான் மேருகிரியை
ஒருவன்கேட்பான் அருணன்பரியை வே
றொருவன்கேட்பான் வெள்ளைக்கரியை
நரர்பக்ஷந்தீர்த்தால் விண்ணுட்டார்க்குமனஸ்தாபம்
சுரர்பக்ஷந்தீர்ப்புசெய்தால் துஷ்டநரர்க்குக்கோபம் போ

3 எந்தநேரமும் ஓயாவேலை அதில்
என்னபெற்ருே மூத்துமாலை
அந்தஉத்தியோகமே ஆலை அதில்
அகப்பட்டநாம் கரும்புபோலே
சந்ததமும்உழைத்துத் தணிந்ததுண்டோக்ஷாமம்
இந்தக்கூழுக்குதாஞ இருபதுபட்டா கிராமம் போ

4 எழுதியெழுதிஎன்ன கிரீடம்பெற்ருேம் நல்ல
இங்கிதம்தெரியா நிர்மூடம்
பழுதுசொல்வதியார்க்குப் பாடம் பஞ்ச
பாவங்களுக் கிவர்பீடம்
அழுதாலுந்தொழுதாலும் அவர்துர்க்குணம்போமோ
கழுதைக்குவாழ்க்கைப்பட்டு கடிவுதைக்கஞ்சலாமோ போ

---

## பெரிய துரையாகிய கடவுளுக்கும், மனுஷ துரைகளுக்கும் உள்ள பேதம்

166. இராகம்-சௌராஷ்டிரம், ஆதிதாளம்.

பல்லவி

அந்தப்பெரியதுரைக் கிந்தத்துரைகள் சரியா
மூடமனமே
விந்தைபொன்னுக்குநிகர் நிந்தைக்குரியகரியா அந்த

அநுபல்லவி

இந்தப்புவியில்நமைச் சொந்தப்பொருளாச்செய்து
தந்தைக்குநிகராகச் சிந்தைக்குள்உறையும் அந்த

சரணங்கள்

1 அந்தத்துரைநாம்செய்யும் எந்தப்பிழைகளையும்பொறுப்பான்
இரக்கமின்றி
இந்தத்துரைநாம்செய்யும் எந்தப்பிழைக்குந்தலை அறுப்பான்
வேலைகொள்ளாமல்
அந்தத்துரை தான்நமக் கெந்தப்பொருளுந் தந்திருப்பான்
வேலைவாங்கியும்
இந்தத்துரைநமது சொந்தப்பொருளையுமே யறுப்பான்
விளையாட்டாக

அந்தத்துரைவுலகம் அமைத்தளித்தழிப்பான்
இந்தத்துரைகந்தலை இரண்டாக்கிழிப்பான்
அந்தத்துரைதனிநம் யாப்பகைஒழிப்பான்
இந்தத்துரைபடைகள் இருந்துமேவிழிப்பான் அந்த

2 அந்தத்துரைவாகனமின்றி அண்டங்களெல்லாம்கடப்பான்
முடவன்போலே
இந்தத்துரைவாகனம் இல்லாவிட்டால் விழுந்துகிடப்பான்
எக்காலமுமே
அந்தத்துரை தானென்றும் அருந்தாமல்நமக் கன்னம்படைப்
பான்சோறு கறியும்
இந்தத்துரை தான்நமக்கீயாமல் தன்வயிற்றில் அடைப்பான்
பலவகையில்

அந்தத்துரை தான்நமக் கனுதினம்உழைப்பான்
இந்தத்துரை தான்நம்மை ஏவல்கொண்டுதான்பிழைப்பான்
அந்தத்துரையென்றைக்கு மழிவின்றித்தழைப்பான்
இந்தத்துரையினி இயமனை வந்தழைப்பான் அந்த

3 அந்தத்துரைச்சகல அந்தரங்களையுந்தெரிவான்
குருடன்போலே
இந்தத்துரைவுலகில் ஏதுந்தெரியாமலேதிரிவான்
துஷ்டரையெல்லாம்
அந்தத்துரை அடக்கி முந்தச்சிஷ்டருள்சொரிவான்
பொய்யரையெல்லாம்
இந்தத்துரையுயர்த்தி வந்தநல்லவர்க்கிடர்புரிவான்
சத்தியமாக

அந்தத்துரைதான்சுத்த அமலசொரூபி
இந்ததுரைவுலகில இணையில்லாபாபி
அந்தத்துரை வேத நாயகன்மனவியாபி
இந்தத்துரைஎவர்க்கும் ஈயாதலோபி அந்த

## கோட்சொல்லும் உத்தியோகஸ்தர்களைப்பற்றி

167. இராகம்-அசாவேரி, திரிபுடைதாளம்.

பல்லவி

எந்தநாளிலுந் தர்மமேஜெயம்
ஏன் மயங்குகின்றாய் பெண்ணே எந்த

அநுபல்லவி

நிந்தனைப்பலர் கூறட்டும் அவர்
நினைவெல்லாம் நிறைவேரட்டும் பின்பு
சிந்தனைதடு மாறட்டும் அவர்
சிரிப்பார்சிரித்து நாறட்டும் பெண்ணே எந்த

சரணங்கள

1 எரிகிறவீட்டில் பிடுங்குவதுலாபம்
என்றுசொல்வார் அந்தவண்ணமே
பெரியகோட்சொல்லிநம் உத்தியோகத்தைப்
பிடுங்குவதிவர் எண்ணமே
சரியிவர்எண்ண முடிக்கட்டும் லஞ்சம்
சர்வகொள்ளைகள் அடிக்கட்டும் உண்மை
துரைமகன்கண்டு பிடிக்கட்டும் அந்தத்
துஷ்டரைட ஜன் அடிக்கட்டும் பெண்ணே எந்த

2 வரும்இடரெல்லாம் வரட்டும் நம்மனதில்
வருத்தங்கொண் டென்னசாரமே
சர்வமூடர்கள்வாழும் நாட்டினில்
சாதுகட் கபசாரமே
துரைமகன்நம்மைக் கெடுக்கட்டும் அந்தத்
துஷ்டர்க்குத்தியோகம் கொடுக்கட்டும் அவர்
தரையில்கெட்டபே ரெடுக்கட்டும் பின்பு
தம்பிமார்களை முடுக்கட்டும் பெண்ணே எந்த

3 வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
வாழ்வது நமக்கருமையா
நல்லவர்க்கிது காலமா இங்கு
நாமிருப்பது பெருமையா
கல்லில்நார்இவர் உரிக்கட்டும்
கால்விலங்கு தரிக்கட்டும் கண்ட
எல்லவருமே சிரிக்கட்டும் மிக
என்சொல்அப்போது சரிக்கட்டும் பெண்ணே எந்த

4 கோளும்பொய்களும் கூறட்டும் நாய்
குலைத்துநத்தம் பாழாகுமா
மூளும்சூரியன் ஒளியைக் கையினால்
மூடமறைந்து போகுமா
நீளுந்தீயர்கள் குதிக்கட்டும் அவர்
நெஞ்சில்வஞ்சகம் பதிக்கட்டும் நம்மை
நாளுமே அவமதிக்கட்டும் வேத
நாயகன்சிக்ஷை விதிக்கட்டும் பெண்ணே எந்த

---

## சுவாமியை நினைக்க நேரமில்லையென்று முறையிடல்

### 168. இராகம்-நாதநாமக்கிரியை, ஆதிதாளம்.

பல்லவி

நினைப்பதெப்போது நெஞ்சே ஐயன்பதத்தை
நினைப்பதெப்போது நெஞ்சே நினை

அநுபல்லவி

தனத்தையும் மாதர்யௌ
வனத்தையும் உத்தியோக
கனத்தையும் எண்ணிப்பல
தினத்தையும் கழித்தால் நினை

சரணங்கள்

1 பாட்டிலும்பல விளையாட்டிலும் துர்விஷயக்
காட்டிலும்புத்திதனை நாட்டிநாள் கழித்தால் நினை

2 தாரத்தைப்பிள்ளைகள் சம்சாரத்தை எண்ணித்துர்வியா
பாரத்திலேநமது நேரத்தைக் கழித்தால் நினை

3 தரைக்குள்ஒருசாண்குக்ஷி இரைக்காகவெள்ளைக்காரத்
துரைக்குக்கைகட்டிசாகும் வரைக்கும்நாம் உழைத்தால் நினை

4 பாருக்குள்வரும்கக்ஷிக் காரர்க்கும்பின்னும் இந்த
ஊருக்கும்உழைத்து வீரத்தைக்குலைத்தால் நினை

5 தொண்டைகிழித்துக்கொண்டு சண்டைசெய்யும்வக்கீல்கள்
அண்டையில்இருந்துநம் மண்டையைஉடைத்தால் நினை

6 ஞாலத்தில்பெண்கள்செய்யும் ஜாலத்தையுமம்மஅவர்
மூலத்திலேநமது காலத்தைக்கழித்தால் நினை

7 உலகில்தெற்குவடக்கு கிழக்குமேற்கென்றுசொல்லும்
வழக்கர்பெருஞ்சமுத்திர முழக்கத்திலிருந்தால் நினை

8 வேதநாயகன்திருப் பாதங்களைமறந்து
பூதஉடல்வளர்க்கக் காதங்கள்அலைந்தால் நினை

---

## உத்தியோகத்தை வெறுத்தல்

### 169. இராகம்-மோகனம், ஆதிதாளம்.

பல்லவி

இந்த உத்தியோக மென்னபெரிதா நெஞ்சே
இதுபோனால் நாம் பிழைப்பதரிதா இந்த

அநுபல்லவி

எந்தவிடம்போனாலும் கந்தபொடிவாசிக்கும்
அந்தவிதமாய்நமை அகிலமெல்லாம் பூசிக்கும் இந்த

சரணங்கள்

1 நல்லபிரபுக்களெல்லாம் நாட்டைவிட்டே அகன்றார்
ஞானசூனியரெல்லாம் நமக்கதிபதியென்றார்
இல்லாததோஷநம்மேல் எடுத்தவர்முடிக்கின்றார்
இரவியினுங்களங்கம் இருக்குமெனபுகுந்தார் இந்த

2 ஆகாதகாலம்இதில் அசடர்தலையெடுத்தார்
அருங்குணசீலர்கள் அதிகாரங்கைவிடுத்தார்
போகாமற்கொள்ளும் பொய்யரும்வந்தடுத்தார்
பூவிற்றகடையிலே புல்விற்கதொடுத்திட்டார் இந்த

3 இந்த உலகுக்கெல்லாம் இவரே அதிபதியா
இவருக்குழைக்கநமக் கென்ன தலைவிதியா
அந்தமாகவேபடி அளப்பதிவர் பொதியா
ஆயிரந்தொழிலில்நான் அறியாதசங்கதியா இந்த

4 பாரில்இவரைக்கண்டோ படித்திட்டோம் பலபாடை
பட்டதற்கென்னதந்தார் பாக்கியங்கூடைகூடை
ஊரில்உத்தியோகம்போனால் ஒழியும்பிடித்தபீடை
உயர்வேதநாயகன் உதவுவான் அன்னம்ஆடை இந்த

---

## துன்பத்திற்கு அஞ்சாமை

170. இராகம்-முகாரி, ஆதிதாளம்.

பல்லவி

என்னவந்தாலும் மனமே ஐயன்
இருக்கையில் என்னவிசனமே என்ன

அநுபல்லவி

மன்னர்பகைக்கில்உயிர் தன்னைவதைப்பார் வே
றென்னசெய்வார்நிதம் பண்ணுறும்இடர்கள் என்ன

சரணங்கள்

1 உத்தமானசஞ்சீவி கையில்
உடையவரைக்கோலுமே நாவி
அத்தனைநம்புமேதாவி தன்னை
அலைக்குமே துயரமுமேவி
கர்த்தனைமறந்தவர் சுத்தமேகவலைகள்
வைத்தமாத்திரமாகும் நித்தமும் துன்பம் என்ன

2 ஈடொருகாவுடன் ஓடை அரு
கிருக்கையில் என்செயுங்கோடை
மாடகூடகோபுர மேடை தனில்
வசிப்பவர்க்குண்டோ குளிர்வாடை
தேடரிய புண்ணியபொற்பீடம் அமர்ந்தன்பெனும்
கிரீடந்தரித்தோர்க்கின்பம் நாடகம்செய்யும் நோய் என்ன

3 ஓதரும்தேவதாபத்தி நாளும்
உலகில்யாவையும் வெல்லும்சுத்தி
போதமுடன் அதவேமுத்தி அதில்
புருஷார்த்தங்களெல்லாம் சித்தி
வேதநாயகன்பத்தர் மீதடருந்துன்பங்கள்
ஆதவன்முன்பனியாம் ஆதலில்துயரம் என்ன

## பிறர்மேற் குறை கூறுமை

### 171. இராகம்-பைரவி, ஆதிதாளம்.

பல்லவி

ஒருவர்மேலுங்குறைநீ கூறுதே திரு
உளச்செயற்காப்பிறரைச் சீராதே ஒருவர்

அநுபல்லவி

வருதுந்தொழிய மாறுதே சரு
மஞ்சுக்கிணைகிருபேசன் கஞ்சக்கழல்மறந்து
வஞ்சக்கடலில்விழும் நெஞ்சக்குரங்கேநீ ஒருவர்

சரணங்கள்

1 துன்பம்என்பதெவர்க்கும் சுதந்தரமே அதைத்
தொலைப்பதற்குண்டோ ஒருதந்திரமே
இன்பம்உற்றவரெவர் நிரந்தரமே பலர்
இடிக்கவந்தாலுங்கட்டி அடிக்கவந்தாலும் பழி
முடிக்கவந்தாலும்உயிர் மடிக்கவந்தாலும்நீ ஒருவர்

2 பொறுமைஎக்காரியமும் சாதிக்குமேஅதைப்
பூண்டவர்க்கேசுகம் ஆதிக்கமே
மறுமையின்துயரத்தைப் பேதிக்குமேமிக
மகிழ்ந்தபோதிலும் துயர் நிகழ்ந்தபோதிலும்பிறர்
புகழ்ந்தபோதிலும்உனை இகழ்ந்தபோதிலும்நீ ஒருவர்

3 மற்றவர்தாம்செய்யினும் பெருந்தீங்குஅதை
மனதிற்கொள்ளாதிருப்பதே பாங்கு
குற்றமாகியவழிதனை நீங்கு மிகக்
கோத்தபலபுவனம் காத்தபரன் அடியை
ஏத்தும்வேதநாயகன் வார்த்தையின்படிநீ ஒருவர்

## பரிதான கண்டனம்

172. இராகம்-சௌராஷ்டிரம், ஆதிதாளம்.

பல்லவி

சீச்சீநீர்லஞ்சம்வாங்கநல்ல ஞாயமாமோஅதனால்உமைச்
சேர்ந்ததரித்திரம் விடிந்துபோமோ சீச்

அநுபல்லவி

வீச்சிலும்வீண்பகட்டம் பேச்சிலும்பணம்வாங்கும்
தேர்ச்சியுடைவினைப் பூச்சிஒப்பவரே சீச்

சரணங்கள்

1 வரவேண்டியகடனை வகையுடன்கேட்டு வாங்கக்கூசிப்
பலரிருக்க
வலியநீகேட்டுவாங்க மனம் எப்படிவந்ததோ சீச்சீ
உலகில் நீங்கள்
பரவியபெருந்தவம் பதிணுபிரம்வருஷம் ஊசி
முனையில் நின்று
பண்ணினும்போமோஅந்தப் பாவம்ஒருமுந்திரிவாசி
இலஞ்சந்தனைக்
கரம்வாங்கினோர்கள் தந்தோர்க்குப்பாததூசி
கள்ளர்க்கும்வேண்டும் நடுஇரவமாவாசி
இரவும்பகலும் உமக்கேஏகராசி
எவரையுமாக்கிடும் நீர்புருஷதாசி சீச்

2 தனதுகேடறியாமல் சகலர்க்கும்சாஸ்திரஞ் சொல்லும்பல்லி
கழுநீர்வீழ்ந்து
சாகுதல்போலயாவுந் தெரிந்தமகிமைக் கொத்துமல்லி
ஆகியநீங்கள்
மனமயங்கும்எளியரிடம் வாங்கலாமோதனம் இல்லிக்
குடநீர்போலே
வாழ்வுந்தனமுங்கெட்டுத் தாழுமென்பதுள்ளங்கை நெல்லி
ஆகையால் ஏழை
ஜனம்அழவாங்கிடுந் தனம்உயிர்க்கொல்லி
சாய்க்குமேஅதுவாழ்வின் வேரினைக்கெல்லி
தினமுமேஅடிக்கிறீர் நீர்ஜெகஜல்லி
திருட்டுத்தொழிலில் நீங்கள்ருத்திராக்ஷப்பில்லி சீச்

3 இழிவுக்காலமான உமையட்டமச்சனி பற்றுதோ
பொல்லா துஷ்டர்கீர்
என்றுசனிபிடிக்க அஞ்சினும்பாதகஞ்சுற்றுதோ
புண்ணியங் கைவிட்டு
வழிகெட்டஉங்களுக்கு வளநிதியாவுமேவற்றுதோ
ஒருசாண் கும்பி
வளர்த்திடஉங்களுக்கு வருமாதசம்பளம்பற்றுதோ
குண்டோதரன்போல
ஒழிவில்உம்முதரந் தூராப்பெருங்குழியா
உம்மாற்சகலஉத்தி யோகர்க்கும்பழியா
விழியவியாதோஉமக் கென்னகெட்டசுழியா
வேதநாயகன்உரைப்பது வீண்மொழியா சீச்

---

## இதுவும் அது

173. இராகம்-சங்கராபரணம், சாப்புதாளம்.

பல்லவி

ஏதுக்குவாங்குறீர் லஞ்சம்உமக்
கிதைவிடவேறுண்டோ பஞ்சம் உமக்கு

அநுபல்லவி

வாதுக்குவீணே வழக்குறைபேசி
வாங்குறீர்என்ன பிழைப்பதுசீச்சீ ஏதுக்கு

சரணங்கள்

1 நீசப்பொருளினை ஆசைப்பட்டேநல்ல
நீதியைநீக்குறீர் ஐயோஅபக்
கியாதியைத்தூக்குறீர் உமக்கும்பொய்த்
தாசிக்குமேஎன்னபேதம் நீர்தான்
சாதிப்பதென்ன பிரமாதம்
காசுக்கேன்இந்தவிவாதம் அப்பு
காத்தான்முதலோர்க்குநீ முதற்பாதம் ஏதுக்கு

2 மணமுமலரும்போன்ற நேயர்களிடத்திலும்
வாங்குவீர்பரிதானம் உமைவிட்டு
நீங்குமோஅவமானம் அலக்ஷியம்
பணமென்றால்காணும் பாஷாணம் பிறர்

பணமென்றால்விடுகிறீர் பிராணன் அதில்
குணமுண்டோ கடுகுப்பிரமாணம்
கூசுகிறீர்கிலேகுடை யாதோகாரணம் ஏதுக்கு

3 பாழில்இறைத்தஜலம்போல் உமக்குப்
பாசளித்தாவதுண்டோ துரைத்தீர்ப்புப்
பண்ணுவதும்மைக்கொண்டோ வெட்கமின்றி
ஏழைகளிடத்தில் கைக்கூலி வாங்க
இச்சைகொண்டீர் என்னக்கேலி வந்து
சூழுமேபலபல ஜோலி நிஜம்
துரையறிந்தால்உங்கள் உத்தியோகம்காலி ஏதுக்கு

4 உழக்கிற்கிழக்குமேற் குண்டாக்கிஒருகாலே
ஊரைப்புரட்டுகிறீர் விவாதிக்கும்
பேரைமருட்டுகிறீர் நிச்சயமுண்டோ
வழக்குச்சேற்றினில் நட்டகம்பம் பிச்சை
வாங்கியும்உமக்கென்னடம்பம் ஞாயம்
இழக்கின்றபேர் படுந்துன்பம் உமக்
கிசைந்திடுஞ்செல்வத்தை அறுத்திடும்வம்பம் ஏதுக்கு

5 சிலையில்நார்யெடுப்பதுபோல எவரையும்
திட்டமாளத்துகிறீர் கையில்அகப்
பட்டதைச்சுற்றுகிறீர் பெரிதான
மலையோஉமதுகாயஸ்தூலம் நீர்தாம்
வாழ்வதுண்டோ கோடிகாலம் ஊரில்
கொலைஞர்களவர்கள் விலாசம் ஆனால்
கொடுக்கவேண்டுமுந்தி உமக்குத்தாம்பூலம் ஏதுக்கு

6 ஆடுங்கறந்தனவாடும் பஞ்சைகளிடம்
அடிக்கிறீர்நீர்சர்வகொள்ளை உமைவந்து
பிடிக்குமேபெரியசள்ளை வாங்கினபின்பு
போடுகிறீர்பட்டைநாமம் ஒரு
போதும்விடியுமோ க்ஷாமம் உமை
நாடிமிஞ்சாதொருநேரமும் வேத
நாயகன்சொற்கேட்டால் உமக்குண்டுக்ஷேமம் ஏதுக்கு

## இதுவும் அது

174. இராகம்-பியாகடை, ஆதிதாளம்.

பல்லவி

ஆர்வேணுமோ அவர்வாங்கட்டும் நீ லஞ்ச
ஆசைவையாதே நெஞ்சே ஆர்

அநுபல்லவி

சீர்வளரும்குளத்தூ ரெனும்பதிஉள்ளார்
செல்வன்வேதநாயகன்சொல்லும் உரையைக்கொள்ளார் ஆர்

சரணங்கள்

1 சம்பளமிருக்கப்பின் மேல்வருமானம்
தனைநாடியேன்அதன் மேல்நித்தியதானம்
அம்புவிமிசை விளைந்திடும்அவமானம்
அதைவிடவெடுக்க லாமேஉபதானம்
அஞ்சிடும்பல பஞ்சையோர்களைநிதம் துன்பஞ்செய்து
மிஞ்சவேஅவர் லஞ்சமேதர
வஞ்சமேபுரி பஞ்சபாதகர் ஆர்

2 கட்சிக்காரருக்குன்னால் ஏதுபகாரம்
கனதுரை தீர்ப்பான் தன்மனதுப்பிரகாரம்
ரட்சிப்பேனெனப்பொய் சொல்வதில்யென்னசாரம்
லஞ்சமென்பதுபட்டப் பகலிற்செய்சோரம்
ரத்னராசியும்அர்த்த நாணயமுந்தந்தால்உன்காரியம்
சித்தியென்று பயத்திராரையும்
எத்திவாங்கிடும் உத்தியோகர்கள் ஆர்

3 அயலார்பொருளின்மேல் நமக்கென்னசொந்தம்
அருதியைமடிபிடித் தேன்பலவந்தம்
இயல்வாங்கிக்கெட்ட குடிகள்அனந்தம்
இகபரம்போம்வரும் நரகநிர்ப்பந்தம்
இக்கணத்தில்உன்பக்கமாகிடவே செய்வேன்தந்தாலென்று
அக்கிரமத்தில் அலைக்கழித்து
வழக்கரைத்தொடர் துர்க்குணத்தர்கள் ஆர்

4 ஒருகாசாகிலும் வாங்குதல்துரோகம்
ஊர்கொள்ளையடிக்கவே உனக்குத்தியோகம்
தருபவர்க்கென்ன உன்னாலேநிர்வாகம்
தனதுக்கேன்செய்கிறாய்நீ பிராணத்தியாகம்
சட்டம்நீதிபுரட்டி வாதியையேதினம் கெட்டிதங்கக்
கட்டிவெட்டி உருட்டியோட்டிய
பெட்டிகொட்டி மருட்டுமெட்டிகள் ஆர்

---

## பிரபுத்துவ தூஷணை

### 175. இராகம்-தன்யாசி, ஆதிதாளம்.

பல்லவி

ஓஓ பிரபுத்துவமே தினமும்
உன்னால்மன உபத்திரவமே ஓஓ

அநுபல்லவி

காவலர்பூமியில் என்னிடத்தொழிலைக்
காட்டாதேயென்னை வாட்டாதே ஓஓ

சரணங்கள்

1 அன்னத்தைக்கண்டால் விஷம்போலவேம்புபோல்
அருவருத்துண்ணத் துணியாய்
ஆயிரம்பக்குவஞ்செய் தொருவாய்சாதம்உண்
டாலும்நீ ஜீரணியாய்
என்னத்துக்கிந்த அன்னமென்றெண்ணிநீ ஏழைகளுக்
கீந்தவர்பசி தணியாய்
இறுமாப்போ திமிர்வாதமோ
ஈசன்வந்தாலும் எழுந்துபணியாய் ஓஓ

2 பார்க்கச்சகியா அங்க ஈனர்அழகரென்று
பலருந்துதிக்க விதிப்பாய்
பலசாலிநானென்று துள்ளிகொண்டுசெத்த
பாம்பையுமே மிதிப்பாய்
ஊருக்குள்ளஎவருஞ்சொல்லும் நிந்தையைஅறியாமல்
உன்னையேநீ துதிப்பாய்
உண்மைசொல்வோரைத் தள்ளிப்பொய்சொல்லுவோரை
உற்றவரென்று மதிப்பாய் ஓஓ

3 காரியமில்லா வீண்டம்ப விஷயத்தில்
காசெல்லாம் செலவழிப்பாய்
காலத்தையும் நின துகாயத்தையும் விஷ
காமத்திலே கழிப்பாய்
பாரில்சுகம் எளியராலென்று நினையாமல்
பாவி அவரைப் பழிப்பாய்
பத்துப்பேர்நித்தம் உனைதாங்க இல்லாவிட்டால்
பார்க்கபார்க்க விழிப்பாய் ஓஓ

4 பாலையும்விஷஞ்செய்யும் பாம்புபோற் சுகமெல்லாம்
பாழாய்க் கெடுப்பாய்
பலநோய்களுக் கிருப்பிடமாம் வைத்தியர்
பலருக்குவேலை கொடுப்பாய்
காலையுமாலையுங் காரணமின்றிக்கடு
கடுத்துநீ சிடுசிடுப்பாய்
கைப்பொருள்போனால் ஒருவேலையுந் தெரியாமல்
கையிலே ஓடெடுப்பாய் ஓஓ

5 சீமையிற்கவிசொல்லக் கம்பனும்நிகரல்லச்
சேஷன்நானென்று விரிப்பாய்
சேஷனீயென்பதற்குச் சாட்சியாக விஷத்தைத்
தேகமுழுதுந் தரிப்பாய்
ஊமைக்குகுளறுவாயன் சண்டப்பிரசண்டனென
ஓராமல் விவகரிப்பாய்
உயர்கவிஞரைக்கண்டால் ஒன்றும் பேசாமல்நீ
ஓட்டத்தை அனுசரிப்பாய் ஓஓ

6 பெருநொண்டி போல்உனைத் தூக்கச்சொல்லிப்பல
பிராணிகள் கழுத்தொடிப்பாய்
பெருந்தொழில்செய்து களைத்தவன்போல் உடம்பெல்லாம்
பிடிக்கச்சொல்லி யடிப்பாய்
அரும்பல சாலிநான் தூக்கிவிட்டால் பிணக்கா
டாக்குவேனென்று நொடிப்பாய்
ஐயன் வேதநாயகன்
அடிகளையே பிடிப்பாய் ஓஓ

# குடும்ப சம்பந்தக் கீர்த்தனை

## தாய் தந்தையரை நமஸ்கரித்தல்

### 176. இராகம்-பியாகு, ஆதிதாளம்.

கண்ணிகள்

1 உற்றவரேஎனைப் பெற்றவரே தினம்
உமக்கே நமஸ்காரம்
முற்றுமேநீர்செய்த உதவிக்கு நான் என்ன
மொழிவேன் உபசாரம்

2 பத்துமாதம்என்னை வயிற்றிலேசுமந்து
பலதுயர் சகித்தீரே
எத்தனைபிராண சங்கடமுடனே எனை
ஈன்றுநிர் வகித்தீரே

3 பெற்றீர்வளர்த்தீர் பேரும்இட்டீர் ஜீவப்
பிரதிஷ்டை செய்தீரே
உற்றஉம்முதிரத்தை முலைபாலாகவே
ஊட்டியே உய்வித்தீரே

4 தேனினும் அமிர்தினும் இனிதேஎனக்குநீர்
செப்பிய தாலாட்டு
வானினும் அமரர்க்கு வருமோ இதுபோல்
மங்களத் திருப்பாட்டு

5 மாந்தவியாதிகள் எனையணுகாமலே
மருந்துகள் கொடுத்தீரே
வாந்தியும்மலஜல மசுத்தமும் சகித்தெனை
மார்புற எடுத்தீரே

6 உடல்உயிர்சகலமும் நீர்தந்ததேயன்றி
உண்டோ இனிவேறு
அடரும்உலகெலாம் அளித்தாலு மிப்போது
ஆமோகைம்மாறு

7 சிவன்போல் நீர்என்னை வளர்த்திட்ட அருமையைச்
செப்பஎன்னால் ஆமோ
நாவேஆயிரம் இருக்கினும் நீர்செய்த
நன்மையைச் சொல்லப்போமோ

8 கவலையெல்லாம்என் கவலையல்லால்வேறு
கவலையென்றறியீரே
புவியிலேஎன்சுகம் அல்லதுவேறொரு
பொருளையுங்குறியீரே

9 பாலவியாதிகள் எனையணுகாமலே
பத்தியம்பிடித்தீரே
காலமெல்லாம்பல விரதங்கள் அனுஷ்டித்துக்
கருமங்கள் முடித்தீரே

10 இரவுமுழுதுமே தூங்காதிருந்துநீர்
எந்தனைக்காத்தீரே
அரவுமுதற்பல ஜெந்துக்களால்வரும்
ஆபத்தைத்தீர்த்தீரே

11 தரணியில்என்சுகம் வேண்டியேநீர்பல
தருமங்கள்செய்தீரே
கருணைசெய்யும்படி கடவுளைதுதித்துநற்
காணிக்கையெய்தீரே

12 சற்றுநீர்என்னைமுன் மறந்திருந்தால்நான்
சடலம்பொறுப்பேனோ
உற்றஉலகிலே இந்நாள்மட்டும்நான்
உயிர்வாழ்ந்திருப்பேனோ

13 காணாத்தெய்வத்தின் அருளாலேவந்த
கண்கண்டதெய்வம்நீரே
ஆணாய்பெண்ணாயிரா அந்தத்தேவையும்
அன்னைதந்தையென்பாரே

14 எனக்கொருசுகம்வரில் உமக்குவந்ததுபோல்
எக்களிப்படைந்தீரே
எனக்கொருதுயர்வரில் உமக்குவந்ததுபோல்
ஏங்கிஉள்ளுடைந்தீரே

15 பாலும்சோறும் பக்ஷணங்களுமெனக்கிட்டுப்
பழஞ்சோறுண்டீரே
கால்மெல்லாம்நல்ல சோமனுன்உடுக்கநீர்
கந்தையைக்கொண்டீரே

16 சப்பிரமஞ்சத்தில் நான்படுத்துறங்கநீர்
தரையில்படுத்தீரே
கைப்பொருளெல்லாம் உன்னிமித்தம்பரி
காரிக்குக்கொடுத்தீரே

17 வாக்கால்உளறும்என் மழலைச்சொல்கேட்டுநீர்
மகிழ்ந்தேதுதித்தீரே
காக்கைக்குஞ்சுதன்குஞ்சு பொன்குஞ்சென்பதுபோல்
கரிசனம்பதித்தீரே

18 குற்றம்எத்தனையோ செய்தேன்
குணமாய் கொண்டீரே
சற்றும்நான்நோய்கொள்ளில் அன்னம்நித்திரையின்றித்
தளர்ந்துமெய் துவண்டீரே

19 தோளினும்மார்பினும் இடையினுமேயெனைத்
தூக்கிக்கொண்டலைந்தீரே
நீர்பஞ்சகாலத்தில் உள்ளசோறெனக்கிட்டு
நீர்பசித்துலைந்தீரே

20 சுயநலம்வேண்டி இங்கொருவர்க்கொருவர்
துணைசெய்வர்மெய்தானே
பயனொன்றும்வேண்டா தெனைநீர்வளர்த்திட்ட
பக்ஷம்என்சொல்வேனே

21 உறவினரெல்லாம் உம்மாலேவந்த
உறவினர்தாமலவோ
அறநெறிகாட்டும் குருவேநீரெனில்
அயலில்என்சொலவோ

22 பலபொருள்எனக்குச் சம்பாதித்துவைக்கவே
பலவிதம் உழைத்தீரே
நிலமிசைஉம்முயிர்க் குயிர்நானேஎன்று
நினைத்துநீர் பிழைத்தீரே

23 தாரம்போல்மறு தாரம்வருவர்பெற்ற
தநயரும் அப்படியே
நீர்போனால்வேறு தாய்தந்தையர்வந்து
நேருவதெப்படியே

24 தக்கபருவத்தில் எனை அடக்கிபாட
சாலையில் விட்டீரே
பக்கமெல்லாந்திரிந் தென்னாலேபல
பாடுகள்பட்டீரே

25 இளமைப்பருவத்தில் என்னால்வருந்துன்பம்
எல்லாம பொறுத்தீரே
தளர்ந்தபருவத்தில் உம்மால்வருந்துன்பம்
சகிப்பது பெருஞ்சீரே

26 துக்கங்களெல்லாம் நிர்வகித்துக்கொண்டு
சுகம்எனக் களித்தீரே
மக்களேசகல பாக்கியமென்றெண்ணி
மனம்மிகக் களித்தீரே

27 மண்பிள்ளையாயினும் தன்பிள்ளையென்றெனை
மகிழ்ந்தாதரித்தீரே
பண்புடன்என்பொருட் டாகநீர்பலரையும்
பணிந்துபசரித்தீரே

28 தெரியாமல்நான்செய்த பிழைபொறுத்தென்னிடம்
திருவருள் பதிப்பீரே
அரும்வேதநாயகன் அருள்செய்யும்படிஎன்னை
ஆசீர்வதிப்பீரே உற்றவரே

---

## தகப்பன் மகனுக்கு கூறல்

177. இராகம்-மோகனம், ஆதிதாளம்.

பல்லவி

மார்க்கம்இதுமகனே சந்திரன்
தோற்கும்எழில்முகனே சன் மார்க்கம்

அநுபல்லவி

மூர்க்கருடன் உறவாடாதேபழி
மூண்டிடும்சூது விளையாடாதே இந்தப்
பார்க்குள்ஒருபொய் சொல்லக்கூடாதே மது
பானம்விரும்பி மனம்வாடாதே சன் மார்க்கம்

சரணங்கள்

1 நித்தியம்பொன்னடியிணையே துயர்கடலையே
நீக்குதற்குதவும் புணையே
பக்திமான்கட்குண்டோ இணையே கடவுள்நேசம்
பரகதிக்குவழித் துணையே
சத்தியமார்க்கத்தை பிரியாதே பல
தப்புவழியை அனுசரியாதே சுய
புத்தியில்லாமல்எங்குந் திரியாதே இந்தப்
பூவில்எவர்க்கும் இடர்புரியாதே சன் மார்க்கம்

2 புண்ணியபாவங்கள் இரண்டேநிச்சயம் அந்தப்
புண்ணியவழியைநீ அண்டே
மண்ணினுமேமகிமைகொண்டே பிழைப்பதன்றி
மறுமையினும்பாக்கியம் உண்டே
கண்ணியமாக என்றும்பிரகாசி நல்ல
கனதந்தைதாய்பெரியர் அடிபூசி தினம்
அண்ணன்தம்பி சோதரிகளைநேசி நிதம்
அன்னம்எளியர்க்கிடு நயம்பேசி சன் மார்க்கம்

3 சத்தியம்அடக்கம் பொறையேமுதலாகிய
சற்குணங்களோடு நிறையே
சித்திபெறில்ஒருகுறையே அணுகாதெனச்
செப்பினேன்காண் நீதிமுறையே
சுத்தமாகவேதினம் நீராடு நல்ல
தூயவஸ்திரங்களைக் கையாடு கன
பக்திமான்களுடனே தினம்கூடு கெட்ட
புல்லரைக்காணில் அஞ்சியேஓடு சன் மார்க்கம்

4 கல்விநமக்கவசியமே கற்றவர்க்கிந்தக்
காசினியில்எல்லாம் வசியமே
செல்வமுடன்வரும்நயமே கற்றவர்க்கென்றும்
ஜீவனத்துக்கில்லை பயமே
பலவகைப்படிப்பையும் நீங்காதே உன்
பாடம்படிக்காமல் தூங்காதே நீ
நல்வழிநடக்கப்பின் வாங்காதே எந்த
நாளும்நீகடன்வாங்கி ஏங்காதே சன் மார்க்கம்

5 பாடமெல்லாம்நெஞ்சில் இருத்துஎழுதப்பேசப்
பாடவும் பழக்கம்பொருத்து
நீடுகையெழுத்தும் திருத்துகற்றபடிநீ
நீக்கவேண்டும் ஈதென்கருத்து
வடுங்கையுமா யிருவாடாதேநீ
என்றும்பிறர்பொருளை நாடாதேசர்வ
மூடரைக்கூடிவிளையாடாதே என்றும்
மூக்குத்தூள்புகையிலை போடாதே சன் மார்க்கம்

6 சீலத்தைக்கைவிடாதே துர்ப்போதனை
செய்பவர்க்கிடங் கொடாதே
ஜாலத்துக்குட்படாதே மாதுஷ்டனென்று
தாரணியிற்பேர் எடாதே
காலத்தைவிருதாவிற் கழிக்காதே உன்
கைப்பொருள்வீணிற் செலவழிக்காதே இந்த
ஞாலத்தொருவரையும் பழிக்காதே வேத
நாயகனைமறந்து விழிக்காதே சன் மார்க்கம்

---

## தகப்பன் மகளுக்கு புத்தி கூறல்

### 178. இராகம்-சஹானா, ரூபகதாளம்.

பல்லவி

புத்தியிதுமகளே உனக்குநற்புத்தி யிதுமகளே புத்தி

அநுபல்லவி

நித்தியம்பரன் நேசம்விடாதே
சத்தியமார்க்கத்தை தாண்டிகெடாதே புத்தி

சரணங்கள்

1 ஆலயம்குருக்களை அசட்டைபண்ணாதே
அடிக்கடிஜெபம்செய்யா திருக்கவொண்ணாதே
காலந்தனைவீணில் கழிக்கஎண்ணாதே
கண்ணேயிடைவிடாமல் உண்ணாதே புத்தி

2 மாதாபிதாக்களை மகிழ்ந்துநீதாங்கு
மண்ணில்நல்லபிள்ளையென்று பேர்வாங்கு
தீதுகள்உனக்குச்செய் தோர்க்குமேதீங்கு
செய்யாமலிருப்பது திருவுளப்பாங்கு புத்தி

3 ஞானபுஸ்தகங்களை நாளும்நீவாசி
நல்லவருடன்கூடி நாதனையேசி
ஈனர்தமக்கு ஞானமேஉபதேசி
என்றுங்குணவதியே மகராசி புத்தி

4 உயிர்போனாலும்நீ ஒருபொய்சொல்லாதே
உன்வீடுகடந் தயல்வீடுசெல்லாதே
பயிலும்மறுபுருஷர்கள் பார்க்கநில்லாதே
பாவத்தைகனவிலும் நினைத்தல்பொல்லாதே புத்தி

5 அம்புவிழியே அறங்கைவிடாதே
அற்பப்பொருள்விரும்பி ஐயோகெடாதே
வம்புக்காரிகளுடன் வார்த்தைகொடாதே
மற்றவர்பொருளைக்கண் டாசைப்படாதே புத்தி

6 வாழ்வுவந்தாலும்நீ மயங்கித்துள்ளாதே
மற்றவர்இழிவைஉன் வாயால்விள்ளாதே
தாழ்வுவந்தாலும்நீ சலித்துக்கொள்ளாதே
சகலமும்பரன்செயல் தடுத்துத்தள்ளாதே புத்தி

7 மாமிநாத்திகளை மதித்துறவாடு
மகளுந்தாயும்போலே மகிழ்ந்துநீகூடு
சாமியாகுங்கணவன் தயவைநீதேடு
தலையணைமந்த்ரம் ஓதுதல்கேடு புத்தி

8 தப்பாமல்எளியரைத் தாங்கிக்கைதூக்கு
தானதருமம்ஜெப தபத்தில்நாள்போக்கு
கைப்பாகத்திலே உன்கணவனார்மூக்கு
கம்மென்றுமணமேறக் காய்கறியாக்கு புத்தி

9 விடியுமுன்எழுந்துநீ வேலையைநாடு
வீட்டைக்கண்ணாடிபோல் விளக்கிக்கையாடு
உடலும்ஆடையும் அழுக்கொழியநீராடு
உடலும்பெருக்கத்தீனி உண்பதுகேடு புத்தி

10 சொந்தவேலைகள்செய்ய சோம்பிநையாதே
துன்பம்செய்தவர்க்குநீ துன்பஞ்செய்யாதே
வந்தயெளியவரை வாட்டிவையாதே
மாவேதநாயகன் வார்த்தைபொய்யாதே புத்தி

## உத்தம ஸ்திரீயின் லக்ஷணம்

179. இராகம்-சாரங்க, ரூபகதாளம்.

பல்லவி

எவளோஅவளோ குலநாரி
இகபரமிரண்டுக்கும் உபகாரி எவளோ

அநுபல்லவி

அவனிதனைவிதிக்கும் ஆண்டவனைத்துதிக்கும்
அனகபூஷணி அமிர்தபாஷணி
சனகதூஷணி கனகதுவேஷணி எவளோ

சரணங்கள்

1 நித்திரையினுங்கணவன் தியானம் என்றும்
நீங்காதபெரிய அபிமானம்
பத்தினிகளுக்கெல்லாம் குருஸ்தானம்அவள்
பரபுருஷருக்கு மாதாசமானம்
சத்தியம்பொறைஅருள் சாந்தம்அவட்குப்பொருள்
தர்மகஞ்சனி சமயரஞ்சனி
கர்மபஞ்சனி கனகநிரஞ்சனி எவளோ

2 உத்தமகுணங்களே ஆபரணம்ரத்ன
ஓலைமுதல்நகைகள் ஒருதிரணம்
பத்தாவைபிரிவதுவே மரணம்வரும்
பந்துஜனங்கட்கெல்லாம் ஆதாரணம்
சுத்தம்சித்தம்உடையாள் தூயஅன்னநடையாள்
துதிகொள்சுந்தரி சுபகிரந்தரி
மதியில்சுந்தரி வசனதந்தரி எவளோ

3 சந்திரபிம்பம்போலுந் திருமுகமே அவள்
தரிசனம்பரமானந்த சுகமே
எந்தவேளையுமிருது வாசகமே சீலம்
ஈவாள்அருந்ததிக்கும் யாசகமே
வந்துதனை அடுக்கும் வறியார்க்கெல்லாங் கொடுக்கும்
குலசிரோமணி குணவுதாரணி எவளோ

4 குணஅழகொன்று லக்ஷாந்தரமே கொல்லுங்
கொடும்விஷம்குணமில்லாள் சுந்தரமே
உணர்வில்லான்வீடு வனந்திரமே ஞானம்
உத்தமிக்கென்று சுதந்தரமே
அணுகும்பர்த்தக்கரூபம் அவட்குத்திவ்யசொரூபம்
அதிகநயவதி அமிர்தகிரணமதி
புதியசுபநிதி புருஷர்தவநிதி எவளோ

5 சகலமுந்தெரிந்த வித்தியாதீபம் என்றும்
தலைவன்ஊழியமே காலக்ஷேபம்
பகரவொண்ணுமகிமைப் பிரதாபம் அவள்
பாக்கியங்கணவன் பிரியசல்லாபம்
நிகரில்வேதநாயகன் நேசமேபெருஞ்சுகம்
நிதியநவமணி நிர்வகுணஅணி
அதிகவிதரணி அரியகிரகணி எவளோ

---

## பெண் பார்க்கத் தூதனுப்புதல்

### 180. இராகம்-உசேனி, ஆதிதாளம்.

பல்லவி

நல்லபெண்ணைப்பார்நீ தூதா
நல்லபெண்ணைப்பார்நீ தூதா நல்

அநுபல்லவி

அல்லடாகேள்இந்தப் பூமியின்மேலே
ஆயிரங்காலத்துப் பயிராகையாலே நல்

சரணங்கள்

1 அதிகபேச்சுக்காரி பெரும்வம்பி
ஆயிரமானாலும் அவள்வேண்டாந்தம்பி
நிதம்நிதம்ஊரெல்லாம் நீட்டுவாள்கம்பி
நிச்சயம் அவள்ஆகாள் நீஎன்சொல்நம்பி நல்ல

2 எழுத்துவாசம் அறியாதவள்மட்டி
ஏதும்அறியாள் அவள் சுரண்டுவாள்சட்டி
கழுத்திலே அவளுக்கு தாலியைக்கட்டி
காரியமில்லை அது காசுக்குநஷ்டி நல்ல

3 அழகுங்குணமுள்ளவள் நல்லஜோடு
அழகில்லையாயினும குணத்தையேதேடு
பழகுநற்குணமில்லா அழகியின்வீடு
பாம்புபுலிகரடி வாழ்ந்திடுங்காடு நல்ல

4 வீட்டுவேலைதெரி யாதவள் வேம்பு
மினுக்கும் அவள் குலுக்குமே வெறும்வீம்பு
கூட்டுநற்குணமில்லாக் கொடியவள்பாம்பு
குலத்தைகெடுக்கவந்த கோடாலிக்காம்பு நல்ல

5 நகைகள்தரித்துமஞ்சள் வாடைகள்பூசி
நாடெங்குந்தெரியவே நகைத்துக்கைவீசி
சொகுசுடன்நடப்பவள் ஆயிரந்தாசி
சும்மாவந்தாலும் அவள்வேண்டாம் சீச்சீ நல்ல

6 தேவதாபத்தி இல்லாதவள்கள்ளி
திருட்டுக்கும்புரட்டுக்கும் அவள்ஒருபள்ளி
தாவில்புருஷன்குடிக்கவள் பெருங்கொள்ளி
சனியனைவிலைக்கு வாங்காமல்நீதள்ளி நல்ல

7 உடமைகளுடன்பணங் காசின்மேல்இச்சை
உள்ளவள்சண்டைக்குக் கட்டுவாள்கச்சை
இடைவிடாமல் கெடுமே என்லச்சை
இவளைக்கொள்ளுவதிலும் எடுக்கலாம்பிச்சை நல்ல

8 சந்ததங்கணவன்மேல் ஒழியாப்பத்தி
சாந்தபொறுமைதயை தானம்நற்புத்தி
எந்தவேளையும்உடல் ஆத்துமசுத்தி
இல்லாதவள்அவள் கழுத்துக்குக்கத்தி நல்ல

9 நல்லவள்ஏழையானாலுந் தட்டாதே
நானூறுபோனாலும நீபின்னிடாதே
பொல்லாதவள்கையில் காட்டிக்கொடாதே
புலியைக்கொண்டுவந்தெனைத் தெருவிலிடாதே நல்ல

10 சகலகாரியமுந் தெரிந்தவள்சிலாக்கியம்
தரித்திர திசையிலும் அவள்பெரும்பாக்கியம்
இகபரமிரண்டுக்கும் அவளேயோக்கியம்
என்றுசொன்னான் வேதநாயகன்வாக்கியம் நல்ல

## தூதன் பெண் பார்த்து வந்து சொல்லல்

181. இராகம்-சௌராஷ்டிரம்; அடதாளசாப்பு.

பல்லவி

பஞ்சவர்னக்கிளிபோல் ஒருபெண்ணை நான்
பார்த்துவந்தேன் சாமி பஞ்ச

அநுபல்லவி

கொஞ்சமுஞ்சந்தேகமில்லாமலே அந்தக்
கோலமயிலைநீர் கொள்ளும்
அநுகூலம்வந்ததென்று துள்ளும் நல்ல
காலம்கவலையைத்தள்ளும் பஞ்ச

சரணங்கள்

1 பூரணசந்திரன்போலும் முகத்திற்குப்
பூமியிலுண்டோசமானம் தெய்வப்
பூவையர்சுந்தரம்வேண்டில் அவளிடம்
போய்வாங்கவேண்டுமாதானம அந்த
நாரிகண்வாய்செவி மூக்குக்குவமையை
நாட்டுவதுமதியீனம் அவள்
நடையழகுக்கும் சடையழகுக்குமே
நான்என்னசொல்வேன் உபமானம்அந்த
மானின்சொல்லே தேவதானம்இடை
தானுண்டென் பதனுமானம் நாறும்
மீனங்கண்ணெனில் அவமானம் பஞ்ச

2 பாக்கியவதிஅவள் பக்கத்திலிருந்தாலும்
பாவம்எல்லாம் பறந்தோடும் அவள்
பால்வடியும்முகம் பார்த்தாலும் போதும்சௌ
பாக்கியம்வந்து விளையாடும் திரு
வாக்கால்அவள்மழை பெய்யென்றால்பெய்யுமே
வர்ணிக்கயாராலே கூடும்கிட்டி
வந்ததுமக்குத் துரந்தரயோகம
வருத்தத்தைநீர் தள்ளிப்போடும்-இனிக்
கருத்தில்அவளையே நாடும்-மிகு
திருத்தமாகக்கவி பாடும்-நல்ல
பொருத்தம் ஆனந்தக்கூத்தாடும் பஞ்ச

3 வெள்ளியும்தங்கமும் அள்ளிக்கொடுத்தாலும்
வேறொருவர்முகம் பாராள்நல்ல
மேன்மைதுரைமகள் ஆனாலும்வீட்டு
வேலைக்குப்பின்னிட்டுச் சேராள்நிதம்
தள்ளிநீர்வைதடித்தாலும் கைநோகுமே
சாமியென்றுதொழுஞ் சீராள்பெற்ற
தாய்தகப்பன் அழைத்தாலும் உம்மைவிட்டுச்
சற்றும்பிரிந்திடநேராள் பழு
தற்றநவமணிநேராள் நாளும்
குற்றமுள்ளோர் சபைசேராள் செய்த
நற்றவத்தால் அன்றிவாராள் பஞ்ச

4 காரியம்பார்ப்பவள் கணக்கு எழுதுவள்
காய்கறியாக்கவும் கெட்டி அவள்
கைபட்டால்வேம்புங் கரும்பல்லவோருசி
கண்டுநீர்மண்டுவீர்சட்டி அவள்
ஓயாவிருந்துவந்தாலும் சலியாமல்
உண்ணச்சொல்வாள் அன்னங்கொட்டி அந்த
வண்ணக்குயிலைநீர் கிட்டி இரு
கண்ணிற்கண்டாற்படும் திட்டி-துரை
பெண்ணைக்கொள்ள என்ன அட்டி பஞ்ச

5 சிந்தாமல்மங்காமல் வீட்டுப்பொருள்களை
சீவன்போல்காக்கும் நிர்வாகிதினம்
செலவைக்குறைத்து வரும்படியில்மிச்சம்
சேர்த்துவைக்குமதி யூகிநிதம்
கந்தம்உறவேதன் வீட்டையுந்தன்னையும்
கனசுத்தம்செய் நாகரீகி காணும்
கனவில்நனவில் எப்போதும் தெய்வத்தை
கணவனைத்தியானிக்கும் ஸ்நேகி நகை
பணம்விரும்பாத விவேகி சாந்த
குணமுடையகன தியாகி நல்ல
உணர்வுடைய உபயோகி பஞ்ச

6 ஆபத்துவேளையில் அறிவுசொல்மந்திரி
அரும்பிணிக்கவளேசஞ்சீவி துன்பம்
அணுகும்போதாறுதல் தரித்திரகாலத்தில்
அருநிதியாய் அந்தத்தேவி உம்மைப்
பாபத்தில்வீழாமல் போதிக்கும்சற்குரு

பாடவும்வல்லமேதாவி தெய்வ
பத்திநற்புத்தி இரக்கம்பொறுமை
பரவியசற்குணவாவி கொள்ளும்
ஒருவர்க்கேஅவள் ஆவிமற்றப்
புருஷருக்கவள்வசநாவி அவள்
பெருமைக்கோர்குறை சொல்வோன்பாவி பஞ்ச

7 சங்கீதம்பாடியும் இங்கிதம்பேசியும்
தாள்பிடித்தும்துயர் தீர்ப்பாள்-நாளும்
தன்வேலைக்காரர்பலர் இருந்தாலும்
சகலமும்தன்கண்ணுற் பார்ப்பாள் வீட்டில்
அங்கும்இருப்பாள் பின்யிங்குமிருப்பாள் உம்
அண்டையிலும்கட்டி காப்பாள் உமக்
கற்பவருத்தம் இல்லாமல் கவலைகள்
அத்தனையும்தலை ஏற்பாள் திருச்
சித்தமென்னவென்று கேட்பாள்மொழிப்
புத்தமுதைச்செவி வார்ப்பாள்-உம்மை
உத்தமமார்க்கத்தில் சேர்ப்பாள் பஞ்ச

8 நீர்மகிழ்ந்தால் அவள்தான் மகிழ்வாள்துன்பம்
நீர்கொள்ளில்அவட்கும் விசாரம் அன்னம்
நீர்உண்ணில் அவள்பசிதீரும் இருவருக்கும்
நிச்சயம்ஏக சரீரம்இந்த
ஊரில்நீர் இல்லாதபோதுறங்காள் அன்னம்
உண்ணாள்பண்ணாள் அலங்காரம்நீர்
ஊமைகுருடராலும் செய்வாள்-உமக்
குரிமையாய்ராஜோபசாரம் ஆனால்
பரமாதருடன்நீர் சஞ்சாரம்செயில்
வரும்அவளுடைய நிஷ்டூரம் அதற்
கொருநாளும் இலைப்பரிகாரம் பஞ்ச

9 பாவம்நீர்செய்யச்சொன்னாலும் செய்யாள்வேறே
பண்ணாள்உமக்கபசாரமபெறும்
பாலர்க்குநல்வழி காட்டித்தினமும்
படிப்பிப்பாள்வேதாந்த சாரம்வந்து
தாவும்எளியவர்க்கில்லை என்னுமலே
தாய்போல்செய்வாள் உபகாரம்செல்வம்
தாழினும்ஏழைக்குத்தான் உண்ணும் அன்னத்தைத்
தந்துமெலிவாள் சரீரம் தம
யந்தியுமேநமஸ் காரம்செய்யும்

சுந்தரிசீலம்விஸ்தாரம் உமக்
கந்தமின்னே நல்லதாரம் பஞ்ச

10 பாயும்படுக்கையுமாக நோய்கொண்டாலும்
பர்த்தாவேலைக்குப்பின் வாங்காள்உந்தன்
பக்ஷம்ஒன்றேகோடி லக்ஷம்என்றெண்ணிப்
பலதுன்பம்வந்தாலும் எங்கள் பெற்ற
தாயும்பிதாவும்நிகர்வேத நாயகன்
தாமரைப்பாதத்தைநீங்கள்நல்ல
சத்திய ரந்தரை புத்தியின்மந்திரி
சட்டக்குடித்தனயபாங்காள் வேலை
முட்டிமுடியுமுன் தூங்காள் என்றும்
கெட்டவள்என்றுபேர் வாங்காள்உமக்
கிஷ்டமுள்ளான்பழி ஓங்காள் பஞ்ச

---

## தலைவியிடத்து வைக்கவேண்டிய நேசத்தைப்பற்றி தலைவன் கூறுதல்

182. இராகம்-சௌராஷ்டிரம், அடதாளம்-சாப்பு.

பல்லவி

பத்தினிபோல்நமக் கித்தரைமீதினில்
உற்றவர்யார் மனமே பத்தினி

அநுபல்லவி

சத்தியமாகவே தாய்ப்பின்தாரம்
தாரத்தினால்அல்லவோ சமுசாரம் பத்தினி

சரணங்கள்

1 இல்லாளும்நாமுமே ஏகசரீரம
என்பதுவேமனு நீதியின்சாரம்
நல்லவளேநம் மனைக்கலங்காரம்
நாட்டிலேமற்ற உறவெல்லாந்தூரம் பத்தினி

2 கைப்பொருள்இல்லா விட்டாலும்நற்பாரி
கைவசமானால் அவளேபொன்மாரி
எப்பொருளும் இருந்தாலும்ஓர்நாரி
இல்லாதவீடு தண்ணீரில்லாஏரி பத்தினி

3 பெண்ணென்றாற்பேயும் இரங்கும்என்பாரே
பெண்ணை அடித்தால் வருங்கெட்டபேரே
கண்ணை இமைகாப்பது போல்நேரே
காதலிதன்னைக் காப்பாற்றுதல்சீரே பத்தினி

4 பந்துஜனமெல்லாம் வீண்பரிவாரம்
பாரில்அவரால் உண்டோஉபகாரம்
அந்தரந்தன்னில் உதவுவாள்தாரம்
ஆபத்துவேளைக் கவளேஆதாரம் பத்தினி

5 தாய்தந்தையாரையும் விட்டுவந்தாளே
சம்சாரபாரத்தைத் தாங்கிநைந்தாளே
தோய்சூலபிரசனந் தன்னில் நொந்தாளே
துன்பத்தைத்தான்கொண்டு சுகத்தைத்தந்தாளே பத்தினி

## தலைவனுடைய மேன்மையைத் தலைவி தோழிக்குக் கூறுதல்

183. இராகம்-பிலகிரி, திரிபுடைதாளம்.

பல்லவி

நாயகர்பக்ஷமடி எனக்கது
ஆயிரலக்ஷமடி நாயகர்

அநுபல்லவி

நீயறிவாயே அவர்குணமானே
நாயறியுமோ ஒருசந்திப்பானை நாயகர்

சரணங்கள்

1 பத்தாவின்பக்ஷம் உள்ளாள்மகராசி
பத்தாவின்பக்ஷம் இல்லாள்பரதேசி
வித்தாரமாகத் திரவியராசி
மென்மேலிருந்தும் பலனென்ன சீச்சீ நாயகர்

2 ஏழையானாலும் எனக்கெஜமானே
என்றும்அடிமை அவருக்குநானே
கூழைஉண்டாலும் எனக்கதுதேனே
கொண்டார்இருக்கக் குறையென்னமானே நாயகர்

3 மாலைபொன்னோலைகள் வண்ணமுத்தாரம்
மற்றநகைகளெல்லாம் பெரும்பாரம்
சீலமுங்கற்புமே தேகசிங்காரம்
திவ்யமாணிக்கத்துக்கேன் அலங்காரம் நாயகர்

4 ஆயிரந்துன்பங்கள் வந்தாலும்நானே
ஐயர்கிருபை உண்டானால்அஞ்சேனே
பாயைகப்பிடித்தவன் என்னசெய்வானே
பாணைபிடித்தவள் பாக்கியந்தானே நாயகர்

## துன்பஞ்செய்தாலும் தலைவனே கதியென்று தலைவி தோழிக்குச் சொல்வது

### 184. இராகம்-சாவேரி, ஆதிதாளம்.

பல்லவி

அடித்தாலும்வைதாலும் அவரே துணையல்லாமல்
ஆர் துணையடிமானே அடி

அநுபல்லவி

மடித்தாலும் அவருடன் வாய்மதமிஞ்சலாமோ
வானத்தின்கீழிருந்து மழையிடிக்கஞ்சலாமோ அடி

சரணங்கள்

1 குற்றங்குறைகள்கண்டால் கொண்டவர்பொறுப்பாரோ
குணமாகநாம்நடந்தால் கோபித்துவெறுப்பாரோ
இன்றைக்குசொல்வோரெல்லாம் என்கடன்இறுப்பாரோ
இழவுகருவந்தவரெல்லாந் தாலியறுப்பாரோ அடி

2 அடிக்குமஒருகை அவரணைப்பதும்ஒருகையே
அழுதலும்பிள்ளை அவள்பெறவேண்டுமெய்யே
இடிக்குங்கணவருடன் எதிர்த்தால்வாழ்வதுபொய்யே
எரிகிறநெருப்பிலே இடலாமோயின்னுமசெய்யே அடி

3 என்னஅவர்சொன்னாலும் எதிர்மொழிவிள்ளலாமோ
எரிகிறஅக்கினிதன்னை இருகையால்அள்ளலாமோ
சின்னமதியாலேநம் செல்வத்தைத்தள்ளலாமோ
தின்கிறசோற்றில் மண்போட்டுகொள்ளலாமோ அடி

5 நன்மையாகநடந்தால் நமக்குண்டாமவர்நேயம்
நல்லஉத்தமிக்கெந்த நாளுந்தெய்வசகாயம்
செல்வம்உள்ளமட்டுக்குஞ் சேதமோஓர்அபாயம்
சீவனும்உடலும்போற் சேர்ந்துவாழ்வதுபாயம் அடி

5 ஆனைகட்டச்சங்கிலிதான் எடுத்துக்கொடுக்கும்
அப்படிபோலநமது வாயேநம்மைக்கெடுக்கும்
ஞாயமாகநடந்தால்நன்மை எல்லாம்அடுக்கும்
நல்லவள்தெய்வமென்று நாடெல்லாம்கையெடுக்கும் அடி

6 மதயானைமேலெடுத் தெரியலாமோமண்ணுண்டை
மணவாளர்இடத்திலே வளர்க்கலாமோசண்டை
முதலாளிஇல்லாவிட்டால் மூத்தவளேநம்அண்டை
மொட்டைத்தலையிலே முடிக்கலாமோகொண்டை அடி

---

## தலைவன் செய் நன்மையைத் தலைவி கூறல்

185. இராகம்-அசாவேரி, திரிபுடைதாளம்.

பல்லவி

எத்தனைஆனாலும் பத்தாவைபோல்எனக்
கிசைந்தவர் ஆரடி எத்தனை

அநுபல்லவி

வித்தாரக்கள்ளிநீ வீண்வம்புபடியாதே
ஒத்துவாழாக்குடி ஒருநாளும்விடியாதே எத்தனை

சரணங்கள்

1 மாணிக்கச்சிலைபோலப் பெண்கள்பலரிருக்க
மானேஅவரையெல்லாம் விட்டாரே
மைத்துனியேசொந்தப் பத்தினியென்றென்னை
மாலையிட்டவுடன் பட்டாரே
காணிக்கையாகநான் புத்தியறியுமட்டும்
காத்திருந்தென்னைக்கை தொட்டாரே
கால்முதல்தலைமட்டும் பொன்காய்த்தமரம்போலக்
கனத்தநகைகளெல்லாம் இட்டாரே
ஆணிப்பொன்னேஅறியேன் நான்ஒருகஷ்டம்
அத்தானால்அல்லவோ அவனுக்கித்தனை அதிர்ஷ்டம்
பாணிக்கிரகணஞ்செய் தவருடனேஇஷ்டம்
பாராட்டினால்நமக் குண்டோஒருநஷ்டம் எத்தனை

2 தங்கக்கிண்ணியில்சோறும் வெள்ளிக்கிண்ணியில்பாலும்
சட்டம்சட்டமாக உண்டேனே
தாதியர்கால்பிடிக்க மேல்மாடியில்நல்ல
சப்பிரமஞ்சந்துயில் கொண்டேனே

அங்கமாய்நான்ஏற வண்டிபல்லக்குகள்
அற்பவருத்தமும் அண்டேனே
அன்னத்துக்கில்லாமல் என்னோடொத்தபெண்கள்
அழுதும்வலியன்குத்தக் கண்டேனே
மங்களமாகவே சிங்காரமனைக்கட்டு
வகைவகையாகஉடுக்க ஜெகமோகனப்பட்டு
எங்கும்பஞ்சமானாலும் எனக்குண்டோஒருதட்டு
இத்தனைபாக்கியம் எல்லாம்அவரைத்தொட்டு எத்தனை

3 கோபம்உள்ள இடத்தில் குணமும்இருக்கும்அவர்
கோபித்தோர்வார்த்தை சொல்லலாகாதா
கொண்டவர்இடத்திலே திண்டுமிண்டுஞ்செய்தால்
கோதையே குடிகெட்டுப்போகாதா
சோபனஞ்செய்தெனைக் காத்தவர்மேலொரு
தோஷஞ்சொன்னாலும்வாய் வேகாதா
சூரியனைக்கண்டபனிபோல் அவர்முன்னென்
துன்பமெல்லாம்பறந் தேகாதா
ஆபத்தைத்தீர்ப்பவர் அவர்பெருநிதியடி
அடித்தாலுமணைத்தாலும் அவரேகதியடி
பாபபுண்யம்பார தவள்ளிதியடி
பாலுந்தேனும்போல வாழ்வதுமதியடி எத்தனை

4 ஏரியைகோபித்து கால்கழுவாவிட்டால்
ஏரிக்குண்டோநஷ்டம் ஏதடி
எசமானைக்கோபித்தால் எனக்கேநஷ்டம் அல்லால்
எசமானுக்குநஷ்டம் ஏதடி
சூரியனைகல்லால் அடிப்பதுபோலத்
துணைவரைபகைத்தல் தகாதடி
துள்ளினமாடோ பொதிசுமக்கும்கெட்ட
துஷ்டைகளுக்கென்றுந் தீதடி
நீருள்ளமட்டுக்கும் மீனுக்குக்கொண்டாட்டம்
நீர்வற்றினால்பின்பு நிற்குமோமீன்கூட்டம்
பாவையர்க்குப்பத்தா வாலே ஆட்டபாட்டம்
பத்தாவுக்குப்பின்பு சோற்றுக்குத்திண்டாட்டம் எத்தனை

---

## மாமி நாத்தி முதலானவர்களின் கொடுமையைப்பற்றி ஒரு ஸ்திரீ முறையிடுதல்

186. இராகம்-கல்யாணி, ஆதிதாளம்.

பல்லவி

ஊருக்கெல்லாம் ஏச்சா சகியே இது
ஆருக்கும் ஒருபேச்சா (ஊருக்)

அநுபல்லவி

பாருக்குள்ளேஎந்தன் கணவரும்நானுமே
பாசமாய்விசு வாசமாய் அதி
நேசமாய்சக வாசஞ்செய்வது (ஊருக்)

சரணங்கள்

1 பத்தாவுடனேநான் கூடிச்சல்லாபம்
பண்ணிஞல்மாமியார்க் கென்னடிகோபம்
ஒத்திருந்தால்அவட் கேன்மனஸ்தாபம்
ஓகோசகியே இதுவென்னபாபம்
ஓதடி இது சூதடி பெரும்
வாதடிகன தீதடி இது (ஊருக்)

2 நானும்அவரும்பேசில் நாத்திக்கேன்சலிப்பு
நாங்கள்பிணங்கிக்கொண்டால் அவட்கென்னகெலிப்பு
ஆனுலும்எனைக்கண்டால் அவளுக்கேன்வலிப்பு
ஐயையோஊரெங்கும் இதுவேஓமலிப்பு
அன்னமேயடி சொன்னமேமொழி
பன்னவேதடை இன்னம்வதடி (ஊருக்)

3 கலியாணஞ்செய்தும் உண்டோசன்னியாசம்
கடனும்வாங்கியும் ஏன்உபவாசம்
பலமாகவேகங்கைக் கரையிலேவாசம்
பண்ணியுங்களிப்பதற் கென்னபிரயாசம்
பாபமோயிது சாபமோ தெய்வ
கோபமோபரி தாபமோதினம் (ஊருக்)

4 சட்டமாய்ப்பேசாவிட்டால் வாழ்க்கைப்பட்டு
சபலம்என்ன இது பிரமாணக்கட்டு
கட்டளையாகக் கலத்தினிற்சோறிட்டுக்
கையைப்பிடிப்பது போல்என்னதட்டு

கந்தரோடதி சாந்தமாகவ
காந்தமாகவே சேர்ந்துவாழ்வது ஊருக்

5 பிரபலமாக முகூர்த்தமுங்கேலிப்
பேசாதிருக்கவோ கட்டினார்தாலி
அரசர்க்குமெனக்கும் உண்டோநடுவேலி
ஆனாலுந்தோழி இதுவென்னகேலி
அக்கரைப்படு சக்களத்திகள்
அக்களிப்பொடு கெக்கலிப்பட ஊருக்

## கணவனைப் பகைத்த ஸ்திரீயை அவள் தாய் கண்டித்தல்

187. இராகம்-காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

மார்க்கமல்லடிமானே கணவருடன்
மூர்க்கஞ்செய்வதுதானே மா

அநுபல்லவி

தீர்க்கமாய்ச்சொல்லச்சொல்லத் தினம்வாதுசெய்யலாமோ
ஜென்மக்குணத்தைத்செருப்பால் அடித்தாலும்போமோ மா

சரணங்கள்

1 அரும்பிழைசெய்துபத்தா அன்பைமுறிக்கலாமோ
அணைகடந்தால்வெள்ளத்தை யாருமறிக்கலாமோ
கரும்புருசியென்று வேரோடுபரிக்கலாமோ
கண்ணானவரைப்புண் ணாக்கிப்பிரிக்கலாமோ மா

2 தலைவன்முகங்கோணினால் சகலவாழ்வுமேகோணும்
சபையிலேயுனைச்சேர்க்கச் சகலர்மனமுமகோணும்
தொல்லைவிசாரமெல்லாஞ் சூழ்ந்துவந்துனைக்காணும்
சுவரைவைத்துக்கொண்டல்லோ சித்திரமெழுதவேணும் மா

3 தணலென்பதேஇல்லாமல் தானேஉண்டாகுமோபுகை
சரியாகநீநடந்தால் தலைவற்குண்டாகுமோபகை
குணபூஷணிகட்கு வேண்டுமோவேறுவகை
குப்பையிற்கிடந்தாலும் மாணிக்கம்பெருந்தொகை மா

4 கணவனைப்பகைத்தவள் கரையேறுவதேதடி
கடல்கொதித்தால்விளாவத் தண்ணீர்எங்கேஓதடி

உணர்வாகநீநடந்தால் உண்டோஒருதீதடி
உறுதிநான்சொல்லச்சொல்ல உனக்கேன் இன்னம்வாதடி மா

## தங்களுக்குப் படிப்பிக்கும்படி ஸ்திரீகள் புருஷர்களை வேண்டுதல்

188. இராகம்-நாதநாமக்கிரியை, ஆதிதாளம்.

பல்லவி

வித்தையைப்படிப்பியுங்கள் தயைசெய்து
வித்தையைப்படிப்பியுங்கள் வித்

அநுபல்லவி

உத்தமவான்களே சத்தியபூமான்களே
உங்கட்குக்கண்களான பெண்களாமெங்களுக்கு வித்

சரணங்கள்

1 திருத்தமாவேலைகள் எல்லாம்முடிப்போம் வேலை
தீர்ந்தபின்புபுஸ்தகங்களே படிப்போம்
வருத்தம்நீர்படக்கண்டால் மனம் துடிப்போம் கீத
வண்ணங்கள்பாடிக்கொண்டு கால்பிடிப்போம்பாட

மாட்டோமோ வீணை
மீட்டோமோ நயம்
காட்டோமோ சுகம்
ஊட்டோமோ நல்ல வித்

2 வரவுசெலவின்கணக் கெழுதிவைப்போம் பல
வகைவகைஉடுப்புகள் உமக்குத்தைப்போம்
பரவும்பலதொழில்நீர் பண்ணஒப்போம் நல்ல
பக்ஷணம்கறிகளும் செய்யத்தப்போம் நாங்கள்

படியோமோ இருள்
விடியோமோ மருள்
முடியோமோ அருள்
பிடியோமோ நல்ல வித்

3 வாணியும்நீரும்ஒரு கோத்திரமா அவள்
வரபிரசாதமஉமக்கு மாத்திரமா
வீணில்அவட்கெங்கள்மேல் க்ஷாத்திரமா நாங்கள்
மெய்ஞ்ஞானமார்க்கத்துக் கபாத்திரமா உம்மை

வெல்லோமோ கல்வி
கல்லோமோ கவி
சொல்லோமோ புத்தி
இல்லோமோ நல்ல வித்

4 கொஞ்சம்நீர்கோபஞ்செய்யில அஞ்சிடுவோம் எங்கள்
குற்றம்பொறுக்கச்சொல்லிக் கெஞ்சிடுவோம்
வஞ்சமறவுமைநமபிடுவோம் உம்மேல்
சாகித்தியம்செய்துதினம் கும்பிடுவோம் நாங்கள்

தாழ்ந்தோமே துயர்
ஆழ்ந்தோமே உம்மைச்
சூழ்ந்தோமே காலில்
வீழ்ந்தோமே நல்ல வித்

5 அடித்தாலும்இகழ்ந்தாலும் கதிநீரே உம்மை
அன்றிஎங்களுக்கினித் துணையாரே
படித்தால்பிழைத்துப்போவோம் பெரியோரே இந்தப்
பஞ்சைகள்முகம்பாரும் துரைமாரே உங்கள்

பதம்பூண்டோம் அபி
மதம்நீண்டோம் உங்கள்
இதம்தாண்டோம் அசங்
கதம்வேண்டோம் நல்ல வித்

6 படியாதஆண்கள் உடனேசம்
பண்ணநீர்சம்மதியீர் லவலேசம்
மடம்உறும் எங்களுடன் சகவாசம் செய்ய
மட்டும்உமக்கில்லையோ சங்கோசம் இது

மதிமோசம் வரும்
அதிஹாசம் மனப்
பதிபாசம் அற
இதிகாசம் உடன் வித்

7 வித்தையில்லாப்புருஷன் செய்கையைபாரும் இந்த
விதமல்லவோபடி யாமடவாரும்
உத்தமியையேவிரும்புவீர்நீரும் கல்வி
உணராவிட்டால்குணம் எப்படிச்சேரும் இதை

ஓரீரோ முகம்
பாரீரோ துயர்
தீரீரோ தயை
கூரீரோ நல்ல வித்

8 உத்தியோகம்தந்தாலும்ஒரு கைபார்ப்போம் தினம்
உதவிசெய் துங்கள்தொழில்களைத் தீர்ப்போம்
பத்தியாய்க்குடித்தனம் தலைஏற்போம் கல்வி
பாலர்க்குப்போதித்துநல் வழிசேர்ப்போம் எங்கள்

பதிநீரே சர்வ
நிதிநீரே தினம்
கதிநீரே கன
மதிநீரே நல்ல வித்

9 படித்தால்மிருகம்போல்நாள் கழிப்போமோ வேறு
பரபுருஷர்முகத்தில் விழிப்போமோ
அடித்தாலும்முகம்கோணிச் சுழிப்போமோ பல
உதவாதகணவரானாலும் பழிப்போமோ பல

அணிவேண்டோம் நல்ல
துணிவேண்டோம் நவ
மணிவேண்டோம் காமப்
பிணிவேண்டோம் வித்

10 இரவில்நீர்தூங்கினபின் சாம்படுப்போம் நீங்கள்
எழுமுன்எழுந்துவேலைதனைத் தொடுப்போம்
தருமவதிகள்என்று பெயர்எடுப்போம் நாங்கள்
சாந்தம்வேதநாயகனை அடுப்போம் மிகத்

தழையோமோ கல்வி
நுழையோமோ உமை
அழையோமோ ஜீவன்
பிழையோமோ நல்ல வித்

---

## இதுவும் அது

189. இராகம்-மோகனம், திரிபுடைதாளம்.

பல்லவி

கேளும்பூமான்களே கிருபைவைத்
தாளும் சீமான்களே கேளும்

அநுபல்லவி

நாளும்கதிஇல்லா எங்கள்மேல் வர்மமோ
தாளுறும்தூசிபோல் தள்ளுதல் தர்மமோ கேளும்

சரணங்கள்

1 காலைக்கும்மாலைக்கும் மூலைக்குள்எங்களை
ஆலைக்கரும்புபோல் தேய்த்தீர் பாக
சாலைக்கும்மன்மத லீலைக்கும்வினை
வேளைக்கும்எங்களை மாய்த்தீர்
மூலக்கல்விநாங்கள் வாசித்தால்ஆபத்தோ
மூடப்பெண்கொள்வீர் உமக்கும்பெரும்பித்தோ
கலைக்கிரந்தங்கள் உங்கள்பாட்டன்சொத்தோ
உமக்கென்னகாணும் தலைமேல்தலைபத்தோ கேளும்

2 ஆதியிற்பெண்ணாலே மேதினியோர்கள்உண்
டானவகைமறந்தீரோ பெண்
சாதிபுருஷனில் பாதிஎன்றமனு
நீதியையுந் துறந்தீரோ
பாதிஉடலைப் பறக்கவிடலாமோ
பாவபுண்ணியந்தெரி யாமல்கெடலாமோ
நீதிஇல்லாதெம்மை நிந்தித்திடலாமோ
நிந்தித்துப்பின்எங்களை நீர்தொடலாமோ கேளும்

3 நாரியைஒரு காரியம்இல்லா
நடைப்பிணமென் றெண்ணினீரே தேவர்
ஊரில்பெண்கள்கொண்ட சீரினைஆகிலும்
உற்றுப்பாரும் ஐயர்மாரே
பாரிதனைநாவில் வைத்தான் பிதாமகன்
பாகம்சிரம்வைத்தான்சிவன் மாதவன்
மார்பில்வைத்தான் ஹரி பெண்திருடன்குகன்
மங்கைதேடிச்சந்தி வந்தான்கரிமுகன் கேளும்

4 உங்கட்குதவியாய் எங்களைத்தேவன்
உண்டாக்கியதை அறியீரோசெல்வ
மங்கைஉடன்கல்வி தங்கைமுதலானோர்
மாதர்என்று குறியீரோ

எங்களை அல்லாமல் நீங்கள் உதித்தீரோ
ஏறிஆகாயத் திருந்துகுதித்தீரோ
அங்கப்பால்உண்ணுமல் தேகம்உதித்தீரோ
அடிமையென்றெங்கள் தலையில்விதித்தீரோ கேளும்

5 போதகயீரோப்பு மாதர்களைக்கண்டு
பொங்கிப்பொறுமை கொண்டோமே என்றும்
பேதம்இல்லாஇந்தி யாதனில்நாங்கள்
பிறந்தென்னலாபம் கண்டோமே
நாதக்கல்விக்கு நகைஎந்தழுலேயே
நாங்கள்விரும்போம் நவரத்னமாலேயே
வேதநாயகன்செய் பெண்மதிமாலேயே
வேண்டினோம்தாரும் விடோம்உங்கள்காலேயே கேளும்

## மூடனை விவாகஞ் செய்யாதபடி ஒரு ஸ்திரீயைத் தடுத்தல்

190. இராகம்-புன்னுகவராளி, அடதாளம் சாப்பு.

பல்லவி

மாதேஎன்வார்த்தை தள்ளாதே அந்த
மாப்பிள்ளை தனைக்கொள்ளாதே மாதே

அநுபல்லவி

ஆதரவாகஅரவைத் தொடலாமோ
ஆழமறியாமற்காலே யிடலாமோ
போதமில்லானுக்கு வாழ்க்கைபடலாமோ
பொன்னேஒளிர் மின்னேகெடு
முன்னேமதி சொன்னேனடி மாதே

சரணங்கள்

1 பொன்னேஅவன் ஆளலழகனுனுலுமே
புத்தியில்உலக்கைகொழுந்து-வித்தை
தன்னை அறியானைக்கொள்வதைப் பார்க்கினுஞ்
சாகலாங்கிணற்றில் விழுந்து
உன்னைக்கைபாடுபடச்சொல்லித் தாக்குவான்

ஊர்மாடுமேய்க்கவே தான்தடிதூக்குவான்
பின்னையும்உன்னைத்தான் பேய்க்கோலம்ஆக்குவான்
பெண்ணே இரு கண்ணே இதை
எண்ணேமொழி பண்ணேநிகர் மாதே

2 உத்தமியேஅவன் ஞானமிருக்கின்ற
ஊரையும்பார்த்தறியானே தினஞ்
சித்தநிர்மூடரைக்கூடிக் குடித்தான்
சுகநலத்தைக் குறியானே
நித்தமும்தாசிகள் வீடுகட்கோடுவான்
நீங்காமற்சூது நிதம்விளையாடுவான்
சித்தமுனக்குப்பட்டை நாமம்போடுவான்
தேனேமடமானே திடம்
நானேசொன்னேனே யடி மாதே

3 மண்ணுக்குள்ஆணுக் கழகுபடிப்பும்
மதியுஞ்சுகுணமுந்தானே வெறுங்
கண்ணுக்கழகும்பணமும் இருந்தென்ன
காரியஞ்சொல்லடி தேனே
புண்ணியவான்ஏழை யானாலும்கொள்ளடி
பொய்யன்பணக்கார னானாலுந்தள்ளடி
வண்ணங்கொள்பெண்ணுக்காண் பஞ்சமோசிள்ளடி
மாதேஇது தீதேஇனி
வாதேசெய்யாதே யடி மாதே

---

## மைத்துனர் கலியாணத்திற்குப் பாடிய பரிகாசக் கீர்த்தனை

### 191. இராகம்-பரசு, அடதாளம் சாப்பு.

பல்லவி

மைத்துனரே இன்றுமுதல் மகாராஜர்நீரே மைத்

அநுபல்லவி

கொத்தார்குழலிளங்கள் குயிலைகொண்டீரே மைத்

சரணங்கள்

1 ஏதும்வஸ்திரங்கட்டி அறியாதஇடுப்பு
இனிஉமக்குப்பல வகைஉடுப்பு

ஓதும்புகைக்ததுண்டோ உமதடுப்பு
உள்ளத்தைநான்சொன்னால் உனக்கென்னகடுப்பு மைத்

2 சொர்னமயம்எங்கள் சுந்தரிதேகம்
தோற்குமேஉமக் கண்டங்காக்கைஅநேகம்
என்னவிதமாகவோ அடுத்ததுயோகம்
ஈடோஇதற்குத் தேவேந்திரபோகம் மைத்

3 உழவுதொழில்செய்துமக் குடம்பெல்லாஞ்சேறு
ஊற்றைக்கழுவப் பற்றுமோஒன்பதாறு
பழங்கூழுண்டஉமக்குப் பாலுடன்சோறு
பயப்படாதிரும் உமக்காயுசுநூறு மைத்

4 காதவழிநடப்பீர் காலேசாக்ஷி
காடிபல்லக்கினி உமக்குண்டோதக்ஷி
ஏதுமற்றஉமக்குப் பல்காணியாக்ஷி
இசைந்ததுஹோஹோ என்னகண்காக்ஷி மைத்

5 எருமைநுழையும்உம திருகாதின்தொள்ளை
இனிஉமக்குவச்சிரக் கடுக்கன்கொள்ளை
ஒருவகையும்இல்லாமல் உற்றீரேகள்ளை
ஊர்அதிபதிக்கிப்போ துகந்தமாப்பிள்ளை மைத்

6 சந்திரசூரியர்மழை பனிநாற்றுக்கோடை
தாங்கியஉமக்கினி நவரத்னமேடை
உந்தம்அசுத்தம் கொள்ளுமேபலகூடை
உமக்கினிப்புஷ்பஞ் சந்தனம்பன்னீர்வாடை மைத்

7 இப்போதுமக்குவாசத் தைலங்கள்கடலே
இதற்குமுன்எண்ணெய் பட்டறியாதுமுடலே
அப்படிஇருக்கஎன் வீண்தடபுடலே
ஆகாசந்தனைமறைப்பதற் குண்டோபடலே மைத்

## மைத்துனருக்குப் புத்தி போதித்தல்

192. இராகம்-இந்துஸ்தான்-காபி, ஆதிதாளம்.

பல்லவி

மைத்துனரேகேளும் நான்சொன்ன
புத்தியைக்கேளும் மைத்

அநுபல்லவி

நித்தமும்உம்முடன் நேசமே நீளும்
உத்தமிஇவளையும் உயிரென ஆளும் மைத்

சரணங்கள்

1 நன்றாயிப்பெண்ணுக்கு வாய்த்ததே அதிர்ஷ்டம்
நரிமுகத்தில்விழித்தீர் நல்லசட்டம்
இன்றுமுதல்உமக்கு விடிந்ததுகஷ்டம்
இதைமறந்தால் பயித்தியக்காரப்பட்டம் மைத்

2 சந்திரபிம்பம்இவள் முகமென்றுதேரும்
சர்வகோணலில்உமக் கிணையில்லையாரும்
சந்தேகமிருந்தால் கண்ணாடியைப்பாரும்
தலையைக்கவிழ்ந்துகொண்டு மூலையிற்சேரும் மைத்

3 அணங்கின் அழகுக்குப் பெண்களுங்கொள்வார்ஆசை
அழகிலேநீர்ஆயிரம் அமாவாசை
இணங்கியேவாழ்வதில் என்னபிரயாசை
இவளைநீர்மணஞ்செய்ய என்னசெய்தீர்பூசை மைத்

4 சுந்தரிஇவளும் நீரும்ஒருதேகம்
சுகதுக்கம்இருவருக்குமே சமபாகம்
வந்தமறுமாதரைச் சேர்வது துரோகம்
மலருமணமும்போல வாழ்வதுஸ்நேகம் மைத்

5 தெரியாமற்செய்தபிழை பொறுப்பதுநேயம்
திட்டிபெண்சாதிகளை அடிப்பதந்நியாயம்
பிரியமாய்ப்பேசித் திருத்துவதேஉபாயம்
பெண்ணென்றாற்பேயுமே செய்யும்சகாயம் மைத்

6 நயமில்லாதவார்த்தைக ளாற்பகைமூளும்
நன்மையினாற்குறைவில்லை என்னாளும்
தயையுடன்என்னைப்போற் பாரியை ஆளும்
சந்தேகமிருந்தால்உன் தமக்கையைக்கேளும் மைத்

7 இவளைப்பிரிந்தார்இவள் தாய்தந்தைமாரே
இனிமேல்தாய்தந்தை சகலமும்நீரே
அவனியில்இவள் உமதாவிக்குநேரே
அன்பில்லாவிடில் எடிப்பீர்கெட்டபேரே மைத்

8 நற்புத்திஇவள்சொன்னால் அதைச்செவிகொள்ளும்
நமக்கொருநிகரில்லை யென்றுநீர்துள்ளும்
துற்புத்திதான்சொன்னால் கேளாமல்தள்ளும்
தோஷத்தைநீக்கிநற் குணங்களை அள்ளும் மைத்

9 தந்தைதாய்குருசொன்ன படிநீர்நில்லும்
சாஸ்திரம்உணர்ந்தறி யாமையைக்கொல்லும்
அந்தமின்னூலையும் படித்திடச்சொல்லும்
அடிக்கடிசொல்லிடிற் கரையுமேகல்லும் மைத்

10 உன்னறியகடவுள் தனக்கன்புகூரும்
உத்தமவான்களையே என்றுஞ்சேரும்
இன்னந்தெரியாவிட்டால் மாயூரம்வாரும்
இசைவேநாயகன்செய் நீதிநூல்பாரும் மைத்

## சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்

முற்றிற்று.

47026

திருமகள்விலாச அச்சியந்திரசாலை, சென்னை:—1939

## ஸ்ரீமத் கம்பராமாயண வசனம் விலை ரூ 5-0

ஷை உயர்ந்த கிளேஸ் கடிதம் 2-வால்யம் ,, ,, 9-0

[இதேமாதிரி பெரிய எழுத்தில் 30-கலர் அழகிய ஆப்டோன் போட்டோ படங்க ளடங்கியது. 1064 - பக்கங்கள் கொண்டது. உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது]

"நாடியபொருள்கைகூடும் ஞானமும்புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும் வேரியங்கமலைநோக்கும்
நீடியவரக்கர்சேனை நீறுபட்டழியவாகை
சூடியசிலையிராமன் தோள்வலிகூறுவோர்க்கே" —கம்பர் வாக்கு.

ஸ்ரீ ராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம்; இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடைவிக்கும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்கல காரியங்கள் நிறைவேறும்; புத்திர பாக்கிய முண்டாகும்; பசு பால் தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி சூனியம் தீராத நோய் பூத பைசாச உபத்திரவங்கள முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷ ஜெந்துக்கள் அணுகமாட்டா. பஞ்சம் நீங்கும்; நல்ல மழைபெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்தமுண்டாகும்; இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகி யிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்தில் உணர்ந்து கொள்ளலாம்.

## பகவத்கீதை விரிவான வசனம் விலை ரூ. 2-0

[இதில் ஸ்ரீ பகவத்கீதா மான்மியமும், ஸ்ரீ - சங்கர - ராமாநுஜ - மாத்துவ பாஷ்யங்களின் குறிப்புகள் முதலியன அடங்கியுள்ளன. உயர்ந்த காலிகோ பைண்டு: ஆப்டோன் போட்டோ படங்களுடன்]

ஸ்ரீ பகவத்கீதையை வாசிப்போர்க்கு இதன் உயர்வனைத்தும் நன்கு விளங்கும். மனிதராயினோர்க்கு அஞ்ஞான இருளைப்போக்கி நல்வழிக் கடைப்பிடித்தொழுகுமாறு எல்லா தத்துவங்களையும் விளக்கிக் காட்டி, உண்மைப்பொருளை யடைதற்குரிய உபாயங்களை உபதேசிக்கும் நூல்களுள் இதுவே முதன்மை பெற்றதாகும். இங்ஙனம் இது சிறப்புடையதாயிருத்தல் பற்றியே இதற்கு ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமாநுஜர், ஸ்ரீ மாத்துவர், ஸ்ரீதரர், இராகவேந்திரர் முதலியவர்கள் பாஷ்யங்களு மியற்றி யிருக்கின்றனர். இவ்வருமை வாய்ந்த பாஷ்யங்கள் சமஸ்க்ருதத்திலிருப்பதால் அதன் கருத்துக்களை தமிழில் மொழிபெயர்த்து இந்நூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.

## ஸ்ரீமத் கந்தபுராண வசனம் — விலை ரூ. 5

உயர்ந்த கிளேஸ் கடிதம் 2-வால்யம் — ,, ,, 9

[இதே மாதிரி பெரிய எழுத்தில் அச்சிட்டு 40-அழகிய கலர் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. 1050-பக்கங்கள் கொண்டது. உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.]

*முருகப்பெருமான் திருவவதாரத்தைப்பற்றி உரைக்கும் நூல்கள் யாவற்றிலும் சிறந்தது கந்தபுராணமே ஆகும்.*

*கந்தபுராணம் செய்யுள் வடிவத்திலே இருத்தலின், அதனைப் பயிலுவோர் இலக்கண இலக்கியப் பயிற்சி உடையவராக இருந்தால் அன்றி அது மிக்க பயன் விளைவிக்க மாட்டாதாகும்.*

*அருமை வாய்ந்த கந்த புராணத்தினை முன்னரே பலர் ஒருவாறு வசனரூபமாக்கி அச்சிட்டிருப்பதில் செய்யட் காவியத்திற்கும் இதற்கும் அநேக விடங்களில் கதையும் கருதலும் மாறுபட்டிருப்பது மல்லாமல், கற்று வல்லோர்க்கும் கற்று வல்லோ ரல்லாதார்க்கும் வெறுப்பினை யுண்டாக்கத் தக்கனவாகிய நடைகளோடு சொன்னயங்களும் சிறிதும் பொருத்தமின்றி சில வழுஉக்களுடன் அச்சிடப்பட் டிருந்தமையால், அக் குறையை நீக்குவான் வேண்டி யாம் தகக வித்வான்களின் உதவியைக்கொண்டு முறைப்படுத்தப் படுவனவும், திருத்தப்படுவனவும், சேர்க்கப்படுவனவும் ஆகிய இவற்றை முறையே சேர்த்தும் முறைப்படுத்தியும் பெரிய எழுத்தில் திருத்தமாகவும், நேரிற் கண்டாறபோல விளங்கத்தக்க 40-திருவுருவப் படங்கள சேர்த்து அச்சிட்டுள்ளோம்.*

## ஸ்ரீமத் பாகவத புராண வசனம் — விலை ரூ. 5

உயர்ந்த கிளேஸ் கடிதம் 2-வால்யம் — ,, ,, 9

[இதே மாதிரி பெரிய எழுத்தில் சுத்தப் பதிப்பாக 20-அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது. உயர்ந்த காலிகோபைண்டு. 1000-பக்கங்கள் கொண்டது.]

*இது ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்விய குணாதிசயங்களையும் மகிமைகளையும் சொல்லுகிற புராண ரத்தினம். பூர்வம் நாரத முனிவர் வியாச பகவானுக்கு உபதேசித்தபடி சுகமுனிவர் பரீக்ஷித்து மகாராஜனுக்குச் சொல்லிய ஒப்பற்ற புண்ணிய சரித்திரம் இதுவேயாகும். இது பிரதம ஸ்கந்தம், துவிதியஸ்கந்தம். திரிதியஸ்கந்தம். சதுர்த்தஸ்கந்தம், பஞ்சம ஸ்கந்தம், சஷ்டமஸ்கந்தம், சப்தமஸ்கந்தம், அஷ்டமஸ்கந்தம், நவமஸ்கந்தம், தசமஸ்கந்தம், ஏகாதஸ்கந்தம், துவாதசஸ்கந்தம் என்னும் பன்னிரண்டு ஸ்கந்தங்களில் பகவானுடைய தச அவதாரங்களையும் நன்றாய் விளக்கப்பட்டிருக்கிறது. இது சர்வ வேதாந்த சாரமாயம், சகல புராணங்களுக்கும் சிரேஷ்டமாயும் விளங்குவதால் இதை ஒவ்வொருவரும் வாசித்து பகவத் பக்தி யுடையவராய் இம்மையில் இன்பமும் மறுமையில் முக்தியும் அடைவார்களென்பது பிரமாணம்.*

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.